ஸ்ரீ:

ஸ்ரீராமாநுஜன் 101

[மதராஸ் ஸத்க்ரந்த ப்ரகாசந ஸபையின் மாதவெளியீடு]

ஆசிரியர்: ஸ்ரீ காஞ்சீ. பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர்.

ஸம் 9	ஹேவிளம்பி௵ வைகாசிமீ 1957 மேமீ ൳	இதழ் 5

இராமாநுச நூற்றந்தாதி பாசுரம் 101

மயக்குமிருவினை வல்லியிற்பூண்டு * மதிமயங்கித்
துயக்கும் பிறவியில் தோன்றியவென்னை * துயரகற்றி
உயக்கொண்டு நல்குமிராமாநுச! என்றதுன்னையுன்னி
நயக்குமவர்க்கிதிழுக்கென்பர் * நல்லவரென்றுமநைந்தே.

இப்பாசுரத்தின் பொருளை அவகாஹித்துக்கொள்வது சிறிது ச்ரமஸாத்யமாதலால் ஸம்க்ஷேபமாக விவரிக்கலாகிறது. முதலில் பதவுரைகாண்மின்;

மயக்கும் இரு வினை வல்லியில் பூண்டு	அஜ்ஞானத்தை விளைக்கவல்ல புண்ய பாபரூப கருமங்களாகிற விலங்கில் அகப்பட்டுக்கொண்டு	என்றது இது	என்று தேவரீருடைய பாவநத்வத்தைப் பேசுகையாகிறவிது
மதி மயங்கி துயக்கும் பிறவியில் தோன்றிய என்னை	அறிவுகெட்டு ப்ரமிக்கச்செய்கிற ஸம்ஸாரத்திலே பிறந்த அடியேனை	உன்னை உன்னி நைந்து	தேவரீரை யநுஸந்தித்து உருகி
துயர் அகற்றி உய கொண்டு நல்கும் இராமாநுச	துக்கங்களைப்போக்கி உஜ்ஜீவிக்கச் செய்து அருள்செய்கின்ற எம்பெருமானாரே	என்றும் நயக்குமவர்க்கு	எப்போதும் ஆசையுடனிருப்பவர்களுக்கு
		இழுக்கு என்பர் நல்லவர்	அவத்யகரமென்று சொல்லுவர்கள் ஸத்துக்கள்.

இங்ஙனே பிரதிபதார்த்தம் தெரிந்தாலும் தாத்பர்யம் விளங்குவது அரிதாதலால் அதையும் தெரிவிப்போம். எம்பெருமானார்க்கு பாவநத்வமென்றும் போக்யத்வமென்றும் இரண்டு படிகளுண்டு. பாவநத்வமாவது பக்தர்களின் பாவங்களைப் போக்கிப் பரிசுத்தப்படுத்துதல். போக்யத்வமாவது எப்போதும் அநுபவிக்கக் கூடியவராயிருக்கை. இவ்விரண்டு தன்மைகளில் பாவநத்வத்திற்காட்டில் போக்யத்வமே சிறந்தது. ஏனென்றால், நம்முடைய பாவங்களைப் போக்கினாரென்கிற காரணத்தினால் நாம் அவரைப் பாவநரென்று அநுஸந்திக்கவேண்டும். இது ஒரு உபாதியைப்பற்றி வருவது; போக்யத்வத்தையநுஸந்திப்பது இப்படிப்பட்டதல்ல; அது ஸ்வரூப ப்ரயுக்தம். ஆகையாலே, பாவநத்வத்தை யநுஸந்திப்பதைவிட போக்யதையை யநுஸந்திப்பதே சிறந்ததாயிற்று. அப்படியிருக்க, இவ்வமுதனார் இப்ரபந்தத்தில் அடிக்கடி எம்பெருமானாருடைய பாவநத்வத்தை யநுஸந்தித்தார்—'என்னுடைய பாவங்களை யெல்லாம் போக்கினார்; என்னுடைய குற்றங்களையெல்லாம் நீக்கினார்' என்று அடிக்கடி சொல்லியிருக்கிறாரன்றே. அப்படி சொன்னதற்கு அநுதாபப்படுகிறார் இப்பாட்டில். போக்யதையில் ஈடுபட்டுப் பேசவேண்டியிருக்க பாவநத்வத்தில் ஈடுபட்டமை தோற்றப் பேசினது பிசகு என்று பெரியார்கள் சொல்லுவர்கள் என்றதாயிற்று.

பெரியாரின் பரமபதப்ராப்தி

ஸ்ரீமான் உ. வே. கோயில்கந்தாடை அண்ணன் (ஜடப்ரோல்) க்ருஷ்ணமாசாரியர் ஸ்வாமி வைகாசி மாதம் சுக்லநவமியில் காஞ்சீபுரத்தில் தமது திருமாளிகையில் திருநாட்டுக் கெழுந்தருளின செய்தி வருத்தத்துடன் தெரிவிக்கலாகிறது. இந்த ஸ்வாமி ஜடப்ரோல் ஸம்ஸ்தாந ராஜகுரு குடும்பத்தைச் சேர்ந்தவர். சிஷ்யர்களுக்கு ஸம்ப்ரதாய க்ரந்தப்ரவசனம் செய்யவல்ல வாக்மி. வயோதிகர். இவருடைய இரு திருக்குமாரர்களும் இவருடைய ஸ்தானத்தைப் பூர்த்தி செய்ய வல்லவராகவேணுமென்று ஆசாஸிக்கிறோம். ... (*)

வர்த்தமாந ஸம்வத்ஸரநாமம்.

நிகழும் ஸம்வத்ஸரத்தை ஹேவிளம்பி வருஷமென்று பெரும்பாலும் வழங்கிவருகிறார்கள். நமது நாட்டுப் பஞ்சாங்கங்களிலும் இவ்வண்ணமாகவே பதிப்பித்திருக்கிறார்கள். ஆனால், ஹேவிளம்பி யென்பது பிசகு என்றும், ஹேமலம்ப வருஷமென்பதே ஸாது வென்றும் பலர் கூறுகிறார்கள். அப்படியும் பல பஞ்சாங்கங்களிற் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. ஹேமலம்பமென்பதுதான் ஸாதுவென்று சொல்லவேண்டியதாகிறது. நாரத மஹர்ஷிக்கு அறுபது புத்திரர்கள் ஜனித்ததாகவும், அவர்களுக்கு இடப்பட்டிருந்த பெயர்களே வருஷங்களுக்குப்பெயராக வ்யவஹரிக்கப்பட்டு வருகின்றனவென்றும் பெரியார்சொல்லக் கேட்டிருக்கிறோம். ப்ரபவ விபவாதி நாமங்கள் ஸம்ஸ்க்ருத ச்லோகரூபேண படிக்கப்பட்டிருப்பதையும் பார்த்திருக்கிறோம். அதன்படி பார்த்தால் தமிழ்நாட்டு வியவஹாரங்களில் சில விபர்யயங்கள் நேர்ந்திருக்கின்றனவென்றே சொல்லவேண்டியதாகிறது. ஆனாலும் ஸாங்கேதிக வ்யவஹாரமானவிதில் தேசபத்ததியை விடமுடியாததலால் இதில் திருத்தம் அவசியமற்றதெனறு விடுப்பது நலம். .... (*)

ஸ்ரீராமாநுஜன் சந்தாசெலுத்தியவர்களின் பெயர்கள்.

65. V. கோவிந்தய்யங்கார் c/o Grindlay & Co., கல்கத்தா.
66. M. S. கோவிந்தமூர்த்தி, தேவகோட்டை.
67. T. V. ஸ்ரீனிவாஸாசாரியர், அட்வொகேட், ஈரோடு.
68. ஆத்தான் பெரியதிருவடி ஐயங்கார், ஆழ்வார்திருநகரி.
69. S. ஸ்ரீனிவாஸய்யங்கார், பரமகுடி.
70. V. சௌரிராஜய்யங்கார், (பென்ஷனர்) கபிஸ்தலம்.
71. K. V. ராஜகோபாலய்யங்கார், தி. நகர் மதராஸ்.
72. R. சௌரிராஜய்யங்கார், கும்பகோணம்.
73. பேரநாயுடு, கோயமுத்தூர்.
74. T. R. சடகோபன், பல்லாவரம்.

ஸ்ரீ ரஸ்து.

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்.

ஆழ்வாரெம்பெருமானார்ஜீயர் திருவடிகளே சரணம்.

அங்கண்மா ஞாலத்தமுது.

(ஸ்ரீகாஞ்சீ. P. B. அண்ணங்கராசாரியருடைய 420-ஆம் நூல்)

—முன்னுரை—

ஆரியர்காள்!, பூதத்தாழ்வார் தம்முடைய திருவந்தாதியில் (பா 84ல்) **அங்கண்மாஞாலத்தமுது** என்று ஈற்றடியமைத்தார். இந்த வாக்கியம் வெகு விலக்ஷணமாகத் தோன்றியதனால் அங்கண்மாஞாலத்தமுதென்றே பெயரிட்டு ஒரு நூல் இயற்ற வேணுமென்று ஆசை கிளர்ந்தது. உலகில் பஞ்சாம்ருதமென்று நாம் அருந்துவதுண்டாதலால் இதுவும் பஞ்சாம்ருதமாகவே அமைக்கப்படுகிறது. இதில் ஐந்து பரிச்சேதங்கள்; ஒவ்வொரு பரிச்சேதமும் ஒவ்வோர் அமுத வெள்ளமாகும். உலகில் பாமரர்கள் எப்படிப்பட்டவர்களையும் பரிபவப்படுத்த முன்வருவது ஸஹஜமாதலால் அப்படிப்பட்ட ஸந்தர்ப்பங்களில் மஹான்களுக்கு இந்த பஞ்சாம்ருத ஸேவை பேரின்பமளிக்கும்.

நன்றாகக் காய்த்துப் பழுத்துத் தழைத்திருக்கின்ற தேன்மாமரத்தின் மீது கல்லையோ தடியையோ விட்டெறிந்தால் அதனால் அந்த மரத்திற்குச் சீற்றமுண்டாகிறதா? ஸந்தோஷமுண்டாகிறதா? என்பதை நாம் தெரிந்து கொள்ள முடிகிறதில்லை. ஆனால் கல்லடியோ தடியடியோ பட்டவுடனே அந்தமரம் செய்யும் செயலை மட்டும் நாம் கண்ணாரக் கண்டு வருகிறோம். என்ன காண்கிறோம்? அந்த மரம் தன்னிடத்திலுள்ள சிறந்த கனிகளை வீசியெறிந்து மஹோபகாரம் செய்வதைக் காண்கிறோம். இதற்கு மாறான மற்றொரு ஸம்பவத்தையும் பாருங்கள்; நாய் நரி முதலான சில ஹேயமான ஜந்துக்களுள்ளன. அவற்றின் மீது ஒருவர் கல்லையோ தடியையோ விட்டெறிந்தால் உடனே அவை என்ன செய்கின்றன. பகவான் அந்த ஜந்துக்களிடத்திலே சிறந்தபொருளாக எதையும் படைத்திராமையாலே கர்ணகடோரமான சப்தங்களைச் செய்து அனர்த்தத்தை விளைப்பது தவிர வேறொன்றும் அந்த ஜந்துக்களாலாகிறதில்லை.

முதலில் தெரிவித்த மாமரத்தையே மறுபடியு மெடுத்துக் கொள்வோம்; காய்கனி எதுவு மில்லாத ஒரு மொட்டை மாமரத்தின் மீது கல்லையும் தடியையும் எறிகிறோமென்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது அந்த மரம் என்ன செய்கிறது? தன்னிடத்தில் எதுவு மில்லாமையாலே 'ஐயோ! இவனுக்கு நாம் கொடுக்கக் கூடியது ஒன்று மில்லையே!? என்னும் வருத்தத்தைக் காட்டிக் கொண்டு வாளா நிற்கின்றது. அப்படிப்பட்ட மொட்டை

மரத்தின் மீது கல்லையும் தடியையும் வீசி யெறிபவர்களுமில்லை. இவ்விஷயம் வெகு முக்கியமாக கவனிக்கத் தக்கது. "செடிகள் பழுப்பது அடிகள் படவே" என்றார் ஆன்றோர். ஆக, நன்றாகக் காய்த்துப் பழுத்துத் தழைத்த தேன்மாமரத்தின் தலையில் தான் கல்லடியோ தடிபடியோ விழுமென்பதும், அதனால் நல்ல பலன் கிடைத்தே தீருமென்பதும் தெரிய நின்றது.

காழிச்சீராமவிண்ணகரத்திற்குப் பதிகம் பாடின திருமங்கையாழ்வார் "நெட்டிலைய கருங்கமுகின் செங்காய் வீழ நீள் பலவின் தாழ்சினையில் நெருங்கு பீனத், தெட்ட பழம் சிதைந்து மதுச் சொரியுங் காழிச் சீராம விண்ணகர்" என்றருளிச் செய்கிறார். ஸ்வாபதேசார்த்தம் ஸூக்ஷ்மமான பாசுரம் இது. இதில் மேலெழச் சொல்லுவதென்னவென்றால், பாக்கு மரத்திலிருந்து கொட்டையான காய்கள் உதிர்ந்து பலாமரத்தின் மீது விழுந்தனவாம்; அக் காய்கள் கனியப்பழுத்த பலாப்பழத்தின் மீது விழுந்தவாறே அப்பழம் சிதைந்து தேன்வெள்ளம் சொரிந்ததாம். அரும் பெரும் பொருள்களை வெளியிடவந்த ஆழ்வார்கள் பாக்குவிழுந்ததையும் பலாப்பழம் சிதைந்ததையுமா சொல்லி நிற்பார்கள்? மஹான்களின் மீது அடி விழுந்தால் மது வெள்ளந்தானெழுகும்? என்று சாஸ்த்ரார்த்தமே இங்குக் காட்டினபடி.

கல்லடி படும் மாமரமோ பலாமரமோ உபகரிப்பதானது தன்னருகே யிருப்பவர்களுக்கேயொழிய, தூரத்திலுள்ளவர்களுக்கு அவை ஒன்றும் உதவமாட்டா; அடிபடும் மஹான்களோவென்னில் ஸமீபத்திலுள்ளவர்களுக்குப் போலவே நெடுந்தூரத்திலுள்ளவர்களுக்கும் தம் வாயமுதத்தை உபகரித்தே தீருவர்கள். ஆனால்.

'தண்டேன் நுகராமண்டுகம் தண்டாமரையினுடன் பிறந்தே
வண்டே கானத்திடைப் பிறந்தும் வந்தே கமலமதுவுண்ணும்
அண்டே பழகியிருந்தாலும் அறியார் புல்லோர் நல்லோரைக்
கண்டே களிப்பருறவாடிக் கற்றோர் நல்லோர் பெற்றக்கால்'

என்றபடி ஸமீபஸ்தர்கள் இழந்துபோகவும் தூரஸ்தர்களே வாழ்ந்து போகவுந் தான் ப்ராப்தமாகும்.

இரண்டு மாதங்களுக்கு முன்பு அடியேன் **சததூஷணீவஜ்ரகுடாரஸாரம்** என்றொரு நூல் எழுதி வெளியிட்டேன். ஸ்ரீவைஷ்ணவவுலகம் முழுவதும் உச்சிமேல் வைத்து மெச்சநின்றவது அடியேனுடைய நூல்களில் நானூற்றுப்பத்தொன்பதாம் லக்கம் பெற்று வெளி வந்திருக்கின்றது. அதன் பிறகு ஸம்ஸ்க்ருதத்திலும் தமிழிலும் தெலுங்கிலும் ஹிந்தியிலும் நான்கு நூல்கள் எழுதப்பட்டு அச்சாகிவருகின்றன. அந்தக்ரமத்தில் இந்நூலுக்கு லக்கம் 424 ஆகும். ஆனாலும் அவற்றுக்கு முன்னே வெளிவருகின்ற இந்நூலுக்கு 420 லக்கமேயாகின்றது. "அடியார்கள் வாழ அரங்கநகர் வாழ" என்று நிச்சலும் போற்றுகின்ற நம்மவர்கள் இந்நூலைச் சேமநிதியாகக் கொள்ளுவார்களென்னத் தட்டில்லை. இந்நூலைப் பரிபூர்த்தியாக வாசித்து மகிழ்க. ... ... *

முன்னுரை முற்றிற்று.

—முதல் அமுத வெள்ளம்—

ஸ்ரீவைஷ்ணவஸம்பிரதாயத்தில் பலபல ஆசாரியர்கள் அவதரித்திருந்தாலும் பிள்ளை லோகாசாரியரும் மணவாளமாமுனிகளுமே ஆசார்யத்வபூர்த்தியுள்ளவர்களென்பதை அடியேன் பலகால் பல நூல்களில் விவரித்திருக்கின்றேன். இவ்வாசாரியர் இருவர்களின் ஸ்ரீஸூக்திகளினால்தான் ஸ்ரீவைஷ்ணவவுலகம் வாழ்ந்துவருகின்றது. பிள்ளை லோகாசாரியரைக் காட்டிலும் மணவாளமாமுனிகளின் சிறப்புத்தான் உண்மையில் உயர்ந்தது. அமுதக்கடல்போன்ற அவருடைய திவ்யஸ்ரீஸூக்திகளை ஆழ்ந்து அநுபவிப்பாரில்லையே யென்கிற வருத்தம் கடல் சூழ்ந்த விம்மண்ணுலகில் அடியேன் போல்வார் சிலர்க்குத் தானுள்ளது. 'மற்றும் பல ஆசாரியர்களைப் போலே இவரும் ஒரு ஆசார்யர்' என்று நினைப்பாரும், வேறு சில ஆசாரியர்களை மேம்பட்டவர்களாக நினைத்து இவரைத் தாழ நினைப்பாரும் சிலர் இருந்தாலும் அவர்களைப்பற்றி நமக்குக் கவலையில்லை. அடியேன் ஒரே ஒரு வார்த்தைதான் சொல்லுவது;— மற்ற ஆசாரியர்களின் க்ரந்தங்களை யெடுத்து வாசிக்கும்போது அவரவர்களின் ஞானத்தைப் பரிச்சேதித்து விடமுடியும்; மணவாளமாமுனிகளின் வியாக்கியான ஸ்ரீஸூக்திகளை ஸேவிக்கும்போது ஒவ்வொரு சொல்லையும் ஒவ்வொரு வாக்கியத்தையும் நோக்குமிடத்து **"இவரொருவரே அபரிச்சிந்நஜ்ஞாநநிதி"** என்று அஸூயையற்றவர்கள் அறுதியிடத் தட்டில்லை—என்று.

"அமுத மென்மொழி" என்றொரு சொல் திருவாய்மொழியில் (6-5-2) வருகிறது. உண்மையில் அமுதமொழி தந்தவர் யாவர்? என்று கேட்டால் **'மணவாளமாமுனிகளொருவரே'** என்று கூசாது கூறலாம். மாமுனிகள் மற்றுள்ள ஆசாரியர்களுக்கு முன்னே திருவவதரித்து திவ்யஸூக்திகளை யருளிச்செய்திருந்தாராகில் ஒவ்வோராசார்யரும் அந்த ஸ்ரீஸூக்திகளை எவ்வளவோ கொண்டாடியிருப்பர்கள் என்பது ஒரு புறமிருக்க, இவருடைய ஸ்ரீஸூக்திகளைக் கண்டபின் ஒருவரும் ஒன்றெழுத எழுத்தாணியைத் தொட்டிரார்கள். ஆனால் மற்றுள்ள ஆசாரியர்களின் திருவாக்குக்களும் இந்நிலவுலகில் அவதரிக்க வேண்டுமென்றும், அப்போதுதான் வாசி தெரியுமென்றும் திருவுள்ளம் பற்றிய எம்பெருமான் மணவாளமாமுனிகளை ஆசார்ய பரம்பரையின் அந்தத்திலே அவதரிப்பித்தருளினான் என்று கீர்த்திமூர்த்தியான ஸ்ரீமத் புரிசை ஸ்ரீரங்காசார்ய ஸ்வாமி திருவாக்கில் பலகால் கேட்டிருந்தேன். மாமுனிகளின் திவ்யஸூக்தி காம்பீர்ய மாதுர்யங்களை அக்காலத்தில் ஸ்துதி நூல்களில் எழுதி வைத்தவர்கள் எறும்பியப்பாமுதலானார் பலர் இருந்தாலும், அஸ்மத்குல கூடஸ்தரான அண்ணா (வரவரமுநிசதகத்தில்)

"த்ராக்ஷாமதிக்ஷிபதி நிந்ததி மாகரந்த
தாராம் ஸூதாரஸஜரீம் அதரீகரோதி"

என்று பொறித்து வைத்ததுபோல் வேறு யாரும் பொறித்து வைத்திலர். அப்படிப்பட்ட மதுரகம்பீர மென்மொழிகளை எத்தனை தடவை ஸேவித்தாலும்* அப்பொழுதைக்கப்பொழுதென்னாராவமுதமே என்னும்படி ஒவ்வொரு க்ஷணத்திலும் அபூர்வமாகக் காண்கிறதே யொழிய 'நேற்று ஸேவித்த ஸ்ரீஸூக்திதானே இது' என்று ஒருகாலும் தோன்றுவதில்லை. இது அஸூயையற்றவர்களுக்கு அநுபவஸாக்ஷிகம்.

ஸ்வாமியின் வியாக்கியானங்களெல்லாம் தமிழென்று பேரொழிய அத்தனையும் ஸம்ஸ்க்ருத வாக்யஜடிலம். அந்த ஸம்ஸ்க்ருத வாக்கியங்களின் வைகரி வேறு

எவருடைய க்ரந்தத்திலும் காணமுடியாததே. நான்கு சாஸ்திரங்களையும் அறுபத்து நான்கு கலைகளையும் கரைகண்டவொரு பண்டிதோத்தமர் இக்காலத்திலிருப்பதாக வைத்துக் கொள்வோம். அப்படி தாம் இருப்பதாக ஒருவர் அஹம்பாவம் கொண்டிருந்தார்; [அவரை இன்னாரென்று இங்கு அடியேன் குறிப்பிட விரும்பவில்லை] அவரிடத்திலே ஒரு ஸமயம் அடியேன் நெருங்கிப்பேச நேர்ந்தபோது மணவாளமாமுனிகளின் ஸ்ரீஸூக்திமாதுர்ய காம்பீர்யங்களைப்பற்றிப் பேசினேன். மாமுனிகளைப்போல் வியாக்கியானங்களெழுதத் தமக்கும் சக்தியுண்டுபோல அவர் அபிநயித்தார். உடனே அவருடைய செருக்கையடக்க வேணுமென்று தோன்றி மணவாளமாமுனிகளின் திருவடிகளைச் சிந்தனை செய்துகொண்டு **தத்வத்ரய** மென்னும் ரஹஸ்ய க்ரந்தத்தில் ஒரு சிறு சூர்ணிகையை எடுத்து (அதாவது) அசித் ப்ரகரணத்தில் (42)

"ஆத்ம ஸ்வரூபந்தான் பத்த முக்த
நித்யரூபேண மூன்றுபடிப்பட்டிருக்கும்"

என்கிற மூலஸூத்ரத்தை யெடுத்துக்கூறி 'இதற்கு வியாக்கியானம் எழுதும்' என்றேன். இந்த ஸூத்ரத்தில் விசேஷப்படியான விஷயம் ஒன்றுமில்லை; ஜீவாத்மாக்கள் பத்த ஸம்ஸாரிகளென்றும், முக்தர்களென்றும், நித்யர்களென்றும் மூன்று வகையாயிருப்பர்கள் என்று இவ்வளவுதான் இந்த சூர்ணையால் சொல்லப்படுகிறது. 'இதற்கு வியாக்கியானம் வேண்டியதேயில்லை' என்பர் சிலர். வியாக்கியானம் செய்தேயாகவேணுமானால் 'ஆத்ம ஸ்வரூபமானது பத்த முக்த நித்யரூபத்தாலே மூவகைப்பட்டிருக்கும்' என்று எழுதலாமென்பர் சிலர். என்னிடமகப்பட்டுக்கொண்ட மேலே சொன்ன பண்டிதோத்தமர் இவ்வளவேதான் எழுதிக்காட்டினர். உடனே அவர்க்கு இவ்விடத்து மணவாள மாமுனிகளின் வியாக்கியான ஸ்ரீஸூக்தியை ஸேவித்துக்காட்டினேன். அதாவது,

"இனி ஏவம்பூதமான ஆத்மஸ்வரூபம் அநாத்யசித்ஸம்பந்த-தத்வியோக—
ததநந்வயங்களாலே பத்த முக்த நித்யரூபேண த்ரிப்ரகாரமாயிருக்கும்
படியை யருளிச் செய்கிறார் ... ...

என்பது மாமுனிகளின் திவ்ய ஸூக்தி. இந்த ஸூக்தியை அவர் கேட்டவாறே அதே க்ஷணத்தில் "அஞ்ஜலிபண்ணி * கண்களசும்பொழுக * என்ற நிலையாகிப் பரவசமாய்க் கண்ணீர் பெருக நின்றார். 'மாமுனிகளொருவர் தவிர மற்றெவராலும் இப்படிப்பட்ட பங்க்தி யெழுத முடியாதுதான்' என்று சொல்லிச் சொல்லிவிட்டுப்போய்விட்டார். மேலே எடுத்துக் காட்டின வாக்யத்தில் "அநாத்யசித் ஸம்பந்த — தத்வியோக — ததநந்வயங்களாலே" என்கிற வடசொல் தொடர் இப்பூமண்டலத்தில் எந்த ஸம்ஸ்க்ருத வித்வானுடைய வாக்கிலும் வந்ததுமன்று, வரக்கூடியது மன்று; அநாதியான அசித் ஸம்பந்தத்தையிட்டு பத்த ஸம்ஸாரியென்கிறது; அந்த அசித்ஸம்பந்தம் ஒரு நாளில் விடுபட்டதனாலே முக்தனென்கிறது; ஒரு நாளும் அசித்ஸம்பந்த ப்ரஸக்தியே யில்லாமையினாலே நித்யனென்கிறது — என்று இங்ஙனே விவரித்துக்காட்டக்கூடியவகையில் "அநாத்யசித்ஸம்பந்த — தத்வியோக — ததநந்வயங்களாலே" என்று ஸாதித்திருப்பது விலக்ஷணஜ்ஞானபௌஷ்கல்யத்தை விளக்குமாயிற்று. ஸாரஸ்வதஸாரஜ்ஞர்களை ஈடுபடுத்திலமானது இது.

பெரிய கடலில் ஒரு சிறு திவலையை யெடுத்துக் காட்டுமாபோலே மாமுனிகளின் திவ்யஸூக்தி ஸாகரத்தில் இப்போது காட்டினவிது ஒரு பிந்துவே. **“பதாநாம்ஸௌப் ராத்ராத் அநிமிஷ நிஷேவ்யம் ச்ரவணயோ:”** என்கிற பட்டர் ஸ்ரீஸூக்திக்கு ப்ரதாநலக்ஷ்யமான இத்தகைய அத்புத ஸூக்தி ஸந்நிவேசங்கள் மாமுனிகளின் வியாக்கியான திவ்யக்ரந்தங்களிலே ஸஹஸ்ரமன்று, பரஸ்ஸஹஸ்ரம். இதரஸம்ப்ரதாயஸ்தர்களுக்கு மாச்சரியத்தாலே அவை தோன்றுவதில்லை. பாக்ய வசத்தாலே ஸத்ஸம்ப்ரதாயத்திலே ஜனிக்கப்பெற்றவர்களோ வென்னில், மதியின்மை ஆபிமுக்யமின்மை ஆதரமின்மை ஆராய்ச்சியின்மை முதலிய ஹேதுவிசேஷங்களாலே உணர்ந்து கொள்ள பாக்ய ஹீநர்களாகிறார்கள். அவர்களின் இழவைப்பற்றி நமக்கென்ன கவலை!

மாமுனிகள் உபதேசரத்தின மாலையில் சில ஆழ்வார்களுக்கு ஒரே பாசுரம், சில ஆழ்வார்களுக்கு இரண்டு பாசுரம்...என்றிப்படி வாசிவைத்துப் பாசுரம் பாடியுள்ளார். திருமழிசையாழ்வார், குலசேகராழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார், திருப்பாணாழ்வார்–இவர்களுக்கு ஒவ்வொரு பாசுரம். முதலாழ்வார்கள், திருமங்கை மன்னன, நம்மாழ்வார், மதுரகவிகள்—இவர்களுக்கு இரண்டிரண்டு பாசுரங்கள். ஆண்டாள் எம்பெருமானார்—இவர்களுக்கு மும்மூன்று பாசுரங்கள். பெரியாழ்வார்க்கு ஐந்து பாசுரங்கள். ஆக இவ்வண்ணமருளிச் செய்து வந்தவர் பிள்ளை லோகாசார்யருக்கு ஸ்ரீவசநபூஷணத்தை மட்டுமெடுத்தே சித்து ஏழு பாசுரங்களருளிச் செய்தார். இதனால், மணவாளமாமுனிகள் மிகச்சிறந்த சாஸ்த்ரமென்று திருவுள்ளம்பற்றியது ஸ்ரீவசநபூஷண திவ்ய சாஸ்த்ரமொன்றே யென்று தேறிற்று. அந்த திவ்ய சாஸ்திரத்தின் பெருமை ஏழுபாசுரங்களினால் விளக்கப்பட்டாலும் அவற்றுள் ஒரு பாசுரம் லோகோத்தரமாக அமைந்துள்ளது; அதாவது,

“ஆர்வசனபூடணத்தி னாழ்பொருளெல்லாமறிவார்
ஆர்அதுசொல் நேரிலனுட்டிப்பார் — ஓரொருவர்
உண்டாகிலத்தனைகா ணுள்ளமே!எல்லார்க்கும்
அண்டாததன்றோ வது,” என்பதாம்.

இதில், ஸ்ரீவசனபூஷணத்தினுடைய கம்பீரமான அர்த்தங்களை யெல்லாம் அறியவல்லாரில்லை என்று முதலடியில் அருளிச் செய்தார். “விசதவாக்சிகாமணிகளான ஸ்வாமியின் திவ்யமான வியாக்கியானம் திருவவதரித்திருக்க, அதுகொண்டு ஆழ்பொருள்களையறிய என்ன குறை?” என்று சிலர் விஜ்ஞாபிக்க, உடனே **“ஆர் அது சொன்னேரிலனுட்டிப்பார்”** என்றார்; ஒருவாறு பொருள் தெரிந்து கொள்ளலாமானாலும் அந்த ஸ்ரீவசநபூஷண சாஸ்த்ரமிட்ட கட்டளையிலே அநுஷ்டிக்கவல்லார் ஒருவருமில்லையே! என்றார்.

ஒருவராலும் அநுஷ்டிக்க முடியாத விஷயம் ஸ்ரீவசநபூஷணத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கிறதென்று விமர்சிக்க வேணுமே. அத்தகைய விஷயங்கள் அதில் பலபல இருந்தாலும் ப்ரக்ருதம் ஒன்றேயெடுத்துக் காட்டுகின்றேனடியேன். அடியேனிட்ட உபதேசரத்தினமாலைத் திவ்யார்த்ததீபிகையுரையில் இப்பாசுரத்தின் உரையின் முடிவில்—“அநுஷ்டிக்க முடியாதபடி இதில் என்ன விஷயம் கூறப்பட்டிரா நின்றதென்னில், *குற்றஞ் செய்தவர்கள் பக்கல் பொறையும் க்ருபையும் சிரிப்பும் உகப்பும் உபகாரஸ்ம்ருதியும் நடக்க வேணும்* ... இங்ஙனேயருளிச்செய்யப்பட்டுள்ள பலபல விஷயங்கள் அநுஷ்டிக்கவரியன என்னுமிடம் சொல்ல வேணுமோ?” என்றெழுதியுள்ளேன். அதையே இங்கு விவரித்துக் காட்டப்புகுகின்றேன்...*

முதலமுதவெள்ளம் முற்றிற்று,

—இரண்டாமமுதவெள்ளம்—

ஸ்ரீவசநபூஷணத்தில் 365-ஆம் சூர்ணை—"குற்றம் செய்தவர்கள் பக்கல் பொறையும் க்ருபையும் சிரிப்பும் உகப்பும் உபகாரஸ்ம்ருதியும் நடக்கவேணும்." என்பது. அபராதப் பட்டவர்களுக்கு அபராதத்திற்குத்தக்கபடி தம்மாலியன்ற தண்டனை செய்யவேண்டியது தான் முக்கியம் என்பது அடியேனைப் போன்ற அவிவேகிகளின் நினைவு. மஹாவிவேகிகளோ வென்னில், அப்படி நினையார்கள். அந்தக்குற்றவாளர்களிடத்திலே பொறை, க்ருபை முத லானவற்றையே காட்டுவார்கள். பொறுமை காட்டவேணும், க்ருபைபண்ணவேணும், சிரிக்கவேணும், உகக்கவேணும் நன்றி பாராட்ட வேணும்—என்று ஐந்து விஷயங்கள் இங்குச் சொல்லப்படுகின்றன. ஸ்ரீவசநபூஷணத்திற்கு ஜநந்யாசார்யரென்பவருடைய ஸம்க்ஷிப்தமான வியாக்கியானமுமொன்று இருந்தாலும் அதனால் ஓரிடத்திலும் ஒரு த்ருப்தியுமுண்டா கிறதில்லை. அப்பெருங்குறை தீரவே அற்புதமான வியாக்கியானம் விசதவாக்சிகாமணி களான மாமுனிகள் இட்டருளினது. அந்த வியாக்கியானத்தை யநுஸரித்து விவரிக்கிறே னிங்கு. இதற்கு அவதாரணிகையாகவே முந்தின அமுதவெள்ளத்தில் மாமுனிகளின் திவ்ய ஸூக்திமாதுர்ய காம்பீர்ய ப்ரசம்ஸை நிகழ்ந்ததென்றுணர்க.

1. **குற்றம் செய்தவர்களிடத்தில் பொறுமை காட்டவேணும்.** அதாவது, எதிரி கள் செய்யும் தூஷணை முதலான குற்றத்திற்காகச் சிலர் உடனே பதில் தண்டனை செய்யக் கூடும்; அது செய்ய சக்தியில்லாதவர்கள் 'இந்த மஹாபாபி இப்படி அபராதப் பட்டானே.' என்று நெஞ்சுபுண்பட்டிருக்கக்கூடும். இவ்விரண்டுபடியுமன்றிக்கே அவர்கள் பட்ட அபராதத்தை ஸஹித்திருக்க வேணும். ப்ரதிக்ரியை பண்ண நினையாமலும் நெஞ்சு கன்று மலுமிருக்கவேணுமென்கை.

2. **குற்றம் செய்தவர்களிடத்தில் க்ருபை காட்டவேணும்.** அதாவது, கீழ்ச் சொன்னபடி ஸாத்விகரானவிவர் ஸஹித்துக்கொண்டிருந்தாலும் 'அரசன் அன்று கொல் லும், தெய்வம் நின்று கொல்லும்.என்கிறபடியே தெய்வம் தண்டித்தே தீருமன்றோ; அதில் ஸந்தேஹமில்லையே; நாஸ்திகர்களுக்கு இதில் விப்ரதிபத்தியிருந்தாலும் ஆஸ்திகர்கள் இதைத்திண்ணமாக எண்ணியிருப்பர்களே; அதனால் ஐயோ! நாம் பொறுத்திருந்தாலும் பொறுத்திருக்கமாட்டாத தெய்வம் இவன் தலையில் இடிவிழுந்தாற்போலே அனர்த்தங்கள் விளையும்படி செய்யுமே; இதற்கு என்ன பண்ணுவோம்!' என்று இரக்கங்கொண்டிருக்க வேணுமென்கை. இங்கே மணவாள மாமுனிகளின் ஸ்ரீஸூக்தி—"நாம் பொறுத்திருந்தோ மாகிலும் எம்பெருமான் உசிததண்டம் பண்ணவன்றோ புகுகிறான், ஐயோ! இனி இதுக்கு என் செய்வோம்! என்கிற பரது:க்காஸஹிஷ்ணுத்வம்" என்பதாம்.

3. **குற்றம் செய்தவர்களிடத்தில் சிரிப்பு காட்ட வேணும்.** இது வெகு ஆச்சரிய மான ஸ்ரீஸூக்தி. எதற்காகச் சிரிக்க வேணும்? என்ன வென்று சிரிக்கவேணும்? என்று கேட்டால், குற்றங்களை வடி வெடுத்த இந்தப்படுபாவி வெட்கமில்லாமல் பிறரை தூஷிக்கப் புறப்படுகிறானே யென்று சிரிக்க வேணுமென்பர் சிலர்; ஜநந்யாசார்யரும் தமது வியாக்கி யானத்தில் இங்கு ஏதோ எழுதிவைத்திருக்கிறார். இங்கு மணவாளமாமுனிகளின் அற்புத மான திவ்யஸூக்திகாணீர் "அத்ருஷ்டவிரோதமாக இவர்களால் செய்யலாவதொன்றில்லை யிறே; பாருஷ்யாதி முகத்தாலே க்ஷாதிலாபாதி த்ருஷ்ட விரோதங்களிறே இவர்களால் செய்யலாவது; அப்படி சிலவற்றைச் செய்தால் தங்களோபாதி நாமும் இவற்றிலே

சபலராய் இவற்றினுடைய ஹாநியைப்பற்ற நெஞ்சாறல் பட்டுத் தளர்வுதோமென்றிருந் தார்களன்றோ! இவர்களின் அறிவிலித்தனமிருந்தபடி என்! என்று பண்ணும் ஹாஸம்.” என்று. இந்த ஸ்ரீஸூக்தியின் மாதுர்யத்தையும் காம்பீர்யத்தையும் யாரே காணவல்லார்! மூலவக்தாவான பிள்ளைலோகாசார்யருடைய திருவுள்ளக் கருத்தை அப்படியே அநூநாதிரிக்தமாகவன்றோ காட்டியுள்ளார். இதைச் சிறிது விவரிப்போம். தூஷிப்பவர்கள் என்ன கருத்தினாலே தூஷிக்கிறார்களென்று பார்க்கவேணும். எந்த நபரை தூஷிக்கிறார்களோ அந்த நபருக்குச் சில நஷ்டங்களையுண்டுபண்ண வேணுமென்கிற எண்ணங்கொண்டே தூஷிக்கிறார்களென்பதில் ஸந்தேஹமில்லை. நஷ்டம் இருவகைப்படும்; (1.) அத்ருஷ்டத்தில் நஷ்டம். (2) த்ருஷ்டத்தில் நஷ்டம். (1) ஆமுஷ்மிக புருஷார்த்தத்தில் கெடுதி விளைவது அத்ருஷ்டத்தில் நஷ்டமெனப்படும். (2) இவ்வுலகில் சிலர் நம்மிடத்தில் கௌரவம் வைத்திருந்தால் அது மாறும்படியாகச் செய்வதும், யாரேனும் நமக்கு ஸன்மானங்கள் செய்வதாயிருந்தால் அல்லது செய்து கொண்டிருந்தால் அதைத் தவிர்ப்பதும் த்ருஷ்டத்தில் நஷ்டமெனப்படும். ஆக இப்படிப்பட்ட நஷ்டங்களில் அத்ருஷ்டத்தில் நஷ்டம் சிறிதுமுண்டாகாதென்பது திண்ணம். ஆனால் த்ருஷ்டத்தில் நஷ்டம் உண்டு பண்ண முடியும். அதாவது பலர் திரண்டிருக்குமிடங்களில் நிஷ்காரணமாகப் பருஷோக்திகளை வாரியிறைத்து தூஷிப்பதனால், தூஷிக்கப்பட்ட வ்யக்திவிசேஷத்தினிடத்தில் உலகர் வைத்திருக்கிற மதிப்பு குறையக் கூடும்; அவர்கள் செய்ய நினைத்திருக்கிற (அல்லது) செய்து கொண்டு வருகிற ஸன்மானங்களும் தொலையக் கூடும். ஆக இப்படிப்பட்ட த்ருஷ்ட நஷ்டங்கள் உண்டாகக் கூடுமென்று வைத்துக் கொள்வோம். இது தவிர வேறுவிதமான நஷ்டம் ப்ராக்ருதர்களின் தூஷணைகளினால் உண்டு பண்ண முடியாதென்பது திண்ணம். இப்படியாக இவர்களுண்டாக்கும் நஷ்டத்தினால் நாம் கஷ்டப்படுவோமென்றல்லவா இந்த தூஷகர்களின் நினைவு; அந்தோ! இவர்கள் நம்மையும் தங்களைப் போல நினைத்து விட்டார்களே! ப்ராக்ருதர்களால் வரும் மதிப்பும் ஸத்காரமும் நமக்கு த்ருணப்ராயமென்பதை இந்த அவிவேகிகள் தெரிந்து கொள்ளவில்லையே. ப்ராக்ருதர்களின் இகழ்வும் வெறுப்பும் அதிகரிக்க அதிகரிக்க, அதையே நாம் மிகுந்த ச்ரேயஸ்ஸாகக் கொண்டிருக்கிறோமென்பதை இந்த அறிவிலிகள் அறிந்து கொள்ள வில்லையே!; * உண்டியே உடையே உகந்தோடு மிம்மண்டலத் தொடுங் கூடுவதில்லை யான் * என்கிற நம்முடையவுறுதி திடமாவதற்கே இவர்களுடைய தூஷணைகள் ஹேதுவானதை இந்த ஜடங்கள் தெரிந்து கொள்ள வில்லையே என்று சொல்லிச் சொல்லிச் சிரிக்கவேணும்—என்பதே மாமுனிகளின் திவ்யஸூக்தி தாத்பர்யம். உண்மையில், நிந்திப்பவர்கள் விஷயத்திலே இப்படி சிரித்திருப்பதொன்று தான் முக்கியமானது. ஆகவே தான் பொறை முதலான ஐந்தில் இது இடையில் வைக்கப்பட்டது.

4. **குற்றம் செய்தவர்களிடத்தில் உகப்பு நடக்க வேணும்.** (அதாவது) தூஷிக்குமவர்கள் பண்ணும் பரிபவம் சரீரத்தைச் சேருமேயொழிய ஆத்மாவைச் சேராது. ஸர்வப்ரகாரத்தாலும் உஜ்ஜீவித்து வாழ்ந்து போந்த ஆத்மா இவர்கள் பண்ணும் பரிபவத்திற்கு இலக்காகக் கூடியதன்றே. பாழும் சரீரந்தானே இவர்கள் பண்ணும் பரிபவத்திற்கு இலக்காமது. அந்த சரீரத்தை தத்வஜ்ஞானிகள் தங்களுக்கு சத்ருவாவென்றோ நினைத்திருப்பர்கள். இந்த ஸ்ரீவசநபூஷணத்திலேயே இரண்டாம் ப்ரகரணத்தின் முடிவு சூர்ணையிலே “இப்படி ஸர்வப்ரகாரத்தாலும் நாச ஹேதுவான அஹங்காரத்துக்கும் அதினுடைய கார்யமான விஷயப்ராவண்யத்துக்கும் விளை நிலம் தானாகையாலே தன்னைக் கண்டால் சத்ருவைக் கண்டாற் போலே” என்றருளிச் செய்யப்பட்டிருக்கையாலே ஸ்வசரீரம் ஸ்வசத்ருவென்பதில் ஸந்தேஹமில்லை. உலகில் தன்னுடைய சத்ருவுக்கு ஒருவன் பரிபவத்தையுண்டு பண்ணினால் உகப்பு உண்டாகுமன்றோ; அது போலவே ஸ்வசத்ருவான ஸ்வசரீரத்தைப் பரிபவப்படுத்துமவர்கள் திறத்திலே உகப்பு உண்டாக வேணுமென்கை. மேலும்,

தூஷிக்குமவர்கள் தங்களுடைய தூஷணைகளாலே த்ருஷ்டத்தில் சில நஷ்டங்களைத்தான் உண்டு பண்ண முடியுமென்று கீழே விவரிக்கப்பட்டது. அப்படி நஷ்டம் செய்யப் பெறுகிற லௌகிகப் பொருள்களை தத்வஜ்ஞாநிகள் தமக்கு மிகவும் ப்ரதிகூலங்களாக நினைத்திருக்கையாலே அப்படிப்பட்ட ப்ரதிகூலங்களைப் போக்குமவர்கள் விஷயத்திலே உகப்புக் காட்ட வேண்டியது அவசியமேயன்றோ.

5. குற்றம் செய்தவர்களிடத்தில் உபகாரஸ்ம்ருதி நடக்க வேணும். பகவத் பாகவத ஸந்நிதானங்களில் நாம் செய்ய வேண்டிய காரியம் என்ன? அமர்யாத: **க்ஷுத்ரச் சலமதிரஸூயாப்ரஸவபூ:*** இத்யாதிப்படியே நம்முடைய தோஷங்களை யநுஸந்திப்பது தான் செய்ய வேண்டிய காரியம். இதை நாம் மறந்திருக்கும் ஸமயங்களிலே நம்முடைய தோஷங்களை யுணர்த்துகிறவர்களை நமக்கு உபகாரிகளாகவன்றோ நாம் நினைக்க வேண்டும். இப்படி தோஷங்களை யுணர்த்துவது ஏகாந்தமாகவல்லாமல் மிகப் பெரிய கோஷ்டிகளிலே பலரறியவுணர்த்துவது, ஸாமான்யமான உபகாரமா? மஹோபகாரமல்லவா? அன்னவர்களிடத்திலே நன்றி பாராட்டவன்றோ நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

—இரண்டாமமுதவெள்ளம் முற்றிற்று.—

மூன்றாமமுதவெள்ளம்—பன்னிரண்டு நல்வார்த்தைகள்.

1. நம்மைப்பற்றிப் பிறர் குற்றமாகவோ குறைவாகவோ ஏது கூறினாலும் சித்தத்தில் சிறிதும் விகாரமின்றியே உல்லாஸமாக விருக்கப் பழகவேண்டும். உண்மையில் நம்மிடத்தில் குணங்கள் மெலிந்து தோஷங்களே மலிந்து கிடக்குமாதலால் அப்படிப்பட்ட தோஷங்களை நேரிலோ மறைவிலோ எடுத்துரைப்பாருளரேல் அவர்களை நாம் நமக்கு மஹோபகாரம் செய்தவர்களாக நினைக்கவேண்டும். 2. "**குணக்ஷதலிபிக்ரமாத்**" என்று வேதாந்தவாசிரியர் பணித்த முறையில் நம்மிடத்தில் ஸ்வல்ப குணங்களுமிருக்கலாம். அதைப் பிறர் பாராட்டிப் புகழவேண்டுமென்று நாம் ஆசைப்படுவது தகுதியன்று. 3. குற்றத்தைக் குற்றமாகவும் நற்றத்தை நற்றமாகவும் கொள்வதைவிட, குற்றத்தையும் நற்றமாகக் கொள்வதே நலமென்று பெரியார் கூறுவதால் இத்தகைய நலம்வாய்ந்த சில மஹான்கள் தம்முடைய வாத்ஸல்ய குணத்தின் மஹிமையினால் குற்றங்களில் சிறிதும் கண் வைத்திடாமல் நற்றமாகவே பாராட்டிப் புகழ்வர்களெனினும் அந்தப் புகழ்ச்சியில் நாம் மயங்கிவிடக்கூடாது. 'இவர்கள் நம்மிடத்திலில்லாதநலத்தை ஏறிட்டுக்கொண்டாடுகிறார்கள்' என்றே நாம் உள்ளபடி நினைக்கவேண்டும். 4. குற்றங்குறைகளைக் கூறுமவர்களே ஸத்யவாதிகள். நம்மீது பிறர்கூறுகிற குற்றங்குறைகள் உண்மையாக நம்மிடத்தில் இல்லையென்று நாம் நினைக்கக்கூடும். ஆனால் அப்படி நினைப்பது தவறு; நம்மிடத்தில் இல்லாதவற்றைப் பிறர் சொல்லார்கள் என்றும், நமக்குந்தெரியாதபடி நம்மிடத்தில் இருப்பவைகளையே பிறர் தெரிந்து சொல்லுகிறார்கள் என்றும் நாம் நினைக்க வேண்டும். 5. எதற்காக இப்படி நினைப்பது? நம்முடைய குற்றமோ நற்றமோ நமக்குத் தெரியாமலிருக்குமோ? பிறர் பொறாமையினாலும் மற்றும் பலவகைக் காரணங்களினாலும் நம்மீது சில பல குற்றங்களை ஏறிட்டுக் கூறினால் அவற்றை நாம் எதற்காக இசையவேண்டும்? உள்ள குற்றமாயிருந்தால் இசைந்து கொள்வோம்; இல்லாது ஏறிட்டுக் கூறுகிற குற்றமாயிருந்தால் மறுப்போம்— என்று இங்ஙனே சிலர் வாதம் செய்யக்கூடும். அன்னவர்களுக்கு நாம் சொல்லுவதாவது, "உள்ள குற்றமாயிருந்தால் இசைந்து கொள்வோம்" என்று இவ்வளவாவது சொல்லுகிறீர்களே, இதுவே பரமானந்தம்; உள்ள குற்றங்களையும் இல்லை செய்வார் மலிந்த இவ்வுலகில் உள்ள குற்றங்களை உள்ளபடி ஒப்புக்கொள்வார் சிலராவது தேறினால் ஈதொப்பதின்ப முண்டோ; இல்லாது ஏறிட்டுக் கூறுகிற குற்றங்களை நீங்கள்

மறுத்துக்கூறினாலும் உள்ள குற்றங்களையாவது ஒப்புக்கொள்வதற்காக உழைக்கிறோம் என்பதே. இது ஸாமான்யமானதன்றே.

6. ஆனால், உண்மையில் நம்மிடத்து இல்லாத குற்றக்குறைகளைப் பிறர் ஏறிட்டுக் கூறுகிறார்களென்று நினைப்பது மிகவும் தவறு. ஸுபாஷித நீதியில் ஓர் அற்புதமான ஸுபாஷிதமுள்ளது; அதாவது, *பச்யதி பரேஷு தோஷாந் அஸதோபி ஸதோபி நைவ குணாந், வியரீதமிதம் ஸ்வஸ்மிந் மஹிமா மோஹாஞ்ஜநஸ்யைஷ:* என்பதாம். இதன் பொருளாவது, பிறரிடத்தில் எவ்வளவு குணமிருந்தாலும் அவற்றை நாம் தெரிந்துகொள்வது கிடையாது; அவர்களிடத்தில் தோஷம் இல்லாவிடினும் அது மலைமலையா யிருப்பதாகத் தெரிந்து கொள்ளுகிறோம்; இது ஸ்வாத்ம விஷயத்தில் விபரீதமாகிறது: (அதாவது) நம்மிடத்தில் மலைமலையாக தோஷங்களிருந்தாலும் அவற்றிலொன்றுகூட நாம் தெரிந்து கொள்வதில்லை; குணம் லவலேசமும் இல்லாதிருந்தாலும் குணக்கடலாகவே நம்மை நாம் நினைத்துக் கொள்ளுகிறோம்—என்பதாம். 7. இது அதிசயோக்தியன்று. யதார்த்த கீர்த்தனமே; நம்மிடத்திலுள்ள குற்றங் குறைகளை நாம் தெரிந்துகொள்ள முடியாதபடி மாயை மறைக்கிறபடியால் பிறர் வாயிலிருந்தே இவற்றை நாம் தெரிந்துகொள்ளவேண்டியதாகிறது. பிறர் பொறாமையினால் ஏறிட்டுக் கூறுவதாகவே யிருக்கட்டும். பிறர்க்கு நம்மீது பொறாமை யிருப்பதாகவும் நம்முடைய குணங்களையெல்லாம் அவர்கள் தோஷமாக மாற்றிப் பிதற்றுவதாகவும் நாம் நினைக்கவே கூடாது. இப்படி நினைத்தோமாகில் அது நம்முடைய மிகுந்த ப்ரமமேயாகும். கீழே உதாஹரித்த ஸுபாஷிதத்திற் கண்டபடி மோஹாஞ்ஜனத்தின் மஹிமையே யிது என்று திண்ணமாக எண்ணவேணும். 8. சிலர் நம்மைத் தூஷித்ததனால் நம்முடைய கிரீடம் கீழே விழுந்துவிடுமோவென்று இந்தயே மிகவும் ஆலோசிக்கவேண்டும். உண்மையில் நமக்கொரு கிரீடம் உள்ளதா இல்லையா என்கிற ஆராய்ச்சி வேண்டா; பெரியதொரு கிரீடம் நவரத்னகசிதமானது நம் தலையில் ஏறியிருப்பதாகவே வைத்துக் கொள்வோம். அது சிலருடைய தூஷணைகளினால் சிதைந்தொழியுமோவென்று விமர்சிக்க வேண்டும். உள்ள குற்றங்களையோ இல்லாத குற்றங்களையோ பிறர் எவ்வளவும் சொல்லி ஊரும் நாடு முலகமு மெங்கும் பிரசாரம் செய்யட்டுமே. அதனால் நமக்கென்ன நஷ்டமென்று சிறிது சிந்திக்கவேண்டாமா?

(9) தூஷிக்குமவர்கள் எவ்விதமான குற்றக்குறைகளைச் சொல்லித் தூஷிக்கிறார்களென்று பார்க்கவேண்டும். இவ்வுலகத்தவர்களிடத்திலே எங்கும் ஸம்பாவிதங்களான தோஷங்களைச் சொல்லித் தூஷிப்பர்களையன்றி, அஸம்பாவிதமாய் அபூர்வமான சில தோஷங்களைச்சொல்லி நிந்திக்க முடியாதன்றோ. ஸ்ரீராமக்ருஷ்ணாதி பகவந் மூர்த்திகளிடத்தும், ஸர்வலோக பூஜிதர்களாய் விளங்கின பூர்வாசாரியர்களிடத்திலும் இன்றைக்கும் பலர் சொல்லிக் கொண்டிருக்கிற தூஷணைகளுக்கு ஸஜாதீயங்களான தூஷணைகளையேயன்றோ நம்மிடத்தும் சொல்லவல்லார். பெரியார்களுக்குக் கிடைத்த ஸத்காரங்களே நமக்கும் கிடைத்தால் இது நமக்கொரு பெருமையென்று நாம் நினைக்கவேண்டாவா (10) ஸர்வஜன ப்ரத்யக்ஷமாக எவ்வளவோ அபரிமிதமான தவறுகளை நித்தலும் செய்து போருகின்ற வழிப்போக்கர்களைப் பற்றி ஒன்றும் வாய் திறவாமல் பெருமதிப்பாளர்களைப் பற்றியேயன்றோ தூஷிக்க நுகின்றார்கின்றது தூஷகர்களுக்கு.....இங்ஙனே பல விஷயங்களை யாராய்ந்தால் குற்றங்குறைகள் கூறுவார் பக்கலில் நாம் மிகவும் க்ருதஜ்ஞதை செலுத்

வேணுமேயல்லது சிறிதும் வெறுப்புக்கொள்ள இடமில்லை. (11) ***காவ்யசாஸ்த்ரவிநோதேந காலோ கச்சதி தீமதாம்****என்றபடி காவ்ய சாஸ்த்ரவ்யாஸங்கங்களினால் மஹான்கள் போதைப்போக்காநின்றால் அங்ஙனே போதுபோக்க பாக்கியமற்றவர்கள் தங்கள் போதை எப்படித்தான் போக்குவது? 'அவனப்படி' 'இவனிப்படி' என்று எதையாவது சொல்லித் தானே போதைப் போக்கித் தொலைக்கவேண்டும். ஏதோ ஒருவிதத்தில் அவர்களும் மஹான்களையே சிந்தையிலும் வாயிலும் கொண்டிருந்து புனிதர்களாகிறார்கள் என்று உகப்பதல்லவா உரியது. ஆகவே தூஷகர்களென்று சிலரை நாம் வெறுப்பது சிறிதும் பொருந்தாது. (12) *ஆனால் இப்படிப்பட்ட மனப்பழக்கம் எளிதில் தேறாது. அநியாயமாய்த் தூஷிக்கிறார்களேயென்று கோபதாபங்களே மிகமிகவுண்டாம். அப்படிப்பட்ட ஸந்தர்ப்பங்களில், இதுவரை நாம் கீழே விவரித்த விஷயங்களையெல்லாம் ஆர அமர நெஞ்சிற் கொண்டு விவேக சக்தியைச் சிறிது பயன்படச் செய்தால் அதற்கு மேற்பட்ட ஆத்மானந்தமில்லையாகும். நாம் செய்துகொள்ளவேண்டிய மனப்பழக்கங்களில் இதுவே முதன்மை பெற்றுச் சிறக்கும். இங்ஙனே பழகினரை ஒருவரும் வெல்லகில்லார். ...

மூன்றாமமுதவெள்ளம் முற்றிற்று.

நான்காவது அமுதவெள்ளம்

ஆர்த்திப்பிரபந்தத்தில் "முன்னவராம் நம் குரவர் மொழிகளுள்ளப் பெற்றோம் முழுதுநமக்கவை பொழுது போக்காகப் பெற்றோம்" என்று மணவாளமாமுனிகள் பணித்தபடியே பெரியோர்களுடைய ஸ்ரீஸூக்திகளைக்கொண்டு போது போக்குவதென்பது ஜன்மாந்தர ஸஹஸ்ர நற்றவப்பயன். ஆங்காங்கு அவரவர்கள் தம்தம் போதுகளை எப்படி போக்கிவருகிறார்களென்று நாற்புறமும் பார்ப்போமாயின். உத்யோகஸ்தர்கள் வியாபாரிகள் பயிர்த்தொழிலாளர்கள், வக்கீல்கள் முதலானோருடைய போதுபோக்குகள் ஒருவிதமாக நிகழ்ந்து வருகின்றன. சிலபேர்கள் தேசவிருத்தாந்தப்பத்திரிகைகளைப் படித்தல், நாவல்களைப்படித்தல், சூது சதுரங்க மாடுதல்...முதலிய காரியங்களிலே காலத்தைச் செலவிடுகிறார்கள். இது தவிர, நால்வர் எண்மர் பதின்மராகக்கூடி ஒரு காசுக்குமுதவாத வம்பு வார்த்தைகளை வெகு அட்டஹாஸங்களுடன் பேசிக்கொண்டும், தங்கள் திரளிலே அந்வயிக்கப்பெறாமல் சுவடிகளிலும் பகவத் பாகவத பரிசர்யைகளிலும் போதுபோக்கிவரும் மஹான்களைப் பற்றி ஏதேனும் பறை சாற்றிக்கொண்டும் பத்துமணி காலத்தைப் பத்து நிமிஷமாகக் கழிக்கின்றவர்கள் சிறிய கிராமம் முதல் பெரிய நகரம்வரையில் எங்குமுள்ளார்கள். அன்னவர்கள் பெறுமானந்தம் அளவுகடந்தது.

ஆழ்வார்களுள் திருமழிசையாழ்வார் நான்முகன் திருவந்தாதியில் (63) *தரித்திருந்தேனாகவே...............**தெரித்தெழுதி வாசித்துங் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் போக்கினேன் போது*** என்றருளிய பாசுரம் ஒவ்வொருவரும் நிச்சலும் நினைக்கத் தக்கது. போதுபோக்கும் விதத்தை இவரைப்போல் எடுத்துரைத்தவர் மற்றுயாருமில்லை. தெரித்தல் எழுதுதல் வாசித்தல் கேட்டல் வணங்குதல் வழிபடல் பூசித்தல் ஆகிய இவற்றினாலேயே தாம் போதைப்போக்கினதாகவும் இவையில்லையாயின் தம்மால் உயிர்தரிக்க முடியாதாகவும் வியக்தமாக விளம்பியுள்ளார்.

*நலத்தால் மிக்கார் என்றும் *கலையிலங்குமொழியாளர் என்றுமுள்ள ஸ்ரீஸூக்திகளுக்கு லக்ஷ்யபூதர்களாய் விளங்கும் மஹநீயர்களைக்குறித்து* **அசக்தாஸ் தத்பதம் கந்தும் ததோ நிந்தாம் ப்ரகுர்வதே***என்கிறபடியே நிந்தனை மொழிகளைப் பலவகைகளாலும் பரவச்செய்துகொண்டு அதுவே போதுபோக்காக இருப்பவர்களைக் குறித்து இங்கு நாம் விஜ்ஞாபிக்கவேண்டியதொன்றுமில்லை. ஈச்வரனுடைய ஜகத் ஸ்ருஷ்டியானது மிக விசித்திரமானது. பொய் சொல்வது களவு செய்வது வஞ்சனை பண்ணுவது முதலான தீய குணங்களையும், அஹிம்ஸை இந்த்ரிய நிக்ரஹம் க்ஷமை ஸத்யம் முதலிய நற்குணங்களையும் ஒவ்வொரு க்ராமத்திலும் ஒவ்வொரு நகரத்திலும் நாம் பார்த்துவருகிறோம். நற்குணங்களோ தீயகுணங்களோ அவரவர்கட்கு இயற்கையாக அமைகின்றனவென்பதே பெரும்பான்மையான கொள்கை. வேம்புக்குள்ள கசப்பும் மாதுளைக்குள்ள புளிப்பும் கரும்புக்குள்ள தித்திப்பும் முதலியன எப்படி ஒரு நாளும் மாறுவதில்லையோ அப்படியே மனிதர்களுக்கும் ஜன்மஸித்தங்களான குணங்கள் (நல்லவையோ தீயவையோ) பேர்க்கவும் பேரா என்றே பெரியார் கூறுவர். இளமையில் பொய் சொல்லியும் களவாடியும் வழக்கம் பெற்றவர்கள் அந்த வழக்கத்தை ஒரு நாளும் விடமுடிகிறதில்லையென்பதையும், இயற்கையாகவே ஸத்யம் முதலிய நல்ல குணங்கள் அமையப்பெற்றவர்கள் ஒரு நாளும் அஸத்ய வழியில் செல்கின்றிலர் என்பதையும் எந்தவூரிலும் எந்த ஜாதியிலும் எக்காலத்திலும் பார்க்கலாம். ஆகவே ***யச்யதி பரேஷு தோஷாந் அஸதோபி, ஸதோபி நைவ குணாந், விபரீதமிதம் ஸ்வஸ்மிந், மஹிமா மோஹாஞ்ஜநஸ்யைஷ:*** என்று கீழே விவரித்தபடி பிறரிடத்தில் இல்லாத தோஷங்களை இருப்பனவாகக் காண்பதும், இருக்கின்ற குணங்களை இல்லை செய்வதும், தம்மிடத்தில் உள்ள தோஷங்களைக் காணாமல் இல்லாத குணங்களை இருப்பனவாக ப்ரமிக்கையுமாகிற இந்த மஹாஸம்பத்தை மோஹாஞ்ஜந மஹிமையினால் சிலர் இயற்கையாகவேபெற்று வாழ்கின்றார்களென்றும் அதற்குத்தகுந்தபடி அமையக்கூடிய அவர்களது போதுபோக்கை மாறுபடுத்த மாதவனாலுமாகாதென்றும் இதையும் நாம் எங்கும் அனுபவத்திற் காணுகின்றோம்.

ஆனால் இங்கு நாம் தெரிவிக்க விரும்புகின்றதென்னவென்றால், கேண்மின். யானையும் குதிரையும் பெருமாள் புறப்பாட்டுக்கு கம்பீரமாக உபயோகப்படுவது போல மற்ற ஜந்துக்கள் ஏன் உபயோகப் படுவதில்லையென்று ஒருவர்கேட்டால் இதற்கு என்ன பதில் சொல்லுவது? யோக்யதைக்குத் தகுந்தபடி உபயோகம் நேர்கின்றது என்றிவ்வளவே சொல்லமுடியும். நல்ல வழிகளில் போது போக்க யோக்யதையற்றவர்கள் ஏதோவொரு வழியில் தங்கள் போதைப் போக்கித்தானே யாகவேண்டும். குயிலும் காக்கையும் பெரும்பாலும் வடிவில் ஒத்திருக்கச் செய்தேயும் செய்கையில் ஏன் ஒத்திருக்கவில்லை யென்று யாரை யார் கேட்பது? அதுபோலே, சிலர் சீர்கலந்த சொல் நினைந்து போதுபோக்காதே தங்களுக்கு ஸுலபஸாத்யமான வகையில் போதுபோக்கி வருகின்றார்களென்றால் இதில் வியப்பு ஒன்றுமில்லையே. ஸத்துக்களையும் ஸாதுக்களையும் நிஷ்காரணமாகப் பழிப்பதையே போதுபோக்காகக்கொண்டவர்கள் சிறிது விவேகிகளாயிருந்தால் ஒன்று ஆலோசிக்க வேண்டும்; மஹான்களைப்பற்றித் தாங்கள் செய்யும் நிந்தைகளினால் தங்களுக்கு ஜன்மஸாபல்யமாகிற வொரு லாபம் ஸித்தித்தாலும் அந்த மஹான்களுக்கு என்ன நஷ்டமுண்டாகு மென்பதை மாத்திரம் சற்று விமர்சிக்கவேணுமவர்கள்.

உலகர்களே! அன்பு வைத்திருப்பாருடைய அன்பைக் குலைக்கவேணுமென்று நினைத்து எவ்வளவு தோஷங்களை நிரூபணம் செய்தாலும் "ஊரவர் கவ்வை யெருவிட்டு" என்ற கணக்கிலே மெய்யன்பருடைய அன்பு மேன்மேலும் பெருகுவதற்கு ஹேதுவாகுமே யல்லது தோஷ நிரூபணங்களினால் அபூர்வமாக ஏதுவும் ஸித்திக்கமாட்டாதன்றோ.

தூஷிக்கவேண்டிய காரணம் பூர்த்தியாக இருந்தாலும் கூட தூஷிக்கும் வழியைக் கனவிலுமறியாமல் பூஷிப்பதே செய்வார் சிலர். பூஷிக்கவேண்டிய காரணம் பூர்த்தியாக இருந்தாலுங்கூட தூஷிப்பதையே தொழிலாகக் கொள்வர் பலர்; எங்கும் தூஷிப்பவர்கள் எப்படிப்பட்டவர்களை தூஷிக்கிறார்களென்று பார்க்கவேணும். பலபல மஹான்களால் கொண்டாடப் படுகின்றவர்களைத்தான் தூஷிப்பார்கள். யோக்யதை யில்லாதவர்களை தூஷிப்பதனால் எப்படித் த்ருப்தியுண்டாகும்? அதை யார் கவனிப்பார்கள்? அது பயனற்ற பணிபாதுமே. நானுனுட்டானங்கள் நிரம்பியும்; பல வகைகளில் புகழ்பெற்றும், பலரால் வணங்கப்பட்டும் விளங்குகின்ற மஹான்கள்பேரில்தான் தூஷணைகள் ஏற்படுமேயல்லாது 'யாரோ வழிப்போக்கர்கள்' என்னும்படியான ஸாமான்ய ஜனத்தின் மீது பைத்தியக்காரன் கூட தூஷணைகள் செய்ய மனங்கொள்ளமாட்டான். ஆகவே எந்த நபரின் மீது விசேஷ தூஷணைகள் ஏற்படுகின்றனவோ அதுவே காரணமாக அந்த நபர் மிக்க பெருமை வாய்ந்தவர் என்பது தேறியதாகும். உண்மையில் அவர் பெருமை வாய்ந்தவராக இல்லாவிடினும், தூஷணைகள் ஏற்படுவது காரணமாகவே அவர்க்குச் சிறந்த பெருமை அவசியம் ஒப்புக்கொள்ளவேண்டியதாகும். அமுதனார் அருளிய இராமானுச நூற்றந்தாதியில் "**பழிக்கில் புகழ்**" என்றொரு வாக்கம் இருப்பது ப்ரஸித்தமே. அதன் பொருளையே இங்கு நாம் விவரித்தோம்.

மஹான்களைப் பிறர் தூஷிப்பதானது உண்மையில் பூஷிப்பதாகவே முடிவு பெறும். அவர்களுடைய கீர்த்தி எங்கும் நன்றாகப் பரவுதற்கு தூஷணைகளே பெரிய கருவியாகும். பூஷிப்பது ஒரு மூலையில் அடங்கிப்போகும். தூஷிப்பதுதான் உலகமெல்லாம் பரவும். பாகவத தூஷணையாக ஒரு புத்தகம் வெளிவந்தால் அது எத்தனை பக்கமாயிருந்தாலும் எவ்வளவு வேலையிருந்தாலும் விட்டிட்டு வெகு ரஸமாக வாசிக்க ருசியுண்டாகும். 'மெய்ஞ்ஞானவிளக்கம்' என்று ஒன்று வெளிவந்தால் அது நாலேபக்கமாயிருந்தாலும் வாசிக்கத் தொடங்கும்போதே கண்ணுறக்கமதாகும். உலகப்போக்கு இது. ஓரிடத்தில் இருவர் கூடி ஒரு மஹானைப்பற்றிப் புகழ்ந்து பேசிக்கொண்டிருந்தால் அங்கு மூன்றாவது நபர் வந்து சேருவது மிகவும் அரிது. அதுவே மஹானைப்பற்றி தூஷிக்குமிடமாயிருந்தால் நாலு நிமிஷத்தில் நானூறுபேர்கள் கூடிப் பிரளயமாகும். இயற்கையாகவே ஸகலஜனங்களுக்கும் பரதூஷணைகள் செய்வதிலும் அவற்றை ஆதரவோடு கேட்பதிலுமே விருப்பம் செல்லும். இவ்வியல்வுக்குத் தப்பிப் பிழைப்பவர் யாரோ சிலர். ஸ்ரீராமாயண கதைகளில் ஒரு சிறிதும் தெரிந்து கொள்ளாதவர்களும் 'ராமன் வாலிவதம் செய்தது மிகவும் தப்புத்தான்' என்று தூஷியாமலிருப்பதில்லை. ஸ்ரீ பாகவதம் ஸ்ரீ விஷ்ணுபுராணம் ஹரிவம்சம் முதலானவற்றில் ஒரு வரியும் காணாதவர்களும் கேளாதவர்களுங்கூட 'கிருஷ்ணன் கோபிகளோடு விளையாடினது மிகவும் பிசகுதான்' என்று தாராளமாகத் தூஷித்தே தீருவார்கள். [அங்ஙனம் தூஷிப்பவர்களிடத்தில்தான் பகவானுக்கு மிகவும் உகப்பு என்று நூல்கள் முறையிடுகின்றன.]

ஸ்ரீராமபிரானுடைய பெருமைகளை விளக்கினது யார்? என்று கேட்டால், ராவணன் என்றுதான் விடை கூறுவார்கள். கண்ணபிரானுடைய பெருமைகளை விளக்கினது யார்? என்று கேட்டால், கம்ஸன், சிசுபாலன் என்றுதான் விடை கூறுவார்கள். இத்தகைய பெரும் பாக்கியம் ராவண சிசுபாலாதிகளுக்குத் தவிர லக்ஷ்மணன், மாருதி விபீஷணன் போல்வாருக்கும் நேரவில்லை. இவ்வுலகம் நீடூழி வாழ்வதற்கே ராவண சிசுபாலாதிகள் காரணமாயினர். கூரத்தாழ்வானுக்குப் பெருமை விளைத்தவர் நாலூரான்; நம்பிள்ளைக்குப் பெருமை விளைவித்தவர் தன்னுபுகழ்க் கந்தாடைத் தோழப்பர்; இப்படியே ஒவ்வொரு மஹானுடைய பெருமையையும் விளக்குவதற்கு அவ்வக்காலங்களில் பலபல பெருந்தகையாளர் தோன்றிக்கொண்டே வருகின்றனர். அப்படித் தோன்றுமவர்கள் கம்ஸ சிசுபாலாதிகளின் காயாதிகளேயாவர்.

நாம் நம்முடைய தோஷங்களையே எப்போதும் அநுஸந்தானம் செய்துகொண்டிருக்க வேணுமென்று பெரியாரிடம் கேட்டு அறிந்திருந்தும் அதை மறந்து நம்மிடத்தில் இல்லாத குணங்களையே நாம் வெளியிட்டுக் கொண்டும் குற்றங்களை மறைத்துக் கொண்டும் தவறுதலாகப் போது போக்கி வருகிறோம். இந்நிலைமையில் நமது குற்றங்குறைகளை உண்மையாகச் சிலர் எடுத்து வெளியிட்டால் இதனில் விஞ்சிய மஹோபகாரம் வேறு என்ன உளது? அவர்கட்கு *பொன்னுலகாளீரோ புவனிமுழுதாளீரோ* என்று உபயவிபூதியையும் பரிசளித்தாலும் போதாதே. நிந்தை செய்பவர்கள் தற்காலத்தில் நமக்கு எவ்வளவோ கொடுமையை விளைத்தாலும் அதை நாம் நன்மையாகவே கொண்டு நூறாயிரமும் பரிசளிப்பதுபோலவே இந்த நிந்தனிபுணர்களுக்கும் வாஸ்தவமாய் எவ்வளவோ பரிசளிக்கவேண்டுமே. ... ...

நான்காம் அமுதவெள்ளம் முற்றிற்று.

ஐந்தாம் அமுத வெள்ளம்.

'வஸிஷ்டஸ் ஸமாநாநாம் பவதி' என்று வேதபுருஷன் அநுக்ரஹித்த கட்டளையிலே சிலர் ஸஜாதீயர்களுக்குள்ளே மேம்பட்டு யாவரும் வந்தடி வணங்கி நிற்க நேர்ந்தால் அது கண்டு பொறுத்திருப்பதென்பது எளிதான காரியமோ? எப்படி பொறுத்திருக்க முடியும்? ஒரு நாளும் பொறுத்திருக்க முடியாது. ***பரகீயயசோக்நிதஹ்யமாநா:*** என்கிற ச்லோகம் ப்ரஸித்தமன்றோ. பிறர்க்கு ஒரு கீர்த்தி யுண்டானால் அது பெரிய காட்டுத் தீயன்றோ; அதனால் கதுவப்படாமல் யாரால் வாழ முடியும். இதை யெழுதுகிற நம்மோடு பிறரோடு வாசியற உலகம் முழுவதும் பெரும்பாலும் பொறாமைக்கு இருப்பிடமே. ஸ்ரீ பெரும்பூதூரில் கீர்த்தி மூர்த்தியான குண்டலம் ஸ்வாமி யென்றும் மற்றொரு ஊரில் மற்றொரு ஸ்வாமி யென்றும் சொல்லப்படுகிற யாரோ சில மஹான்கள் இந்நிலத்தில் தப்பிப் பிறந்தவர்கள். நம்போன்ற பூரியர், 'பக்கத்தகத்துக்காரர் வாழ்ந்தால் பத்து பட்டினி' என்கிற பழமொழியின்படியன்றோ பொறாமையே வடிவெடுத்துப் பிறந்திருப்பது. பெருமை பெற்றவர்களென்று விளங்கும் பெரியாருடைய பெருமைகட்குக் குறைபாடு விளைவிக்க வேணுமென்று கருதியும், இன்னும் எவ்வளவோ ஆச்சரியமான எண்ணங்கள் கொண்டும் ஸதாகாலமும் இதுவே ஞாபகமாய், இரவும் பகலும் வேறொரு வேலையுமின்றிக்கே, பெரியகோட்டை பிடிப்பாராகவும், உலகையே தம் கைப்படுத்துவாராகவும்,

ஸகலஸித்தியும் பெறுவாராகவும் எண்ணி, நித்தியமும் வீதிகள்தோறும் திண்ணைகள் தோறும் குழாங்கூடி தூஷணைகளை வழங்கி வருகிறார்களல்லவா? இக்காரியத்தை அவர்கள் எந்த எண்ணத்தோடு செய்கிறார்களென்பதைப்பற்றி நாம் கவனிக்கத் தேவையில்லை. அவர்களது எண்ணம் எதுவாயினுமாகுக, இக்காரியம் அவர்களுக்குச் சிறந்த நன்மையையே தரக்கூடியதென்பதில் சந்தேகமில்லை, மேன்மேலும் அவர்கள் இதில் நல்ல உற்சாகத்தோடும் விடாமுயற்சியோடும் இருந்து வரும்படிக்கு பக்தவர்க்கங்கள் யாவரும் காப்பிடக் கடமைப்பட்டவர்கள்.

ஐயோ! அவர்கள் செய்வது தூஷணையல்லவோ என்று யாரும் நினைக்கலாகாது, இகழலாகாது, வருந்தலாகாது, பிரதி செய்ய நினைக்கலாகாது. நாம் நூற்றுக்கணக்காகப் பணம் கொடுத்துச் சேவகர்களை நியமித்தாலும் இவ்வளவு நலமான காரியம் நடைபெறாது. ஒரு வ்யக்தியின் திருநாமத்தை ஆங்காங்கு மூலை முடுக்குகளிலுள்ளவர்களும் பல பேர்களாகக் குழாங்கூடிச் சிந்தனை செய்யும்படியாகப் பெரு முயற்சி செய்து வருகின்ற பெரியார்கட்கு நித்ய ஸ்ரீர் நித்யமங்களமென்று பல்லாண்டு பாடுவதே பாங்காகும்.

நாம் பெருமாள் ஸன்னிதிக்குச் சென்று பெருமாளைப் பரமபக்தியுடன் ஸேவிப்பது தியானிப்பது கைங்கரியங்கள் செய்வதாகிய இவையெல்லாம் எதனால் நடக்கிறதென்றால் அந்தப் பெருமாள் நம் கண்ணுக்குப் புலப்படாமலும் பேசாமலும் நாமிட்டது சட்டமாகவும் இருப்பதனாலேயே. அவர் விபவாவதாரங்களில்போலே கண்காண நின்று காதாரப் பேசித் தம்முடைய ஜ்ஞானசக்திகளைத் காட்டிக் கொண்டிருந்தாராகில் அவரையும் நாம் தூஷிக்கவே தலைப்படுவோம். இதில் ஸந்தேஹமுண்டோ? இதைத்தான் ஸ்ரீவசநபூஷணத்தில் "கண்காண நிற்கில் ஆணையிட்டு விலக்குவர்களென்று கண்ணுக்குத் தோற்றாதபடி நின்று" என்கிற அத்புதஸூக்தியினால் அருளிச் செய்தார். நாம் ராமானுஜர் என்றும், நம்பிள்ளையென்றும், தேசிகனென்றும், மணவாளமாமுனிகளென்றும் இப்படி வாய் வெருவுவதெல்லாம் தெய்வாதீனமாய் அவ்வாசாரியர்கள் இந்நிலத்தைவிட்டுத் திருநாடு சென்று சேர்ந்தபடியாலே—என்பதையும் திண்ணமாக உணரவேண்டும். அவ்வாசாரியர்கள் ஜீவித்திருந்த காலத்தில் இந்த நாமும் பிறந்துதானிருந்தோம்; அப்போது அவர்களை தூஷித்துக் கொண்டும் பலவாறு பரிபவித்துக்கொண்டும் போதைப்போக்கினோம். அந்த நாமே இப்போது ஸ்வாமி ஸ்வாமி யென்று குழைவதற்கு என்ன காரணமென்றால்,—அவர்களுடைய உண்மையான அப்ரதிம யோக்யதைகளை யறிந்து நெஞ்சு கனிந்திருப்பார் யாரோ சில மஹான்கள் இந்தளத்திலே தாமரை பூத்தாற்போன்றவர்கள் இருக்கட்டும். பெரும்பான்மையோர்கள் அவர்களைப் போற்றுவதெல்லாம் "அவர்கள் என்றைக்கோ இருந்து மறைந்துபோனவர்கள்தானே; அவர்களைக்கொண்டாடுவதனால் நமக்கென்ன நஷ்டம்" என்கிற இந்த ஒரே யெண்ணந் தொண்டுதான். யோக்யதையை யறிந்து உகப்பவர்களாயும் பொறுமையற்றவர்களாயு மிருந்தால் அவர்களுடைய பேதுபோக்கு எப்படியிருக்கு மென்பதை நாம் சொல்லவேணுமோ? "பிறர்மினுக்கம் பொறுமை யில்லாப் பெருமையும் பெற்றோமே" என்றருளிச்செய்தவர் மணவாளமாமுனிகளொருவரே யல்லாது மற்றொருவருமல்லரே.

அஸூயையை வெல்வதென்பது ஆராலுமாகாது. "மற்றுமொருத்தருமிப் பிறவி யென்னும் நோய்க்கு மருந்தறிவாருமில்லை" என்று பெரியாழ்வார் ஸாதித்தார்; அந்த மருந்து அறிவார் இருந்தாலும் இருக்கக்கூடும்; பொறாமை யென்னும் நோய்க்கு மருந்தறிவாராரு மில்லை யென்பதே ஸத்யம். யோக்யதையுண்டாவதென்பது தனிப்பட்ட ஒரு அத்ருஷ்ட விசேஷம். அஃதில்லாதவர்கள் அஃதுடையாரிடத்திலே பொறாமைப்பட்டுச்சாகவேண்டியது தலைவிதியாகிறது. படியாதவர்களின் வாயில் ஒரு ஸம்ஸ்க்ருதாக்ஷரமும் வரமாட்டேனென்கிறது. குதிரை புரீஷவிஸர்ஜனம் செய்யும்போது அதன் ஆஸனம் படுகிறபாடு படுகிறதாயிற்று அவர்களின் சோதிவாய். அப்படிப்பட்டவர்கள் பல கலைகளிலும் ஒப்புமுயர்வுமற்ற யோக்யதைபெற்ற பாக்யசாலிகளைக் கண்டால் "என்ன நோன்பு நோற்றாள் கொலோ! இவரைப் பெற்ற வயிறுடையாள்" என்று கொண்டாட மனமில்லையானாலும் அரிய பெரிய யோக்யதை பெற்ற மஹான்களென்று மனத்திற்குள்ளேயாவது மகிழ்ந்திருக்க முடியாமற்போனாலும் அவர்களைப்பற்றி ஒன்றும் நினையாதே—உகப்பு வெறுப்பு இரண்டுமின்றிக்கே உதாஸீநபாவமாவது வஹிக்கலாமே; அந்தோ! தமக்குள்ள சக்தி முழுவதையும் அப்பெரியார்களுடைய நிந்தையாகிற அஸஹ்யாபசாரத்திலேயே செலுத்தி எற்றைக்கு மேழேழ் பிறவிக்கும் இப்படியே நிரக்ஷரகுக்ஷிகளாய் ஜனிக்கவே க்ருஷிபண்ணிப்போருகிறார்களே! என்று ப்ராதஸ் ஸ்மரணீய திவ்ய கீர்த்தி மூர்த்தியான அஸ்மதுபாத்யாய சரண ஸ்ரீ மாம்பள்ளம் ஸ்வாமி அடிக்கடி ஸாதிக்கக் கேட்டதுண்டு. ***ஸ்வபாவோ துரதிக்ரம:*** என்று கொண்டு இப்படிப்பட்ட அஸஹ்யாபசாரிகளை நெஞ்சாலும் இட்டெண்ணாமலிருக்க வேண்டுமே தவிர நொந்து பயனில்லை யென்பர் மஹான்கள்

உபஸம்ஹாரம்

இலங்கையில் அசோகவனத்தில் ஏகாக்ஷி ஏககர்ணி முதலான எழுநூறு ராக்ஷஸிகளிடையே வாழும் ஸீதாபிராட்டி இராவணனுக்குப் பரமகருணையினால் பலபல ஹிதங்களைச் சொல்லுகிறாள்; அந்த ச்லோகங்களை வால்மீகிராமாயணத்தில் வாசிக்கும்போது கல்லும் கரையும்; மரங்களுமிரங்கும். அந்த ஸந்தர்ப்பத்திலுள்ள ச்லோகங்களுள் விலையில்லாமாணிக்கமென்னும் படியான ச்லோகமொன்றே நம் ஆசாரியர்களின் திருவுள்ளத்தில் சிறந்து திகழ்வது; அதாவது.

"இஹ ஸந்தோ ந வா ஸந்தி ஸதோ வா நாநுவர்த்தஸே.
ததாஹி விபரீதா தே புத்திராசாரவர்ஜிதா."

என்பது. இதற்குப் பெரியவாச்சான் பிள்ளையின் வியாக்கியானம் பேரின்பமேவடிவெடுத்தது. நாடோறும் காலையெழுந்தவுடனே அதை ஐந்து நிமிஷமாவது ஸேவிக்கப் பெற்றால் அது நம்முடைய ஆத்ம க்ஷேமக்ருஷிக்கு நல்லுரமான எருவிட்டதாகும். பிராட்டி இலங்கையைச் சுற்றிப்பார்த்தாள். அங்கு இல்லாத வஸ்து எதுவுமேயில்லையென்று தோன்றிற்று. ஸ்வர்க்கலோகத்திலும் காணக் கிடைக்காத பொருள்கள் இலங்கையில் சேமித்துவைக்கப்பட்டிருந்ததாகத் தெரியவந்தது. ஆனால் ஒரே ஒருவஸ்து இல்லையென்று குறை தோன்றிற்று; அந்த வஸ்து எதுவென்ன; [**இஹ ஸந்தோ ந.**] அப்பா! ராவணா! மனமும் மதியும் நல்வழியிற் செல்லும்படி நல்லவுபதேசங்களை நிச்சலும் நல்கவல்ல நல்லார்கள் இவ்வூருக்கு அவச்யமல்லவா? அப்படிப்பட்ட ஸத்துக்களைத்திரட்டி இங்கு நீ கொண்டு சேர்க்கவில்லையே! ஒவ்வொரு க்ராமத்திற்கும் நகரத்திற்கும் மருத்துவர்

கள் எப்படி அவச்யமோ அப்படி நல்லுபதேசம் நல்கவல்ல நல்லார்களும் அவச்ய மென்று உணராய். தேஹத்திற்கு நேரும் வியாதிகளைப் போக்குவதற்கு வைத்யர்கள் வேண்டும்; ஆத்மாவுக்கு நேரும் நோய்களை விலக்குவதற்கு ஸத்துக்கள்வேண்டும். இது உனக்குத்தெரியாததன்றே. உண்பாரும் உறங்குவாரும் உடுப்பாரும் அடிப்பாருமே யான இப்பெரிய வூரிலே ஐயோ! ஸத்துக்களைத் திரட்டிவைத்தாயல்லையே என்று வருந்திச் சொன்னாள் பிராட்டி.

உடனே ஆலோசித்தாள்; தவறுதலாகச் சொல்லிவிட்டோமென்று தோன்றிற்று. அகம்பநன் மாரீசன் மால்யவான் விபீஷணன் முதலானவர்கள் [கும்பகரணனுங்கூட] ஆச்சரியமான உபதேசங்களைச் செய்தவர்களென்பது ப்ரஸித்தமாகையாலே அப்படிப்பட்ட ஸத்துக்களிருக்க, ஸத்துக்களில்லை யென்று சொன்னேனே யென்று வருந்தி [ஸந்தி] என்கிறாள். ஸத்துக்கள் இருக்கிறார்கள், அதிலொரு குறையில்லை என்றபடி. இடையில் (வா) என்றது பூர்வபக்ஷவ்யாவர்த்தகம். "இஹஸந் தோ ந வா ஸந்தி" என்பதை ஒரேவாக்யமாகக் கொண்டு இவ்வூரிலே ஸத்துக்களில்லையா?' என்பதாகப் பொருள் கூறுவர் பலர். நம்பிள்ளை திருவுள்ளத்தில் தோன்றுகிற அர்த்தம் விலக்ஷணமாக வன்றோ விருக்கும். இவ்வூரில் ஸத்துக்களில்லையோவென்று முதலிலே சங்கித்து, எனில்லை நன்றாகவுண்டு என்று முடிப்பதான அர்த்தமே சுவைமிக்கது. ஸத்துக்கள் இருந்தும் அவர்களுடைய இருப்பு கார்யகரமாகவில்லையே யென்கிற வருத்தத்தை உடனே காட்டுகிறாள் [ஸதோ வா நாநுவர்த்தஸே] என்று. ஸத்துக்களெல்லாரும் நம்மாழ்வாரையும் எம்பெருமானாரையும் போன்றவர்களல்லரே. *பயனன்றாகிலும் பாங்கல்லராகிலும் செயல் நன்றாகத் திருத்திப் பணிகொள்ளவேணுமென்கிற உதாரமான எண்ணம் ஸத்துக்களெல்லார்க்கும் எளிதாக வுண்டாய் விடுமோ? *சொன்னால் விரோதமிது ஆகிலும் சொல்லுவன் கேண்மினோ* என்றார் நம்மாழ்வார். பாருலகிலாசையுடையோர்க்கெல்லாம் ஆரியர்காள்! கூறுமென்று பேசி வரம்பறுத்தார் எராஜெதிராசரின்னருளால்; இப்படிப்பட்ட பெரும்புகழ் எல்லார்க்கும் வாய்க்குமோ? அநுவ்ருத்திப்ரஸந்நர்களாகவன்றோ பெரும்பாலும் ஸத்துக்களிருப்பது. அன்னவர்களை அநுவர்த்தித்தன்றோ ஹிதோபதேசம் பெறவேணும், அந்தோ! அது செய்யமாட்டிற்றிலையே யென்றாள் பிராட்டி. "ஸதோ வா நாநுவர்த்தஸே" என்கிற இவ்வார்த்தை எவ்வளவு கம்பீரமானது! ஸத்துக்களை அநுவர்த்தித்தே ஹிதோபதேசங்கள் பெறவேணுமென்பதை எவ்வளவு அழகாகக் காட்டுகிறாள் காண்மின்.

ஸத்துக்களைப்பணிந்து ஹிதோபதேசங்கள் கேட்கப்பெறாதவர்களுக்கு விளையும் அநர்த்தத்தை உத்தரார்த்தத்தாலே காட்டுகிறாள் [ததாஹி விபரீதா தே புத்திராசார வர்ஜிதா] என்று. ஸத்துக்களின் அநுவர்த்தனமில்லாதவர்களினுடைய புத்தியும் ஒழுக்கமும் விபரீதமாகத்தானிருக்குமென்று இதனால் காட்டினபடி. ஏதேனுமொருபடி ஸதுபதேசப்ராப்திக்கு ஆசைப்படுவர்கள் ஆஸ்திகர்கள். ... ... *

ஸ்ரீகாஞ்சீ அண்ணங்கராசாரியர்
எழுதிய
அங்கண்மாஞாலத்தமுது
முற்றிற்று.

பராசக்தி பவர் பிரஸ், பூங்கில்மண்டபம் எதிரில், காஞ்சீபுரம்.

யித்தனே. [நः பத்ராணி தந்வந்து.] விஹாரங்களைச் செய்தருளிய நம்பிமூத்தபிரான் நமக்கு க்ஷேமங்களை யளித்தருள வேணுமென்பதே பரமதாத்பர்யம். விஹாரங்களினிடத்தே ப்ரார்த்திப்பதானது விஹார கர்த்தாவினிடத்தே ப்ரார்த்திக்கிறபடியாமத்தனை. ... . (9)

नाथायैव नमःपदं भवतु नश्चित्रैश्चरितक्रमैः भूयोभिर्भुवनान्यमूनि कुहनागोपाय गोपायते ।
कालिन्दीरसिकाय कालियफणिस्फारस्फटावाटिकारङ्गोत्सङ्गविशङ्कचङ्क्रमधुरापर्यायचर्यायते ॥ १०

நாதாயைவ நம:பதம் பவது ந: சித்ரைச் சரித்ர க்ரமை:
பூயோபிர் புவநாந் யமூநி குஹநாகோபாய கோபாயதே
காளிந்திரஸிகாய காலியபணி ஸ்பாரஸ்படா வாடிகா
ரங்கோத்ஸங்க விசங்கசங்க்ரமதுரா பர்யாய சர்யா யதே. (௰)

பக்கலக்கப் பிழைதிருத்தம் (கவனிக்க)

—o—

ஸ்ரீராமாநுஜன் நெ. 93-ல் தேசிக ஸ்தோத்ரவுரை அச்சிட ஆரம்பமாயிற்று. அதில் 1—16 பக்கங்கள் வெளியாயின. அடுத்தபடியாக நெ. 94-ல் 17—32 பக்கங்கள் வெளியாயின. அதற்கடுத்தபடியாக நெ. 96-ல் வெளியாகும்போது பக்கலக்கம் 33 ஆரம்பிக்க வேண்டியிருக்க, தவருக 49 ஆரம்பமாய்விட்டது. பாரம் நெம்பரும் 5-க்கு பதிலாக 7 என்று விழுந்துவிட்டது. இப்படி நேர்ந்த பிழையினல் 33—48 பக்கங்கள் இல்லையே யென்று பலர் சிந்திக்க வேண்டியதாயிற்று. அச்சுக் கூடத்தில் நேர்ந்த இவ்வச்சுப் பிழையை யாவரும் கவனிக்கவேணும்.

ஸ்ரீராமாநுஜன் 96-ல் தசாவதார ஸ்தோத்ரம் ஆரம்பமுள்ளது. அந்தப் பக்கத்திற்கு 49 என்கிற லக்கம் பிசகு. விஷயம் யாதும் விடுபடவில்லை. அந்த 96-ம் நெ. ஸஞ்சிகையில் 49—64 என்கிற பக்கலக்கங்களை 33—48 ஆகத் திருத்திக்கொள்ள வேண்டியது அவசியம். அதனல் இப்போது பக்கலக்கம் 65 என்று கொடாமல் 49 தான் ஆரம்பமாகிறது. பாரலக்கமும் 7 தான் இடப்படுகிறது. இந்தப்பிழைகளை அவரவர்கள் மசியால் திருத்திக்கொள்ளவே வேண்டும். பக்கலக்கங்களை கவனிக்காமல் விஷயத்தின்மீது சென்றல் ஒன்றும் விடுபட்டிராது. பாரங்களை ஸஞ்சிகையிலிருந்து பயிண்டு செய்வதற்காகப் பிரித்தெடுக்கும்போது கோளாறு ஏற்படும்; அது ஏற்படாமைக்காக இந்தத் திருத்தம் தெரிவிக்கப்பட்டது.

பூயோபிஃ சித்ரைஃ சரித்ரக்ரமைஃ	பலவகைப்பட்ட ஆச்சர்ய சேஷ்டித விசேஷங்களாலே
அமூநி புவநாநி	இந்தவுலகங்களை
கோபாயதே	காத்தருள்பவனும்
காலிந்தீ ரஸிகாய	யமுனைத்துறை விளையாட்டில் ருசி கண்டவனும்
காளியபணி ஸ்பார ஸ்படா வாடிகா ரங்க உத்ஸங்க விசங்க சங்க்ரம தாரா பர்யாய சர்யாஃ	காளிய நாகத்தின் விசாலமான பணமண்டலமாகிற நாட்ய மண்டப மத்யத்திலே நிர்ப்பயமாக நடனத்தை நிர்வஹிப்பது முதலான செயல்களை
யதே	அடைந்திருப்பவனுமான
குஹநாகோபாய நாதாய ஏவ	கோபாலக்ருஷ்ண பகவான் பொருட்டே
நஃ நமஃபதம் பவது	நமது நமஸ்காரோக்தியாகுக.

* * * ஸ்ரீ க்ருஷ்ணாவதார சேஷ்டிதாநுபவபரமாய்ச் செல்லுகிறது இந்த ச்லோகம். கீழ் ச்லோகத்திலே நம்பிமூத்தபிரானுடைய சரித்திரமும் கண்ணபிரானுடைய சரித்திரமும் ஒன்றுகூடியே பரமபோக்யமாகின்றன வென்றதனால் அவ்விரண்டு திருமூர்த்திகளும் ஒருவரையொருவர் விட்டுப் பிரியாமல் கூடியே களிப்பர்களென்பது தெரிவிக்கப்பட்டது. ஒருகால் ஒருவரை யொருவர் விட்டுப் பிரிந்தவாறே நிகழ்ந்த நிகழ்ச்சியை இந்த ச்லோகத்தினால் [உத்தரார்த்தத்திலே] அருளிச் செய்து அநுபவிக்கிறார்.

[**நஃநமஃ பதம் நாதாயைவ பவது**] * நம உக்திமதீமஹே * நமோவாகமதீமஹே * என்னுமாபோலே சொல்லுகிறதாயிற்றிதுவும். வாசிகமான ப்ரணாமோக்தியும் காயிகமான ப்ரணாமாநுஷ்டானத்தின் ஸ்தானத்திலே நின்று காரியகரமாகக் குறையில்லை. கோபீ ஜநநாதனென்றும் யதுகுலநாதனென்றும் மதுராநாதனென்று மிப்புடைகளிலேயுள்ள ப்ரஸித்திகளைத் திருவுள்ளம்பற்றி **நாதாய** என்றருளிச் செய்தது கண்ணபிரான் பொருட்டு என்றபடி. [**குஹநா கோபாய**] அவனுடைய பராத்பரமான ஸ்வரூபத்திலே யாதவத்வ கோபாலத்வாதிகள் ஒன்றும் இல்லையாயிருக்கச் செய்தேயும் ஸ்வஸங்கல்பத்தாலே கோபாலத்வத்தை ஆவாஹநம் செய்துகொண்டபடி. குஹநாசப்தார்த்தமிதுவேயாகக்கடவது. கோநிரை காப்பதற்குக் கோவர்த்தனமென்னுங் கொற்றக் குடையை யெடுத்தபோது * கொடியேறு செந்தாமரைக் கைவிரல்கள் கோலமுமழிந்தில வாடிற்றில வடிவேறு திருவுகிர் நொந்துமில * என்னும்படியாக ஏழுநாள் ஏகரூபமாக நின்றவளவிலே இடையர்களெல்லாருங்கூடி இவனைத் தேவனாக அதிசங்கித்துக் கேள்வி கேட்கையில் * **அஹம் வோ பாந்தவோ ஜாதஃ** * என்று, நானும் இடையர்களாகிற வுங்களுக்குள்ளே ஒரு இடையனாகப் பிறந்தவனே யல்லது தேவனுமல்லேன் தானவனுமல்லேன் என்றான். இதையிட்டு "தேவத்வமும் நிந்தையானவனுக்கு ஒளிவரும் ஜநிகள் போலே" என்று ஆசார்ய ஹ்ருதய சூர்ணையவதரித்தது. கோபாலனாகிச் செய்த செயல்களெல்லாம் லோகஸம்ரக்ஷணத்திலேயே உபக்ஷீணங்களென்கிறார் [**பூயோபிஃ சித்ரைச் சரித்ரக்ரமைஃ அமூநி புவநாநி கோபாயதே**] என்பதனால். கன்றுகளோடச் செவியில் கட்டெறும்பு பிடித்திட்டது, எண்ணெய்க் குடத்தை யுருட்டியிளம்பிள்ளை கிள்ளியெழுப்பிக் கண்ணைப் புரட்டி விழித்தது, வெண்ணெய் விழுங்கி வெறுங் கலத்தை வெற்பிடையிட்டதனோசை கேட்டது, அருகிருந்தார்தம்மை யநியாயஞ் செய்தது, இல்லம் புகுந்தொரு மகளைக் கூவிக் கையில் வளையைக் கழற்றிக்கொண்டு கொல்லையில் நின்றுங் கொணர்ந்துவிற்ற அங்கொருத்திக்கு அவ்வளை கொடுத்து நல்லன நாவற்பழங்கள் கொண்டு நானல்லேனென்று சிரித்தது, ஆற்றிலிருந்து விளையாடுவார்களைச் சேற்றாலெறிந்து வளைதுகில்கைக் கொண்டு காற்றில் கடியனா

யோடியகம்புக்கு மாற்றமும் தாராதிருந்தது, வண்ணக் கருங்குழல் மாதர்வந் தலர் தூற்றிடப்பண்ணிப் பலசெய்து பாடியெங்குந்திரிந்தது, சந்தமலர்க்குழலாளொருத்தி தனியே விளையாடுமிடங் குறுகிப் பந்துபறித்துத் துகில்பற்றிக் கீறிப் படிறுசெய்தது, புள்வாய் பிளந்து சகடமிறச் சாடிப் பேய்ச்சிமுலை சுவைத்து மாவாய் பிளந்து மருதஞ் சாய்த்து அளை வெண்ணெயுண்டாப்புண்டிருந்தது முதலான சரிதைகளிலே எதைச் சிந்தித்தாலும் * ஜந்ம கர்ம ச மே திவ்யம் ஏவம் யோ வேத்தி தத்வத꞉, த்யக்த்வா தேஹம் புநர் ஜந்ம நைதி மாமேதி ஸோர்ஜுந * என்று தானே, கீதையில் அருளிச்செய்தபடியே ஸம்ஸாரபந்த விமுக்தி பூர்வக மோக்ஷப்ராப்தியே பலிக்குமாகையாலே "**சித்ரரைச் சரித்ரக்ரமை꞉ அமுநி புவநாநி கோபாயதே**" என்னக் குறையில்லையிறே. * வதுவை வார்த்தையு ளேறுபாய்ந்ததும் மாயமா விளைவாய் பிளந்ததும் மதுவைவார் குழலார் குரவை பிணைந்த குழகும், அதுவிதுவுது வென்னலாவனவல்ல என்னையுன் செய்கை நைவிக்கும் * என்று நம்மாழ்வாரும், * **இங்கிதம் நிமிஷிதஞ்ச தாவகம் ரம்யமத்புத மதிப்ரியங்கரம்** * [ஸுந்தர பாஹுஸ்தவே] என்று ஆழ்வானுமருளிச் செய்தபடியே ஸ்ரீ க்ருஷ்ண சேஷ்டிதங்களிலே இதுவதுவுது வென்னும் வாசியின்றிக்கே ஒவ்வொன்றும் அநுஸந்தான மாத்திரத்தினால் ஸம்ஸாரி சேதந ஸம்ரக்ஷண ஸமர்த்தமாயிருக்குமாயிற்று.

[**காளிந்தீரஸிகாய**] தூய பெருநீர் யமுனைத் துறையிலே செய்த திருவிளையாடல்களையெல்லாம் நினைந்து நைந்துள் கரைந்துருகி அருளிச்செய்கிற விசேஷணமாயிற்றிது. பராத்பரனவன் விரஜாதீரத்தைவிட்டு இந் நிலத்திற்கு எழுந்தருளும்போதுகளில் அந்த விரஜைதானே ஸரயுவாகவும் யமுனையாகவும் வடிவெடுக்குமென்பர். அயோத்திமா நகரிலே ஸரயூநதியிருந்தும் சக்கரவர்த்தி திருமகனார் அதிலே புக்கு ஆடினமையை ஸ்ரீ ராமாயணம் ஓரிடத்திலும் தெரிவித்ததில்லை. க்ருஷ்ணாவதார சேஷ்டிதங்கள் பெரும்பாலும் யமுநாநதியை க்ருதார்த்தமாக்கினவைகாணும். * இங்குத்தை வாழ்வையொழியவேபோய் யமுனைக்கரைக்கென்னையுய்த்திடுமின் * என்றாளாண்டாள்; * ஸரயுக்கரைக்கென்னை யுய்த்திடுமின் * என்று பேசினாருமில்லை.

* காளியன் பொய்கை கலங்கப் பாய்ந்திட்டு அவன் நீண்முடியைந்திலும் நின்று நடஞ்செய்த வோரபதானத்திலே யீடுபட்டுப் பேசுகிறார் [**காளியபணிஸ்பாரஸ்படாவாடிகேத்யாதி**] யமுனையாற்றில் ஓர் மடுவில் இருந்துகொண்டு அம் மடு முழுவதையும் தன் விஷாக்னியினால் கொதிப்படைந்த நீருள்ளதாக்கிப் பெருங்கேடு விளைத்த காளியனென்னும் கொடிய நாகத்தைக் கொழுப்படக்க நினைத்த கண்ணபிரான் * பல்லவந்திகழ் பூங்கடம்பேறி அக்காளியன் பணவரங்கில் ஒல்லை வந்து உறப் பாய்ந்து அருநடஞ்செய்த வும்பர் கோன் *என்றும்* நஞ்சுமிழ் நாகங் கிடந்த நற்பொய்கை புக்கு அஞ்சப் பணத்தின்மேல் பாய்ந்திட்டருள் செய்த அஞ்சனவண்ணன் * என்றும் சொல்லுகிறபடியே அந்த நாகத்தின் தலைமீது நின்று நிச்சங்கமாகச் செய்த தாண்டவத்தைப் பேசுகிறபடி. இவ்வபதானத்தை யாதவாப்யுதயத்திலே அருளிச்செய்யுமிடத்து (4-125.) * अभजत यमुना विशुद्धिमग्र्यां शमितबहिर्मतसंप्लवा त्रयीव — அபஜத யமுநா விசுத்திமக்ர்யாம் சமிதபஹிர்மத ஸம்ப்லவா த்ரயீவ * என்று கூறினது இங்கே அநுஸந்தேயம். ஐந்தலைவாய்நாகமான காளியன் யமுனையாற்றைக் கலக்கிக் கெடுத்தது விஷவாக்குக்களான புறமதத்தவர்கள் யதேச்சமாகக் கூறும் தவறான பொருள்களாலே வேதத்தைக் கெடுத்தபடியென்றும், யமுனையில் நேர்ந்த கெடுதலைக் கண்ணபிரான் நீக்கி யமுனையை எல்லாரும் இனிமையாகப் பருகும்படி செய்தது—வேதத்தில் பிறர் கூறின அபராதங்களை எம்பெருமானார்போல்வார் நீக்கியருளி வேதத்தை ஸத்துக்களுக்கு உபஜீவ்யமாக்கினபடி யென்றும் அருளிச்செய்தவிது ஸ்வாபதேசார்த்த முறையிலே ஸுஸங்கதம். காளியன் ஐந்து தலைகளாலும் நஞ்சையுமிழ்ந்து நாசம் விளைத்ததுபோல் புறமதத்தவர்கள் ஐந்துவித

மான துர்வாதங்களாலே நாசம் விளைவிக்கின்றனர். எங்ஙனேயென்னில்; ஈச்வரனே யில்லை யென்னுதல், ஈச்வரன் உண்டெனிலும் அவன் அநுமானத்தினால் ஸித்திப்பவனே யன்றி சாஸ்திரத்தால் ஸித்திப்பவனல்லனென்னுதல், சாஸ்திரங்களைக் கொண்டே ஈச்வரனை யங்கீகரித்தும், அவனுக்குத் திருமேனியும், திருக்கல்யாண குணங்களும் இல்லை யென்னுதல், ஈச்வரன் ஒருவனே யல்லன், பல ஈச்வரர்களுளர் என்னுதல், பிரபஞ்சமே யில்லை, ஸர்வம் சூன்யம் என்னுதல்—ஆக இப்படிப்பட்ட ஐவகையான அபார்த்தங்களினால் புறமதத்தவர்கள் வேதங்களைக் கெடுக்க, அந்தக் கெடுதல்களைப் பரம வைதிக ஸார்வ பௌமர்கள் ஸ்வதிவ்யஸூக்தி ஸுதா வ்ருஷ்டிகளாலே போக்கியருள்வதுமன்றிக்கே, காளியன் தலையிலே கண்ணபிரான் அடியிட்டு நடனம் புரிந்தாப்போலே *நாவலிட்டுழிதருகின்றோம் நமன்தமர் தலைகள்மீதே* என்றும், *तदन्यमतदुर्मदज्वलितचेतसां वादिनां शिरस्सु निहितं मया पदमदक्षिणं लक्ष्यताम् तदंयमத துர்மத ஜ்வலித சேதஸாம் வாதிநாம் சிரஸ்ஸு நிஹிதம் மயாபதமதக்ஷிணம் லக்ஷ்யதாம்* என்றும் சொல்லுகிறபடியே தீயார்களின் தலைமீதடியிட்டுத் தாண்டவமுமாடுவர்கள்.

ச்லோகத்தின் முடிவில் பர்யாய சர்யாய, என்றும் தே என்றும் சிலர் பதம் பிரிப்பர்கள்; அது ஸங்கத மன்று; பர்யாய சர்யாः, யதே என்று பதச் சேதமாகக் கடவது. இண் தாதுவிலே சதர்ப்ரத்யயாந்தமாக நிஷ்பந்நமாகிற சப்தம் யந் என்பது; அதன் சதுர்த்த்யேக வசநரூபம் யதே என்பது. ப்ராப்நுவதே என்றபடி. .... *(ஞ)

भाविन्या दशया भवन्निह भवध्वंसाय नः कल्पतां कल्की विष्णुयशस्सुतः कलिकथाकालुष्यकूलंकषः ।
निश्शेषक्षतकण्टके क्षितितले धाराजलौघैर्ध्रुवं धर्मं कार्तयुगं प्ररोहयति यन्निस्त्रिंशधाराधरः ॥ ११

பாவிந்யா தசயா பவந்நிஹ பவத்வம்ஸாயநः கல்பதாம்
கல்கீ விஷ்ணுயசஸ்ஸுதः கலிகதாகாலுஷ்ய கூலங்கஷः,
நிச்சேஷக்ஷதகண்டகே க்ஷிதிதலே தாராஜலௌகைர் த்ருவம்
தர்மம் கார்த்தயுகம் ப்ரரோஹயதி யந்நிஸ்த்ரிம்ச தாராதரः. (11)

பாவிந்யா தசயா	இனி விளையப்போகிற அவதாரத்தோடு
இஹ பவந்	தசாவதாரப் பெருமாள் ஸன்னிதியான இவ்விடத்திலே ஸத்தை பெற்றிருப்பவரும்
விஷ்ணுயசஸ் ஸுதः	விஷ்ணுயசஸ்ஸென்பவர்க்குப் புத்திரனாக அவதரிக்கப் போகிறவரும்
கலிகதா காலுஷ்ய கூலங்கஷः	கலி கல்மஷங்களைத் தொலைக்கப் போகிற வருமான
கல்கீ	கல்கிபகவான்
நः பவத்வம்ஸாய கல்பதாம்	நமது பிறவித் துயரையறுக்க வல்லவராக வேணும். (கல்கிபகவானது பெருமையை விவரிப்பது உத்தரார்த்தம்.)
யத் நிஸ்த்ரிம்ச தாராதரः	எந்த கல்கி பகவானுடைய கத்தியாகிற காளமேகமானது
நிச்சேஷக்ஷத கண்டகே க்ஷிதிதலே	மிச்சமின்றி யொழிக்கப்பட்ட கண்டகர்களை [பாபிகளை]யுடையதாகச் செய்யப்பட்ட பூமண்டலத்திலே
தாராஜல ஓகைः	கத்தி முனையாகிய ஜல ப்ரவாஹங்களினாலே
கார்த்தயுகம் தர்மம்	க்ருதயுக தர்மத்தை
த்ருவம் ப்ரரோஹயதி	நிச்சயமாக அபிவிருத்தி செய்விக்கப் போகின்றதோ.

*** இனி பவிஷ்யத்தாகச் சொல்லப்படுகிற கல்கியவதாரத்தைப் பற்றிப் பேசுவது : கூரத்தாழ்வான் ஸுந்தரபாஹு ஸ்தவத்திலும், பட்டர் ஸ்ரீரங்க ராஜ ஸ்தவ - உத்தர சதகத்திலும் இவ்வவதாரத்தைப்பற்றி யருளிச்செய்கையில் "பகவானே! தேவரீர் கல்கியவதாரம் என்றைக்கோ செய்யத் திருவுள்ளம் பற்றியிருக்கிறது; அவ்வவதாரம் இப்போதே செய்தருள ஆவச்யகதையுள்ளபடியாலே எங்கள் கண்முகப்பே செய்தருளவேணும்" என்று அபேக்ஷித்தார்கள். பகவானுடைய எல்லா அவதாரங்களுமே தர்ம ஸம்ஸ்தாபநார்த்தமாகவானாலும் கல்கியவதாரம் விசேஷித்து க்ருதயுகதர்ம ப்ரவர்த்த நார்த்தமாகையாலே அது தன்னையருளிச் செய்கிறாரிங்கு.

கல்கியவதார கதைச் சுருக்கம் வருமாறு :—

புருஷோத்தமனாகிய ஸ்ரீமந்நாராயணன் க்ருஷ்ணாவதாரம் செய்தருளி மண்ணின் பாரத்தை நீக்கித் தருமநெறிகளை நிலைநிறுத்தித் தன்னடிச் சோதிக்கெழுந்தருள, உடனே இப்புவியில் கலிபுருஷன் செங்கோல் செலுத்தப் புகுந்து அதர்மம் அவிவேகம் அநாசாரம் முதலியவற்றை மெல்ல ஜனங்களிடத்தில் உண்டுபண்ணிக்கொண்டு வந்து நெடுநாள்வரையில் முற்றிவிட்டான். இங்ஙனம் கலி முற்ற முற்ற ஜனங்கள் அல்பாயுஸ்ஸுக்களாவார்கள்; சரீரத்தில் வளர்த்தியும் வலிவும் குறைந்துவிடப் போகிறது; அழகும் தெளிவும் தேஜஸ்ஸும் அடியோடே அழியப்போகிறது; அல்பபுத்திகளாகவும் ஆசாரஹீனர்களாகவும் கல்வியற்றவர்களாகவும் ஆகப் போகிறார்கள். பல சொல்லியென்? எல்லாம் தலைகீழாகப்போகிறது. பாவிகள் எல்லையில்லாமல் நிறகப்போகிறார்கள். அப்போது நிலமங்கை தாங்கமாட்டாமல் முன்போலவே எம்பெருமானிடம் சென்று முறையிடவும் அதற்கு அவர் நானே மீண்டும் வந்து அவதரித்துத் துயர் தீர்ப்பேன் என்று அபயமளிக்கவும் நேரப்போகிறது. பிறகு பகவான் வடதிசையின்கணுள்ள சம்பளகிராமத்தில் வாஸம் செய்கிற வைதிகோத்தமனான விஷ்ணுயசஸ் என்பவருடைய மனைவியாகியஸுமதியினுடைய கருவிற் புகுந்து பன்னிரண்டாண்டு உறைந்து வைசாகசுக்லத்வாதசியினன்று திருவவதரிக்கப் போகிறார். பிறகு வ்யாஸர் முதலிய பெரியோர்கள் சென்று அக்குழந்தைக்கு கல்கியென்று பெயரிடப்போகிறார்கள். பிறகு கல்கிபகவான் வேதமோதுகைக்காகப் பரசுராமனை நாடிச் சிறிது நாள் குருகுலவாஸஞ் செய்து வேதங்களையும் அஸ்த்ரசஸ்த்ரங்களையும் கற்று 'தருமபரிபாலனஞ் செய்வதே குருதக்ஷிணை' என்று அப்பரசுராமனளிப்பதைக் கொண்டாடி அதிலே கண்ணுங்கருத்துமாயிருந்து அவதார காரியத்தை முடிக்கைக்காக ஸங்கல்பம் செய்துகொண்டு, விச்வஜித் அச்வமேதம் முதலிய யாகங்களைச்செய்ய வேண்டுமென்று தந்தையிடம் அநுஜ்ஞைபெற்று அதற்காகத் திக்விஜயஞ் செய்யப் புறப்பட்டு, முந்துற முன்னம் பௌத்தர்களின் ராஜ்யத்தை நோக்கிச்சென்று அவர்கள்மேல் படையெடுத்து அங்குள்ளாரை யெல்லாம் தொலைத்திட்டு அங்குநின்றும் யவநர்களுடைய ராஜ்யத்திற்குச் சென்று அங்குள்ள மிலேச்ச சேனைகளையும் அரசர்களையும் தான் குதிரை மேலேறிக் கத்தியைக் கையில்பிடித்துத் துண்டுதுண்டாக வெட்டியெறிந்து அத்தேசமெங்கும் ரத்தவெள்ளமும பிணக்காடுமாக ஆக்கி, அத்தேசங்களில் தன்னை அநுவர்த்தித்து வரும் அரசர்களைப் பட்டாபிஷேகம் செய்வித்துத் தருமமார்க்க பரிபாலனம செய்விக்கப்போகிறார். பிறகு கலிபுருஷன் மிக்க கோபத்துடனே உருவ மெடுத்துக் கொண்டு அதர்மம் அஞ்ஞானம் முதலியவற்றுக்கு அதிஷ்டாந தெய்வங்களையுங் கூட்டிக்கொண்டு கோரரூபியாய்ப் படையெடுத்து வந்தெதிர்ப்பான். பின்பு பகவான் குதிரை மீதேறி அதிவிசித்திரமாக அச்சேனைத்திரளில் ஸஞ்சரித்துத் தான் பிடித்த கத்தியினால் அவர்களுடன் யுத்தஞ்செய்து அவர்கள் பிரயோகிக்கும்

ஆயுதங்களையும் மாயைகளையும் நிரூக்கிச் சேனைகளை ஒன்றொழியாமற் கொன்று கலி புருஷனைப் பலவகைகளிலும் பங்கப்படுத்தி அவனுடைய பராக்கிரமத்தை யெல்லாம் ஓய்வித்துப் பின்பு அவன் குடுமியைப் பிடித்திழுத்து அவனது கழுத்தின்மேற் கத்தியையெறிந்து வெட்டப் புகுங்காலத்தில் அக் கலிபுருஷன் பகவானைப் பலவகையாக வேண்டிக்கொண்டு பாதங்களிற் பணிந்து தன்னுயிரை மாத்திரம் தப்ப வைத்துக்கொண்டு இவ்வுலகைவிட்டு ஓடிப்போய் ஒளித்துக்கொள்வான். அதன்றியும் அவனுடைய தோழர்களாகிய சோகன் விசோகன் என்ற இரண்டு பெயர் கலி புருஷனோடிப்போனதைக் கேட்டுக் கல்கி பகவான்மீது வெகு கோபங்கொண்டு எதிர்த்துவந்து யுத்தஞ்செய்ய, அவர்களை எத்தனையடி அடித்தாலும் அவர்கள் சாவின்றியே யிருப்பதைக் கண்டு இதற்கென்ன காரணமென்று யோசித்துக் கொண்டிருக்கையில் பிரமதேவன் வந்து 'ஸ்வாமிற்! இவர்களிருவரையும் ஒரு பொழுதே கொல்லவேணும்; தனித்தனியே இவர்கட்கு மரணமுண்டாகாதபடி நான் வரங்கொடுத்திருக்கிறேன்' என்று சொல்லக் கேட்டுக் கல்கிபகவான் தன்னுடைய வஜ்ராயுதத்தை யெடுத்து ஓங்கி இருவர் தலையிலும் அடிக்க அவர்கள் கீழேவிழுந்து மாண்டுபோவார்கள். இப்படி கல்கிபகவான் உலகத்திலுள்ள துஷ்டர்களையெல்லாம் ஸம்ஹரித்து அதர்மத்தை வேரறுவித்துத் தருமத்தை எங்கும் பரவச்செய்து கிருத யுகத்தைப் பிரவாத்திப்பித்துத் தன் தாய் தந்தையர்க்கும் முத்தியளித்து, இங்ஙனம் தன்னுடைய அவதாரப்ரயோஜநம் தலைக்கட்டினவாறே பதரிகாச்ரமத்துக் கெழுந்தருளி மற்றவர்களைப்போல் யோகாப்யாஸஞ் செய்து திருவாழி திருச்சங்கு முதலிய ஸகல லக்ஷணங்களோடுங் கூடிய தனது அப்ராக்ருத திவ்ய ஸ்வரூபத்தை ஆவிஷ்கரித்துப் பின்பு, பரமபதத்திலிருந்து அநந்தகருட விஷ்வக்ஸேநாதி நித்யசூரிகள் பூர்ண கும்பமேந்தி ஸாமகானம் கோஷித்துக்கொண்டு திருவடி தொழ, சிறப்புடனே, தன்னுடைச்சோதிக் கெழுந்தருளப்போகிறார்—என்பதாம்.

[**பாவிந்யா தசயா இஹ பவந்**] இது தார்க்கிகவ்யவஹாரம்போன்றது. கீழ்ச் சொன்ன அவதாரங்களெல்லாம் பூததசாவிசிஷ்டங்கள்; இவ்வவதாரமொன்றே பவிஷ்யத் தசை பெற்றுள்ளது. எல்லா அவதாரங்களுக்கும் வ்யவஹிதத்வம் துல்யமாயிருக்கச் செய்தேயும் மற்ற அவதாரங்களுக்கு பூதகாலவ்யதானம்; இவ்வவதாரத்திற்கு பவிஷ்யத்கால வ்யவதான மென்று வாசிகாண்க. भवन्निति शतृप्रत्ययान्त ப்ரயோகம் வர்த்தமாநார்த்தத்திலேயே கூடுமாதலால் பவிஷ்யத்தானவிதிலே இங்ஙனே வர்த்தமாந ப்ரயோகம் செய்யத்தகுமோ வென்று சிந்திக்கவேண்டா; காலசக்ர நிர்வாஹகனான பகவானுக்கு ஸர்வகாலமும் ஸததவர்த்தமாநமேயாதலால் தகுதியேயாகும். [**கல்கீ நஃ பவத்வம்ஸாய கல்பதாம்**] கல்கிபகவான் இனியவதரித்துச் செய்தருளப்போகிற விரோதிநிரஸனத்திலே முந்துறமுன்னம் தம்முடைய விரோதி நிரஸனம் ஆகவேணுமென்று ஆசைப்படுகிறார். பிறப்பதுமிறப்பதுமாகிற ஸம்ஸார துக்கத்தைப் போக்கியருள வேணுமென்கை. [**விஷ்ணுயசஸ்ஸுதஃ**] விஷ்ணுயசஸ்ஸென்பவருக்குப் புதல்வராய் கல்கிபகவான் அவதரிக்கப் போகிறதாகப் புராண ப்ரஸித்தியுள்ளதாதலால் அதையடியொற்றிப் பேசினபடி. [**கலிகதா காலுஷ்ய கூலங்கஷஃ**] கலியுகமொன்று மின்றிக்கேயருள் செய்யப்போகிறவ னென்கை.

[**நிச்சேஷேத்யாதிஃ**] பெரியாழ்வார் *கான் தொடுத்த நெறிபோகிக் கண்டகரைக் களைந்தான்* என்று அஸுரராக்ஷஸாதி விரோதி வர்க்கங்களைக் கண்டக சப்தத்தாலே யருளிச்செய்தார்; இங்கும் கண்டகசப்தம் விரோதி வர்க்கங்களையே சொல்லுகிறது. கிழங்கிருந்து கிளராதபடி விரோதிகளையடையக் களைந்தொழிக்கப் போகிறபடி சொல்லுகிறதாயிற்று. கல்கிபகவான் கையிலே கத்திகொண்டு

வெள்ளைக் குதிரையின்மீதேறி யுலாவி விரோதிநிரஸநம் செய்யப்போகிறபடியாலே அந்தக்கத்தியாகிற காளமேகம் வர்ஷித்து க்ருதயுக தர்மத்தை அங்குரிக்கச் செய்யுமென்கை. .... (கக)

इच्छामीन विहारकच्छप महापोत्रिन् यदृच्छाहरे (माया)रक्षावामन रोषराम करुणाकाकुत्स्थ हेलाहलिन् ।
क्रीडावल्लव कल्कवाहनदशाकल्पिन्निति प्रत्यहं जल्पन्तः पुरुषाः पुनन्ति भुवनं पुण्यौघपण्यापणाः ॥ १२

இச்சாமீந விஹாரகச்சப மஹாபோத்ரிந் யத்ருச்சாஹரே
ரக்ஷாவாமந ரோஷராம கருணாகாகுத்ஸ்த ஹேலாஹலிந்
க்ரீடாவல்லவ கல்கவாஹந! தசாகல்பிந்நிதி ப்ரத்யஹம்
ஜல்பந்தஃ புருஷாஃ புநந்தி புவநம் புண்யௌக பண்யாபணாஃ (12)

இச்சாமீந	ஸ்வேச்சையினால் மத்ஸ்ய மூர்த்தியானவரே !	க்ரீடாவல்லவ	விளையாட்டுக்காக ஆயர் கோமானானவனே !
விஹார கச்சப	க்ரீடார்த்தமாகக் கூர்மரூபியானவரே !	கல்கவாஹந	குதிரையை வாஹநமாகக் கொண்ட கல்கி பகவானே !
மஹாபோத்ரிந்	மஹாவராஹமூர்த்தியே !	தசாகல்பிந்	இங்ஙனே தசாவதாரங்களையும் வேஷமாகக் கொண்ட பகவானே !
யத்ருச்சாஹரே	யாத்ருச்சிக நரஸிம்ஹ மூர்த்தியே !	இதி	என்று இவ்வண்ணமாக
ரக்ஷாவாமந	தேவேந்த்ர ரக்ஷணார்த்தமாக வாமந வேஷங் கொண்டவரே !	ப்ரத்யஹம் ஜல்பந்தஃ	நாடோறும் வாய்வெருவுகின்றவர்களாய்
ரோஷராம	ரோஷமே வடிவெடுத்த பரசுராமரே !	புண்யஓக பண்ய ஆபணாஃ	புண்ய ஸமூஹங்களாகிற சரக்குகளுக்குக் கடை போன்றவர்களான
கருணாகாகுத்ஸ்த	கருணையே வடிவெடுத்த சக்ரவர்த்தி திருமகனாரே !	புருஷாஃ	புருஷர்கள்
ஹேலாஹலிந்	லீலா பலராம மூர்த்தியே !	புவநம் புநந்தி	உலகத்தைப் பரிசுத்தமாக்க வல்லவர்கள்.

* * * ஒவ்வோரவதாரத்திற்கு ஒவ்வொரு ச்லோகமாக அருளிச்செய்து வந்தார் கீழ்; அந்த ச்லோகங்களைக் கண்டபாடஞ்செய்ய சக்தியற்றவர்களையும் விடமாட்டாத பரம க்ருபையினாலே "ஒரு ச்லோகத்தை யநுஸந்தித்தே தசாவதாரங்களையும் அநுபவித்தவர்களாக ஆகுக" என்னுந் திருவுள்ளங்கொண்டு அங்ஙனே யருளிச்செய்த ச்லோகமாயிற்றிது.

[**இச்சாமீந!**] * **இச்சாக்ருஹீதாபிமதோருதேஹ:** * என்று மஹர்ஷியும், * தனக்கு வேண்டுருக்கொண்டு * என்று ஆழ்வாரும் பணித்தபடியே ஸ்வேச்சையினாலே மத்ஸ்யத் திருமேனியைப் பரிக்ரஹித்தருளினவனே! என்கை. [**விஹாரகச்சப!**] கீழே கூர்மாவதாரத்தைப்பற்றி யருளிச்செய்த * **அவ்யாஸுர் புவநத்ரயீம்** * இத்யாதி ச்லோகத்திலே 'விஹாரதே தேவஸ் ஸஹைவ ச்ரியா' என்று பணித்த விஹாரத்தை ஸ்மரிப்பது. அநாயாஸமாகக் கூர்மாவதாரம் செய்தருளினபடியைச் சொல்லிற்றாகவுமாம். [**மஹாபோத்ரிந்**] * மலையாறு மேழு கடலும் பாதமர் சூழ் குளம்பினக மண்டலத்திலொருபாலொடுங்க வளர்சேர், ஆதிமுனேனமாகியரணாய மூர்த்தி * என்று திருமங்கையாழ்வாரருளிச் செய்தபடியே மஹாவராஹமூர்த்தியானவனே! [**யத்ருச்சாஹரே!**] * நரங்கலந்த சிங்கமாய் இப்படியொரு விலக்ஷணமான வடிவெடுக்கப் போகிறோமென்று அவன் தானும் அந்த க்ஷணத்திற்கு முன்னே நினைப்பிட்டதில்லையே. * அங்கப்பொழுதே அவன் வீயத் தோன்றிய

என் சிங்கப்பிரான் * என்று ஆழ்வாருளிச் செய்தபடியே யத்ருச்சயா நரஹரியா னவனிறே. [ரக்ஷாவாமந!] வாமந ப்ரஹ்மசாரியாய் இரப்பாளனாய் வந்து நின்றது ஸ்வப்ரயோஜனத்துக்காகவன்றே; பரரக்ஷணார்த்தமிறே. [ரோஷராம!] பரசு ராமன் * என் வில்வலி கண்டு போவென்றெதிர் வந்தது ரோஷத்தாலேயிறே. அதுவுமன்றிக்கே * வென்றிமாமழுவேந்திமுன் மண்மிசை மன்னரை மூவெழுகால் கொன்ற தேவா! * என்னும்படி இருபத்தோர்கால் அரசு களைகட்டதும் ரோஷத் தாலேயாயிற்று. [கருணாகாகுத்ஸ்த] இராமபிரானிடத்தே வந்தவாறே இங்ஙனே யல்லது வேறொரு விசேஷணமிட்டுச் சொல்ல வொண்ணாதிறே. * வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்ருசம் பவதி து:க்கித: * என்றும் * ஸஞ்ஜாத பாஷ்ப: பரவீர ஹந்தா ராமோ முஹூர்த்தம் விமநா பபூவ * என்றும் பேசலாம்படியான கரு ணையே வடிவெடுத்த காகுத்தனாயிற்று. [ஹேலாஹலிந்!] "தாலாங்கஸ்ய ததாவிதா விஹ்ருதய:" என்று கீழே யருளிச்செய்ததை நினைப்பது. நம்பிமூத்தபிரான் கலப்பையைக் கருவியாகக் கொண்டு செய்த ஹேலைகளை யநுஸந்திப்பது.

[க்ரீடா வல்லவ!] பெரியாழ்வார் * வெண்ணெய் விழுங்கி வெறுங்கலத்தை வெற்பிடையிட்டு அதனோசை கேட்கும் கண்ணபிரான் * என்று தொடங்கிக் கண் ணபிரான் செய்த சிறுச் சேவகங்களையடையச் சொல்லிவந்து "பண்டவன் செய்த கிரீடையெல்லாம்" என்று தலைக்கட்டினார். அந்தச் சொல்லையே யிட்டு இங்கு * க்ரீடாவல்லவ! * என்கிறார். [வல்லவ: - கோபால:.] [கல்கவாஹந!] கல்க மென்று வெண்குதிரைக்குப் பெயராதலால் அதனை ஊர்தியாகக் கொண்டு அவத ரிக்கப்போகிற பெருமானே! என்கை. [தசாகல்பிந்!] * आकल्पवेषौ नेपथ्यं प्रतिकर्म प्रसाधनम्—ஆகல்பவேஷௌ நேபத்யம் ப்ரதிகர்ம ப்ரஸாதநம் * என்கிற அமர கோசத்தின்படியே ஆகல்பமென்று வேஷத்தைச் சொல்லுகிறது. மத்ஸ்யாதி களான பத்து வேஷங்களைப் பூண்டுகொள்பவனே! என்றபடி. சிலர் " "தசாகல் கிந்!" என்று பாடங்கொண்டு (கல்கவாஹந தசாகல்கிந்) என்று ஏக பதமாக நிர்வ ஹித்து ஏதோ பொருள் கூறுவர்; அது யதாவஸ்தித பாடம் தெரியாமையினாலத் தனையென்று கொள்ளக்கடவது. அது தவறான பாடமேயாதலால் தவிர்க்கத் தக்கது.

[இதிப்ரத்யஹமித்யாதி] இவ்விதமாக நாடோறும் வாய்வெருவுகின்ற புண்ய சாலிகளான புருஷர்கள் லோகபாவநர்களாவர் என்கை. 'ஜல்பந்த:' என்றது— ஜ்வரஸந்நிபதிதரைப் போலே அக்ரமமாக [க்ரமவிவக்ஷையின்றிக்கே] சொல்லு மவர்களென்றபடி. * பேர் பல சொல்லிப் பிதற்றிப் பித்தரென்றே பிறர்கூற * என்கிற ஆழ்வாருளிச் செயலையும் "ஜாமதக்ந்யஸ்ய ஜல்பத: என்ற பீஷ்ம வச னத்தையுமடியொற்றி யருளிச்செய்தபடி. "புண்யௌக பண்யாபணா:" என்னு மிந்த ப்ரயோகம் மிகவும் ரஸிக்கத்தக்கது. 'வித்யா நிஷத்யா' என்கிறாப்போலே இதுவும். .... (கஉ)

विद्योदन्वति वेङ्कटेश्वरकवौ जातं जगन्मङ्गलं देवेशस्य दशावतारविषयं स्तोत्रं विवक्षेत यः ।
वक्त्रे तस्य सरस्वती बहुमुखी भक्तिः परा मानसे शुद्धिः काऽपि तनौ दिशासु दशसु ख्यातिः शुभा जृम्भते ॥ १२ ॥

வித்யோதந்வதி வேங்கடேச்வரகவௌ ஜாதம் ஜகந்மங்களம்
தேவேசஸ்ய தசாவதாரவிஷயம் ஸ்தோத்ரம் விவக்ஷேத ய:
வக்த்ரே தஸ்ய ஸரஸ்வதீ பஹுமுகீ பக்தி: பரா மாநஸே
சுத்தி: காபி தநௌ திசாஸு தசஸு க்க்யாதிச் சுபா ஜ்ரும்பதே: (12)

வித்யாஉதந்வதி	கல்விக்கடலான
வேங்கடேச்வர கவௌ	ஸ்ரீமத் வேங்கடநாதார்ய கவியினிடத்தில்
ஜாதம்	தோன்றினதாய்
ஜகத் மங்களம்	உலகுக்கெல்லாம் மங்களாவஹமான
தேவேசஸ்ய தசாவதாரவிஷயம் ஸ்தோத்ரம்	தேவாதிதேவனது தசாவதாரங்களைப் பற்றின இந்தத் துதி நூலை
யஃ விவக்ஷத	யாவனொருவன் சொல்ல விரும்புவனோ,
தஸ்ய வக்த்ரே	அவனுடைய வாக்கில்
ஸரஸ்வதீ பஹுமுகீ ஜ்ரும்பதே	ஸரஸ்வதியானவள் பஹுமுகமாகப் பரம்புவள்;
மாநஸே பரா பக்திஃ ஜ்ரும்பதே	மநஸ்ஸில் சிறந்த பக்தி வளரும்;
தநௌ காபி சுத்திஃ ஜ்ரும்பதே	உடலில் விலக்ஷணமான பரிசுத்தி விளங்கும்;
தசஸு திசாஸு சுபா க்யாதிஃ ஜ்ரும்பதே	பத்துத் திசைகளிலும் நல்ல யசஸ்ஸு பரவும்.

* * * இந்த நிகமந ச்லோகத்தினால் பலனருளிச் செய்து தலைக்கட்டுகிறார். இந்த ஸ்தோத்ரத்தை நித்யமநுஸந்திப்பவர்களுக்கு இன்னது பலன் என்று அருளிச்செய்கிறாரல்லர்; ஆழ்வார் * மாலிருஞ்சோலை தொழக் கருதுவதே துணிவது சூதே * என்றருளிச்செய்தாப்போலே, இந்த தசாவதார ஸ்தோத்ரத்தை [**யஃ விவக்ஷத**] யாவனொருவன் சொல்லவேணுமென்று விரும்புவானோ அவனுக்குப் பெருப் பெருத்த பலன்கள் கிடைக்குமென்றருளிச்செய்கிறார்.

[**வித்யோதந்வதி வேங்கடேச்வரகவௌ ஜாதம்**] ஸங்கல்ப ஸூர்யோதயத்திலே * **விம்சத்யப்தே விச்ருதநாநாவிதவித்யஃ த்ரிம்சத்வாரம் ச்ராவித சாரீரக பாஷ்யஃ** * என்றருளிச்செய்தபடியே விவித வித்யாபாரங்கதரிறே ஸ்வாமிதாம். நைச்யாநுஸந்தானத்திற்கு எல்லை நிலமான ஸ்வாமி இங்ஙனே தம்மைத் தாமே புகழ்ந்து பேசலாமோ? '**வித்யோதந்வதி**' என்று தம்மைத் தாமே கல்விக்கடலாகச் சொல்லிக்கொள்ளலாமோ? என்று சங்கிக்கவேண்டா; * தோன்றா தோற்றித் துறைபல முடிப்பினும், தான் தற்புகழ்தல் தகுதியன்றே* என்று தற்புகழ்ச்சியாகாதென்று முதலில் கூறின நன்னூலார் தாமே உடனே "..........தன்னுடையாற்றலுணராரிடையினும், தன்னைப் புகழ்தலும் தகும் புலவோர்க்கே" என்றாராதலால் இது கூடுமென்று தெளிக * யானே இருந்தமிழ் நன்மாலை யிணையடிக்கே சொன்னேன், பெருந்தமிழன் நல்லேன் பெரிது * என்று பேயாழ்வாரும், * என் மதிக்கு விண்ணெல்லாமுண்டோ விலை * என்று திருமழிசைப் பிரானும் அருளிச் செய்திருப்பன இங்கே அநுஸந்தேயம்.

* **ஜநிகர்த்துஃ ப்ரக்ருதிஃ** * என்கிற வியாகரண ஸூத்ரப்படி '**வேங்கடேச்வர கவேர் ஜாதம்**' என்று பஞ்சம்யந்தமாகவன்றோ அருளிச்செய்திருக்கவேணும்; ஸப்தம்யந்தமாக அருளிச்செய்திருப்பது எங்ஙனே பொருந்தும்? என்று சங்கிக்கவேண்டா; * **விவக்ஷாதஃ காரகாணி**யாகையாலே இங்ஙனேயான ப்ரயோகங்களும் மஹாகவிகள் செய்வதுண்டு என்று தெளிக. [**ஜகந்மங்கலம்**] எம்பெருமானுடைய திருவவதாரங்கள் ஜகந்மங்களார்த்தமாக அமைந்தாப்போலே அவ்வவதார விஷயகமான இந்த ஸ்தோத்ர க்ருதியும் ஜகந்மங்களார்த்தமாகவே யாயிற்று அவதரித்தது. ஜகத்துக்கெல்லாம் மங்களாவஹமானது இது. [**தேவேசஸ்ய தசாவதார விஷயம் ஸ்தோத்ரம்**] தேவேசனென்பதற்கு ஷஷ்டீதத்புருஷன் பண்ணினால் தேவதாஸார்வபௌமனென்கிற பொருள் கிடைக்கும்; விசேஷணோபயபத கர்மதாரயனைக் கொண்டால் தேவனும் ஈசனுமானவனென்று பொருளாகும். ஸ்ரீரங்கநாதனே இங்கு விவக்ஷிதன். அப்பெருமான் செய்தருளின தசாவதார விஷயமான இந்த ஸ்தோத்ரத்தை. [**யஃ விவக்ஷத**] வக்துமிச்சா - விவக்ஷா; சொல்லவேணுமென்று நெஞ்சால் நினைக்குமளவே போதுமென்றதாயிற்று. அவ்வளவிலே கிடைக்கக்

கூடிய பலன் யாதென்ன, ஒன்றல்ல இரண்டல்ல; பல பேறுகள் கைபுகுமென்கிறார் **[வக்த்ரே தஸ்ய]** இத்யாதியால். ஸ்வாமி தாம் பெற்றிருக்கிற பேறுகளெல்லாம் இவ்வதிகாரிக்குக் கிடைத்தே தீருமென்கிறார். * தம்மையே நாளும் வணங்கித் தொழுவார்க்குத் தம்மையேயொக்க அருள்செய்பவன் எம்பெருமான் மட்டுமல்லனே; ஆசாரியர்களும் அங்ஙனே அருள்செய்ய வல்லவர்களாதலால் ஸ்வாமி தமக்கு விளைந்திருக்கிற பெருமைகளையெல்லாம் இங்குப் பலனாக நிர்தேசித்தருளுகிறார். மனோவாக்காயங்களில் விளையக் கூடிய நன்மைகளை முன்னமருளிச் செய்கிறார். ஸர்வகலா பாண்டித்யமுண்டாகுமென்பது முதற்பலன்; * தணிவிலர் கற்பரேல் கல்விவாயுமே * என்று ஆழ்வாருமருளிச்செய்த பலன் இது; **[பக்தி: பரா மாநஸே]** உள்ளத்தினுள் உயர்ந்த பக்தி ஊர்ஜிதமாகும். ஆழ்வார் * பத்தராகக் கூடும் பயிலுமினே * பத்தராவர் துவளின்றியே * என்றருளிச்செய்த பலன் இது.

[தநௌ காபி சுத்தி:] உடலிலே விலக்ஷணமானதொரு தூய்மையுண்டாகும். பெரியாழ்வார் "தமிழ்மாலை தங்கிய நாவுடையார்க்குக், கங்கையில் திருமால் கழலிணைக் கீழே குளித்திருந்த கணக்காமே" என்றருளிச்செய்த பலன் இது. * கங்கை கங்கையென்ற வாசகத்தாலே கடுவினைகளைந்திடகிற்குங் கங்கை * என்னப் பெற்ற கங்கையில் குளித்தாலுண்டாகக் கடவதான சுத்தியுண்டாகுமென்கை. **[தசஸு திசாஸு சுபா க்யாதி: ஜ்ரும்பதே.]** பத்துத் திசைகளிலும் நற்புகழ் படரும். பெரியாழ்வார் * இன்னிசை மாலைகளிப்பத்தும் வல்லார் உலகி லெண்டிசையும் புகழ் மிக்கின்பமெய்துவரே * என்றருளிச்செய்த பலன் இது. கிழக்கு முதலிய திசைகளையிட்டு நான்கு திக்குக்கள் என்பது, வடகிழக்கு தென்கிழக்கு வடமேற்கு தென்மேற்கு என்கிற விதிக்குக்களையும் சேர்த்து எட்டுத் திசைகளென்பது; கீழும்மேலுமாகிற இரண்டையும் சேர்த்துப் பத்துத் திசைகளென்பது. இவையெல்லாம் ஸங்கதமே.

ஆக இந்நூலில் முதல் ச்லோகத்தாலே மங்களாசரணம் செய்து, இரண்டு முதலிய பத்து ச்லோகங்களாலே * மீனோடாமை கேழலரி குறளாய் முன்னுமிராமனாய்த் தானாய்ப் பின்னுமிராமனாய்த் தாமோதரனாய்க் கற்கியுமானான் * என்கிற தசாவதாரங்களையும் அடைவே பேசியநுபவித்து, பன்னிரண்டாம் ச்லோகத்தாலே தசாவதாரங்களையும் ஒரு சேர்த்தியாகவநுபவித்து, நிகமத்தில் பயனுரைத்துத் தலைக்கட்டினாராயிற்று. ... . (க௫)

इत्थं दशावतारस्तुतिकृतिविवृत्तिं व्यधत्त बुधभोग्याम् ।
काञ्चीवादिभयङ्करवंशीयोऽण्णङ्गराचार्यः ॥

ஸ்ரீகாஞ்சீ ப்ரதிவாதிபயங்கரம்
அண்ணங்கராசாரியர் இயற்றிய
தேசிக ஸ்தோத்ரமாலா வியாக்கியானத்தில்
தசாவதார ஸ்தோத்ர வியாக்கியானம் முற்றிற்று.

உங்கள் கருத்து யாது? என்று மந்திரிமார்களைச் சக்ரவர்த்தி கேட்பதாகவுள்ளது. ஆழ்ந்து நோக்குமளவில் தற்செயலாய் நடக்கப்போகிற நடத்தையும் இதில் காணலாம்படியுள்ளது. (எங்ஙனேயென்னில்;) இரா மனுக்கு—தற்காலம் அயோத்தியில் இராத மன்னாகிய பரதனுக்கு; அரசை நல்கி=(நல்கி என்ற வினையெச்சத்தை எச்சத்திரிபாகக் கொண்டால் 'நல்க' என்றதாகும்.) ராஜ்யத்தைக் கொடுக்கும்படி. [பேதமை தாய்வரும்] 'பேதமை' என்பதை 'பேது அமை' என்று பிரிக்க. கூனியின் கலஹவார்த்தைகளினால் பேதபுத்தி அமையப்பெற்ற தாயாகிய கைகேயி குறுக்கே வந்து நிற்பள் என்றபடி. பிறகு என்னாகுமென்னில், பிறப்பைநீக்குவான் மாது அவம் தொடங்கிய வனத்தை நண்ணுவேன்=நண்ணுவேனென்பது பிறவினையில் வந்த தன்வினையாகக் கொள்ளத்தக்கது. நண்ணுவிப்பேனென்றபடி. பிறப்பை நீக்குபவனான நாராயணனுடைய அம்சமான ராமன் 'பிறப்பை நீக்குவான்' என்னுஞ் சொல்லால் விவக்ஷிதன். அவனுடைய மாது—தேவியான ஸீதாபிராட்டி; அவளுக்கு விச்லேஷமாகிற அவத்யம் உண்டாவதற்கு ஹேதுவான வனத்தை நண்ணுவிப்பேன்—வனம்போகக் கட்டளையிடுவேனென்றபடி. ... *

(வஸிஷ்டபகவான் ஸ்ரீராமபட்டாபிஷேகத்திற்கு இசைந்ததைக் கூறுதல்)

154. நிருப நின்குல மன்னவர் நேமி பண்டுருட்டிப்
பெருமை யெய்தினர் யாவரே யிராமனைப் பெற்றார்
கருமமேயிது கற்றுணர்ந்தோய்க் கினிக்கடவ
தருமமும்மிது தக்கதே நினைத்தனை தகவோய்.

நிருப	சக்ரவர்த்தியே!	கற்று உணர்ந்தோய்க்கு	நூல்களைக்கற்று விவேகியான உனக்கு
பண்டு நின் குலம் மன்னவர்	இதற்கு முன்பு உன் குலத்தில் அரசர்களாகத் தோன்றினவர்களாய்	இது கருமமே	மனோரதித்தவிது தகுதியான காரியமே;
நேமி உருட்டி	ஆஜ்ஞா சக்கரத்தைச் செலுத்தி	இனி கடவ தருமமும் இதுவே	இந்நிலையில் செய்யத் தக்கதான தருமமும் இதுவேயாகும்.
பெருமை எய்தினர்	பெருமை பெற்றவர்களுக்குள்ளே	தகவோய் தக்கதே நினைத்தனை	உணர்ச்சி மிக்க மன்னவனே! தகுதியான காரியத்தையே செய்ய நினைத்தாய்.
இராமனை பெற்றார் யாவர்	இராமனைப் போன்ற வொரு புதல்வரைப் பெற்றவர் யாரேனுமுளரோ?		

* * *—தசரத மன்னவனே! உனக்கு முன்னிருந்த சக்கரவர்த்திகள் ஏறக்குறைய உன்னைப்போல் பெருமை பெற்றவராயினும், ஸ்ரீராமனைப் போல் ஸகல குண ஸம்பந்நனான ஸத்புத்ரனைப் பெற்றவர் ஒருவருமில்லை யென்று இங்குச் சொன்னது-அனைவரும் ஸ்ரீராம குணங்களிலே ஈடுபட்டிருப்பவர்களாதலால் அவனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்வதைப்பற்றி மாறான கருத்து எவர்க்கும் நிகழாதென்று தெரிவிப்பதற்காம்.

நேமி—சக்கரம்; ஆணையைச் சக்கரமென்று கூறுதல் வழக்கு; ஆஜ்ஞா சக்ர மென்க. 37

(இதுவுமது.)

155. மண்ணினு நல்லள் மலர்மகள்கலைமகள்கலையூர்
பெண்ணினு நல்லள் பெரும்புகழ்ச்சனகியோ, நல்லள்
கண்ணினு நல்லன் கற்றவர் கற்றிலாதவரும்
உண்ணுநீரினு முயிரினு மவனையே யுவப்பார். 43

பெரு புகழ் சனகியோ — பெரும் புகழ் படைத்த சீதையோ வென்றால்

மண்ணினும் நல்லள் — பூமிதேவியைக் காட்டிலும் நல்லவள் ;

மலர் மகளினும் நல்லள் — திருமகளைக் காட்டிலும் நல்லவள் ;

கலை மகளினும் நல்லள் — ஸரஸ்வதியிற் காட்டிலும் நல்லவள் ;

கலை ஊர் பெண்ணினும் நல்லள் — மானை வாஹன மாகவுடைய பார்வதியிற் காட்டிலும் நல்லவள் ;

(இராமனோ வென்றால் ;)

நல்லன் கண்ணினும் நல்லன் — அப்படிப்பட்ட நல்லவளுடைய கண்களைக் காட்டிலும் நல்லவன் ;

கற்றவர் கற்றிலாதவரும் — கற்றவர்களும் கல்லாதவர்களும்

உண்ணும நீரினும் — பருகுகின்ற நீரைப் பார்க்கிலும்

உயிரினும் — உயிரைப் பார்க்கிலும்

அவனையே உவப்பார் — அவ்விராமனையே மேலானவனாக வெண்ணி விரும்புவார்கள்.

* * *—அரசாட்சி புரியுமிடத்து அரசன் நல்லவனாயினும் அரசி நற்குணமில்லாதவளா யிருப்பின் பயனில்லையாகுமாதலால், அரசியான ஸீதா தேவியும் நற்குணம் வாய்ந்தவ ளென்பதைத் தெரிவிப்பது இச் செய்யுள். ஸீதா தேவி பொறுமையிற் சிறந்தவ ளென்பது தோன்ற ‘மண்ணினும் நல்லள்’ எனப்பட்டது ; அழகிற் சிறந்தவ ளென்பது தோன்ற ‘மலர் மகளினும் நல்லள்’ எனப்பட்டது. கல்வியிற் சிறந்தவ ளென்பது தோன்றக் ‘கலைமகளினும் நல்லள்’ என்றது ; கற்பிற் சிறந்தவ ளென்பது தோன்றக் ‘கலையூர் பெண்ணினும் நல்லள்’ என்றது. இனி, ‘நல்லள் கண்ணினும் நல்லன்’ என்று தொடங்கி இராமபிரானது நலம் கூறப்படுகின்றது. *தன்னடியார் திறத்தகத்துத் தாமரையாளாகிலுஞ் சிதகுரைக்குமேல், என்னடியார் அது செய்யார் செய்தாரேல் நன்று செய்தாரென்பர்* என்று பெரியாழ்வாரருளிச் செய்தபடியே பிராட்டியைக் காட்டிலும் பெருமாள் தயாளு வென்பது ப்ரஸித்தமே. யாவரும் இராமனிடத்தே அன்பு கொண்டிருப்ப ரென்பது விளங்க “உண்ணு நீரினு முயிரினு மவனையே யுவப்பார்” என்றது. பண்டிதர்களோடு பாமரர்களோடு வாசியற யாவரும் இராமனை விட்டுத் தரிக்க கில்லா ரென்பது கருத்து. 42

(வசிட்டமுனிவன் சொன்னதற்கு மன்னவன் மகிழ்தல்.)

156. **மற்றவன் சொன்ன வாசகங் கேட்டலும் மகனைப் பெற்றவன்றினும் பிஞ்ஞகன் பிடிக்குமப் பெருவில்**
இற்றவன்றினும் எறிமழுவாளவனிழுக்கம் உற்றவன்றினும் பெரியதோருவகையனானான். **44**

அவன் சொன்ன வாசகம் கேட்டலும் — அம் முனிவன் சொன்ன வார்த்தையைக் கேட்டவளவில் (தசரதசக்ரவர்த்தி)

மகனை பெற்ற அன்றினும் — புத்திரனைப் பெற்ற வந்நாளினும்

பிஞ்ஞகன் பிடித்த அப் பெரு வில் இற்ற அன்றினும் — சிவன் கையிற் பிடிப்பதான அந்தப் பெரிய வில் ஒடிந்த அந்நாளிலும்

எறி மழு வாளவன் இழுக்கம் உற்ற அன்றினும் — பரசுராமன் தோல்வியடைந்த அந்நாளினும்

பெரியது ஓர் உவகையன் ஆனான் — விஞ்சிய ஒப்பற்ற சந்தோஷத்தை யடைந்தவனாயினன்.

* * *—மகனைப் பெற்ற ஆனந்தத்திற் காட்டிலும் மருமகளைப் பெற்ற ஆனந்தம் மேலதாயிருந்தது ; (பரசுராம பங்கத்தில்) மாற்றானை முகம் வணக்கப் பார்த்த ஆனந்தம் அதனினும் மேலதாயிருந்த தென்று சொற்போக்கில் உணரத் தக்கது. 44

(மன்னவனுணையைச் சுமந்திரன் தெரிவிக்க, ஸ்ரீராமன் தேர்மீது ஏறுதல்.)

157. கண்டுகைதொழு தையவிக் கடலுடைக் கிழவோன்
உண்டோர் காரியம் வருகென வுரைத்தன னெனலும்
புண்டரீகக்கட் புரவலன் பொருக்கென வெழுந்தோர்
கொண்டல் போலவன் கொடிநெடுந் தேர்மிசைக் கொண்டான். 53

கண்டு கை தொழுது	கண்டு கைகூப்பி வணங்கி	புண்டரீகம் கண் புரவலன்	தாமரைக்கண்ணனாகிய ஸ்ரீ ராம பிரான்
ஐய	ஐயனே!	பொருக்கென எழுந்து	சடிதியாக வெழுந்து
இ கடலுடை கிழவோன்	இவ்வுலகத்திற்கு உரியவனுகிய சக்கரவர்த்தி	ஓர் கொண்டல் போல்	ஒரு காளமேகம் போல
ஓர் காரியம் உண்டு என உரைத்தனன் எனலும்	ஓர் காரிய முளதாதலால் ஸ்ரீ ராமனை யழைத்து வருக வென்று நியமித்தாரென்று சொன்னவுடனே	அவன் கொடி நெடு தேர் மிசைக்கொண்டான்	அச்சுமந்திரனது கொடிகள் கட்டிய நெடிய தேரை மேற்கொண்டான்.

***—இளைய பெருமாளோடும் பிராட்டியோடுங் கூட இராமபிரானிருந்தமை இதன் கீழ்ப்பாட்டிற் சொல்லிற்று; அவ்விருப்பிலே கண்டு கைதொழுத சுமந்திரன் 'ஸ்ரீராமபிரானே! ஒரு காரிய நிமித்தமாக சக்ரவர்த்தி உன்னை யழைத்து வருமாறு கட்டளை யிட்டனன்! என்று தெரிவித்த வளவில், 'என்ன செய்தி? எதற்காக?' என்று ஒன்றுங் கேளாமல் உடனே தேர் மீதேறிப் புறப்பட்டனனிராமன். இராமபிரான் இப்போது எழுந்து செல்வதானது ராக்ஷசர்களாகிய கோடையால் வாடியுள்ள தேவர் முனிவர்களாகிய பயிர்க்கு அவ்வெப்பம் தணிவதற்குப் பரம்பரையாகக் காரணமாகப் போவதனுல் 'கொண்டல் போல் தேர்மிசைக் கொண்டான்' என்றார். 53

(சக்ரவர்த்தி இராமபிரானைத் தழுவியது.)

158. நலங்கொண்மைந்தனைத் தழுவினனென்பதென் னளிநீர்
நிலங்கள் தாங்குறு நிலையினை நிலையிட நினைத்தான்
விலங்கலன்னதிண் டோளையு மெய்த்திருவிருக்கும்
அலங்கன் மார்பையுந் தனது தோள் மார்புகொண் டளந்தான். 54

நலம் கொள் மைந்தனை	எல்லா நன்மைகளையுங் கொண்ட புத்திரனுகிய ஸ்ரீராமனை	விலங்கல் அன்ன திண் தோளையும்	மலைபோன்ற திடமான தோள்களையும்
தழுவினன் என்பது என்	தழுவிக் கொண்டானென்று சொல்லுவது என் கொல்?	மெய் திரு இருக்கும் அலங்கல் மார்பையும்	மெய்யே திருமகள் உறையும் பூமாலை யணிந்த மார்பையும்
நளி நீர் நிலங்கள்	கடல் சூழ்ந்த நிலவுலகங்களை	தனது தோள் மார்பு கொண்டு	தனது தோளையும் மார்பையும் (அளவு கோலாகக்) கொண்டு
தாங்குறும் நிலையினை	சுமப்பதற்குரிய நிலையை	அளந்தான்	அளவிட்டான் (தசரதன்).
நிலையிட நினைத்தான்	அளவிட்டறிய எண்ணினவனுகி (அவ்விராம பிரானுடைய)		

***—தந்தை மைந்தனைக் கண்டவாறே தழுவிக் கொள்ளுதல் இயல்பாயினும் இப்போது இராமனைத் தயரதன் தழுவியதானது 'இப்பூபாரத்தைத் தாங்குவதற்குரிய தோள்களின் பரப்பும் மார்பின் பரப்பும் உள்ளனவோ' என்று தன் தோள் மார்புகளால் அளந்து பார்ப்பதற்காகவே போலும் என்று சமத்காரம்

பொலியக் கூறினபடி. நல்லறிவு அடக்கம் பொறுமை வல்லமை மனவுறுதி முதலிய நலங்களைக் கொண்டவன் இராமன் என்று விவக்ஷித்து 'நலங்கொள் மைந்தனை' என்றது. தனது திருமார்பைத் திருமகளுக்குப் படை வீடாக்கித் தந்து ஸகலைச்வர்ய ஸம்பந்நனாய் ஸகலலோக நியந்தாவாயிருக்கும் கள்ளமாயப் பிரானுருடைய கனத்த தோள்களையும் மார்பையும், சக்கரவர்த்தி, கள்ளி கொண்டு கடலாழம் பார்ப்பாரைப் போல அளந்து பார்த்தது பிள்ளையென் றெண்ணிய பேரபிமானமே யென்று கவி வியக்கின்றமை சொற் போக்கிற் காண்க. 62

(பொதுவாக ஸத்புத்திரனைக் கொண்டாடுதல்.)

159. மன்னர் வானவரல்லர் மேல்வானவர்க்கரசாம்
பொன்னின் வார்கழற் புரந்தரன் போலியரல்லர்
பின்னு மாதவந் தொடங்கி நோன்பிழைத்தவர் பிறரார்.
சொன்மறுமகற் பெற்றவ ரருந்துயர் துறந்தார். 70

அரு துயர் துறந்தார்	நீங்குதற்கரிய துன்பத்தினின்று நீங்கினவர்கள்
மன்னர் அல்லர்	இவ்வுலகத்தரசர்களல்லர்;
வானவர் அல்லர்	தேவர்களல்லர்;
மேல் வானவர்க்கு அரசு ஆம் பொன்னின் வார் கழல் புரந்தரன் போலியர் அல்லர்	மேலும் தேவாதி ராஜனாகிய பொன் வீரக்கழலணிந்த இந்திரனைப் போன்றவருமல்லர்;
பிறர் ஆர்	வேறு யாவரென்னில்;
சொல் மறு மகன் பெற்றவர்	தஞ்சொல்லை மறுக்காத புத்திரனைப் பெற்றவர் யாவரோ அவரே யாவர்.

***—துயருற்றா ரென்று சிலரையும், துயர் துறந்தா ரென்று சிலரையும் சொல்லுகிறோம்; ஸம்ஸாரிகள் யாவரும் துயருற்றா ரெனப்படுவர்; ஸம்ஸாரிகளாயிருக்கச் செய்தேயும் ராஜாதி ராஜர்களாயிருப்பவர்களும் விண்ணவர்களும் விண்ணவர் கோமானும் மஹாதபஸ்விகளான முனிவர்களும் துயர் துறந்தவ ரெனப்படுவர்! ஆனால் இப்போது சக்ரவர்த்தி சொல்லுவது யாதெனில், தஞ்சொல் மறுக்காத மகனைப் பெற்றவர் யாவரோ அவரே துயர் துறந்தவராவர்; மற்று யாரும் எத்தனை மேம்பாடுடையராயினும் துயர் துறந்தா ரல்லர் என்பதாம். இதனால், விதேயனான புத்திரனைப் பெறுதலே ஆனந்தத்திற்கு எல்லை நிலம் என்பது தெரிவிக்கப்பட்டதாம். தன் சொல்லை இராமபிரான் சிறிதும் மறுக்காமல் ஏற்றுக் கொள்வதற்காக இது கூறியவாறு. 70

160. அனைய தாதலி னருந்துயர்ப் பெரும்பரமரசன்
வினையினென்வயின் வைத்தனனெனக் கொளல் வேண்டா
புனையுமாமுடி புனைந்திந்த நல்லறம் புரக்க
நினையவேண்டும் யான் நின்வயிற்பெறுவ தீதென்றான். 71

அனையது ஆதலின்	தந்தையரின் பாரத்தைத் தனயர் நீக்குவதே அரசகுலத்தார்க்கு முறைமையாதலால்
அரசன் அரு துயர் பெரு பரம் வினையின் என் வயின் வைத்தனன் என கொளல் வேண்டா	'சக்ரவர்த்தி, மிகத்துன்பமான பெரிய பூபாரத்தைக் கபடத்தினால் என்னிடத்தில் வைத்தான்' என்று நினைத்துக் கொள்ள வேண்டா;
புனையும் மா முடி புனைந்து	தரிக்கக் கடவதான சிறந்த கிரீடத்தைத் தரித்துக் கொண்டு
இந்த நல் அறம் புரக்க	(ராஜ்யபரிபாலனமாகிற) இந்த நல்ல தருமத்தைப் பரிபாலிக்க
நினையல் வேண்டும்	நினைப்பாயாக;
யான் நின் வயின் பெறுவது ஈது என்றான்	நான் உன்னிடத்துப் பெறத்தக்கது இதுவே யென்றான் (தசரதன்).

* **—தஞ்சொல் மறுக்காத மகனைப் பெற்றவர் யாவரோ அவரே துயர் துறந்தவர் என்று கீழ்ச் செய்யுளிற் சொல்லிற்று. உடனே இச் செய்யுளின் தொடக்கத்தில் 'அனையதாதலின்' என்றது—அப்படிப்பட்ட பாக்கியம் பெற்றமை எனக்கே யுளதாதலால் என்றவாறு. அரசாட்சி புரிவதென்பது மிகவும் சிரம ஸாத்யமாதலால் "அருந்துயர்ப் பெரும்பரம்" எனப்பட்டது. பொறுக்க முடியாத துன்பமயமான ராஜ்ய பாரத்தைத் தந்தை ஏதோ தரும வியாஜத்தினால் நம் தலையில் வைத்திட்டானென்று எண்ணாது 'அரசற்கு ஈது இன்றியமையாத் தருமமன்றோ' என்றெண்ணி இதை மேற்கொண்டு மகிழ்ந்திருக்க வேண்டுமென்றான் சக்ரவர்த்தி. 71

(தந்தை கட்டளை யென்னுங் காரணத்தினால் முடி புனைய இராமனிசைந்தது.)

161. தாதையப்பரி சுரைசெயத் தாமரைக் கண்ணன் காதலுற்றில னிகழ்ந்திலன் கடனிதென் றுணர்ந்து
யாது கொற்றவனேவிய தது செயலன்றோ நீதியெற்கென நினைந்துமப் பணிதலைநின்றான். 72

தாதை அ பரிசு உரை செய	தந்தையாகிய தசரதன் அவ் வண்ணம் சொல்ல,	இது கடன் என்றும்	பூமி பாரம் தாங்குவதாகிய விது கடமை யென்றும்
தாமரை கண்ணன்	புண்டரீகாக்ஷனான ஸ்ரீராமன்	கொற்றவன் உணர்ந்து ஏவியது யாது அது செயல் அன்றோ எற்கு நீதி என நினைந்தும்	சக்ரவர்த்தி ஆராய்ந்து கட்டளையிட்டது எதுவோ அதனைச் செய்வதல்லவா எனக்கு நியாயம் என்றெண்ணியும்
காதல் உற்றிலன்	ராஜ்யம் கிடைத்துவிட்டதென்று ஆசை கொள்ளாதவனாகியும்		
இகழ்ந்திலன்	(அரசாட்சி புரிவது அருந் துயராயிற்றே! என்று) இகழ்ச்சிகொள்ளாதவனாகியும்	அ பணி தலை நின்றான்	அக்கட்டளைக்கு உடன்பட்டிருந்தான்.

* **—அரசாட்சி புரியுஞ் செல்வம் நமக்குக் கிடைத்து விட்டது' என்று செருக்குக் கொள்ளவும் ப்ராப்தம்; 'இந்தச் சங்கடம் நமக்கேன்?' என்று அதனை இகழ்ந்து விலகிக் கொள்வதும் ப்ராப்தம். இராமபிரானுடைய மனோ விருத்தி இவ்விரு வகையிலுஞ் சேராது 'பித்ரு வாக்ய பரிபாலனம் நமக்கு உற்றது; அவருடைய கட்டளை எதுவோ அதுவே நமக்குப் பரிபாலனம் செய்யத் தக்கது' என்கிற ஒரு அத்யவஸாயமே கொண்டு உடன்பட்டு நின்றதாகக் கூறிற்று. 72

(ஸ்ரீராம பட்டாபிஷேக முணர்ந்த கௌசலையின் மன நிலை.)

162. சிறக்குஞ் செல்வம் மகற்கெனச் சிந்தையில் பிறக்கும் பேருவகைக்கடல் பெட்பற பெருமையற
வறக்குமா வடவைக்கன லானதால் துறக்கு மன்னவனென்னுந் துனுக்கமே. 93

இராமனுக்கு மகுடாபிஷேகம் நடக்கப் போகிறதென்று கேள்விப்பட்ட கௌசலைக்கு

மன்னவன் துறக்கும் என்னும் துணுக்கம்	சக்ரவர்த்தி காடு செல்வானே! என்று தோன்றிய அச்சமானது	பெட்பு அற	பெருமையற
		வறக்கும் ஆ	வற்றும்படி
மகற்கு செல்வம் சிறக்கும் என சிந்தையில் பிறக்கும் பேர் உவகை கடல்	ஸ்ரீராமனுக்கு அரசச் செல்வம் சிறக்குமென்று மனத்தில் தோன்றுகிற பெரிய சந்தோஷமாகிற கடலானது	வடவை கனல் ஆனது	பாடபாக்னியை யொத்ததாயிற்று.

* * *—திருக்குமாரனுடைய மகுடாபிஷேகச் செய்தியைக் கேள்வியுற்ற கௌசலைக்கு அபரிமிதமான மனக் களிப்பு உண்டாயிற் றெனினும், சக்ரவர்த்தி புத்திரன் தலையில் ராஜ்ய பாரத்தை வைத்திட்டுத் தான் துறப்பானோ! என்கிற சங்கையினாலுண்டாகிய அச்சத்தினால் அக்களிப்பு மிகுதிப் படாமல் அடங்கி நின்ற தென்பதாம்.

படபா என்னும் வடசொல் வடவை யெனத் திரிந்தது. இச் சொல்லுக்குப் பெண் குதிரை யென்று பெயர்; கடலில் அதிகப்படும் நீரை உறிஞ்சிப் பருகுமாறு முகத்துக் கனல் பெற்றதோர் பெண் குதிரை கடலினிடையே நிற்பதாக நூற் கொள்கை. 93

(பின் கோசலை நோன்புகள் தொடங்குதல்,)

163. நல்கி நாயக னுண்மலர்ப்பாதத்தைப் புல்லிப்போற்றி வணங்கிப் புரையிலா
மல்லன் மாளிகைக் கோயில்வலங்கொளாத் தொல்லை நோன்புகள் யாவுந் தொடங்கினாள். 99

நல்கி	பல்வகைத் தானங்களைச் செய்து	கோயில் வலம் கொளா	கோவிலைப் பிரதக்ஷிணஞ் செய்து (பிறகு)
நாயகன் நுண் மலர் பாதத்தை	குல தெய்வமான ஸ்ரீரங்கநாத விக்ரஹத்தின் அப்போதலர்ந்த தாமரை மலர் போன்ற திருவடிகளை	புரை இலா மல்லல் மாளிகை	குற்றமற்ற வளம் பொருந்திய அரண்மனையில்
புல்லி போற்றி வணங்கி	தழுவித் துதித்துச் சேவித்து	நோன்புகள் யாவும் தொடங்கினாள்	விரதங்களெல்லாவற்றையும் செய்யத் தொடங்கினாள்,

* * *—கோசலை மங்கலச் செய்தி சொன்னவர்கட்கு வெகுமதி யளித்துச் சுமித்திரையோடு ஸ்ரீமந் நாராயண மூர்த்தியின் கோயிலுக்குப் போனாளென்றும், அங்குத் திருமாலின் திருவடிகளை வணங்கிப் பெருமானிடத்து இராமனுக்குத் திருவருள் புரிய வேண்டினாளென்றும், தவசியர்க்குக் கோதானங்களும், அந்தணர்க்குப் பல்வகைத் தானங்களும், புரிந்தாளென்றும் கீழ்ச் செய்யுள்களிற் சொல்லிற்று. அங்ஙனம் தானங்கள் செய்து கோவிலைப் பிரதக்ஷிணஞ் செய்து தன் மாளிகை புக்குப் பல்வகை விரதங்களையும் அனுட்டிக்கத் தொடங்கினாளென்றது இதில். இக்குலத் துதித்த அரசர்க்கெல்லாம் முடி சூட்டுங்கால் அவ்வவர் தாய்மார் செய்து வந்த நோன்பு என்பது தோன்றத் 'தொல்லை நோன்பு' என்றார். மாளிகைக் கோயில்—அரண்மனையிலுள்ள எம்பிரான் கோயி லென்னவுமாம். ஸாக்ஷாத் நாராயண மூர்த்தியே இராமபிரானாகத் திருவவதரித் திருக்குமிடத்து வேறொரு நாராயண மூர்த்தி ஆராதிக்கப்பட்டு வந்தனனோ வென்று சங்கிக்க வேண்டா; பட்டர் ஸ்ரீரங்க ராஜஸ்தவத்தில் இதைப்பற்றி விரிவாக அருளிச் செய்கிறார்; அதில் பூர்வ சதகத்தின் முடிவு சுலோகத்தில் "ஸ்ரீரங்கேந்தோ: பதகிஸலயே.....ஹேமாம் போஜைர் நிபிட நிகடே ராமஸீதோப நீதை:" என்றும், உத்தர சதகத்தில் "ஸர்க்காப்யாஸ விசாலயா" "மநு குலமஹீபால" "மந்வந்வவாயே" என்று மூன்று சுலோகங்களு மருளிச் செய்தவை நம்முடைய விரிவுரையோடு காணத் தக்கன. 99

— மந்திரப்படலம் முற்றிற்று —

2. மந்தரை சூழ்ச்சிப்படலம்

கைகேயியின் தாதியாகிய மந்தரை யென்பவள் இராமனது மகுடாபிஷேகச் செய்தியை யுணர்ந்து எவ்விதத்திலாவது அதைக் கெடுக்க வேணுமென்று எண்ணங் கொண்டு கைகேயியின் மனத்தை வேறு படுத்திய கதையைக் கூறும்பாகம் இது. சூழ்ச்சியாவது துராலோசனை.

இப் படலத்தின் கதைச் சுருக்கம் வருமாறு:—இராமனுக்கு மகுடாபிஷேகஞ் செய்வதென்று முடிவு கொண்ட மன்னவன் அதற்குரிய நல்ல நாள் பார்க்கும்படி சோதிடர்களுக்குச் சொல்ல, அவர்களு மாராய்ந்து நாளைக்கே நல்ல நாளென்ன, பிறகு வசிட்ட முனிவனை வரவழைத்து 'மகுடாபிஷேகத்திற்கு ஏற்ற நாள் நாளைக்கேயாதலால் இராமனுக்கு முதனாட் செய்ய வேண்டிய சடங்குகளைச் செய்வீராக' என்று கூற, வசிட்டனும் இராமனிடஞ் சென்று, தன்னை வணங்கி வழிபட்ட அப்பிரானை நோக்கி 'இராம! மன்னவன் நாளைக்கு உனக்கு முடி சூட்டப் போகிறான்; ஆதலால் சில உறுதிப் பொருள் கூறுகின்றேன்' என்று சிறந்த உபதேச மொழிகள் பல கூறி, பின்பு அப்பிரானோடு ஸ்ரீமந் நாராயண மூர்த்தியின் கோயிலுக்குச் சென்று திருமஞ்சனம் முதலியன செய்து வழிபட்டுப் பிறகு இராமனுக்குச் செய்யவேண்டிய சடங்குகளையுஞ் செய்து அப்பால் மன்னவனுக்கு அறிவிக்க, சக்ரவர்த்தி நகரம் முழுவதையும் நன்கு அலங்கரிக்குமாறு பறை சாற்றித் தெரிவிக்கும்படி கட்டளை யிட்டான்; வள்ளுவர் அக் கட்டளையைப் பறைசாற்றித் தெரிவித்தனர். இராமனுக்கு மகுடாபிஷேக மஹோத்ஸவம் நாளைக்கென்று கேட்ட நகரத்து மாந்தர் யாவரும் மிகுந்த குதூஹலத்துடன் நகரத்தை யலங்கரிக்கலாயினர். இளமையில் ஒரு காரண விசேஷத்தினால் இராமன் மீது கறுவு கொண்டிருந்த கூனியானவள் நகரத்தவர்களின் குதூஹலச் செய்கைகளினால் இராமனுக்குப் பட்டாபிஷேகமா மென்றுணர்ந்து மனம் பொறாது வெதும்பி, கைகேயியின் அரண்மனைக்குச் சரேலென்று போய் மெல்லணையில் துயில் கொண்டிருந்தவளை யணுகி யெழுப்பி 'உனக்குப் பெருங்கேடு விளைவதா யிருக்கவும் இங்ஙனம் கிடந்துறங்குவது தகுதியோ?' என்று கூறி இராமனது மகுடாபிஷேகச் செய்தியை யுணர்த்த: கைகேயி மிக்க மகிழ்ச்சி கொண்டு சிறந்த தொரு ரத்ன ஹாரத்தை அந்தக் கூனிக்குப் பரிசளித்தனள். அப்போது அக் கூனி அதனை வீசி யெறிந்துவிட்டுப் பலவகைத் துர்ப் போதனைகளால் கைகேயியின் மனத்தைக் கலக்கினாள். முதலில் மந்தரையின் பேச்சுக்குச் சிறிது முடன்படா திருந்த கைகேயி பிறகு மனங் கலங்கி அவள் பேச்சுக்கு இசைந்து அவளை நோக்கி 'இப்போது யான் செய்யத் தக்கது யாது'? என்ன; 'முன்னே சம்பராசுர யுத்தத்திலே நீ உதவியதற்காக மன்னவன் உனக்கு இரு வரங்கள் கொடுத்திருப்பதாகச் சொல்லி யிருந்தாயல்லவா? அவற்றில் ஒரு வரத்தினால் இராமனைப் பதினான்கு வருடம் காட்டிற்குச் செல்லவும், மற்றொரு வரத்தினால் பரதனுக்கு முடி சூட்டவும் வேண்டுவாய்' என்று உபாயங் கூறினள். அதற்குக் கைகேயி கூனியைப் புகழ்ந்து கொண்டாடிச் சன்மானித்து அனுப்பிவிட்டுப் பின் தன்னாபரணங்களை யெல்லாங் களைந் தெறிந்து தலைவிரி கோலத்துடன் பூமியிற் புரண்ட வண்ணம் மூதேவிபோற் கிடந்தனள். என்னுமிது இப்படலத்திற் கூறிய வரலாறு. எண்பத்தெட்டு பாடல்கள் கொண்ட இப்படலத்தினின்று சில பாடல்களே கொள்ளப்படுகின்றன. 6

(இராமபிரானுக்கு வசிட்ட முனிவனது உறுதி மொழி.)

164. கரியமாலினுங் கண்ணுதலானினும். உரியதாமரை மேலுறைவானினும்
விரியும் பூதமோரைந்தினு மெய்யினும், பெரியரந்தணர் பேணுதியுள்ளத்தால், 7

அந்தணர்	வேதியர்களானவர்	விரியும் பூதம் ஓர் ஐந்தினும்	விரிகின்ற ஒப்பற்ற பஞ்ச பூதங்களைக் காட்டிலும்
கரிய மாலினும்	கரிய மேனியனான திருமாலைக் காட்டிலும்	பெரியர்	பெருமையுடையவர்களென்று கொண்டு
கண் நுதலானினும்	நெற்றிக் கண்ணனாகிய பரமசிவனைக் காட்டிலும்	உள்ளத்தால் பேணுதி	(அவ்வந்தணர்களை) நன் மனத்தோடு ஆதரிப்பாயாக.
உரிய தாமரை மேல் உறைவானினும்	கமலாஸனனான பிரமதேவனைக் காட்டிலும்		

***—நான்காம் வருணத்தில் தோன்றியவரான கம்பர் இக்காலத்தவர்களைப் போல் தாம் அந்தணர்களிடத்துப் பகைகொள்ளாதிருந்தது போல் பிற்பட்டவர்களு மிருத்தல் வேண்டுமெனக் கருதியும், ப்ராஹ்மணத்வேஷமே எல்லா வகையான கேடுகளுக்கும் மூலகாரண மென்று காட்டுவதற்காகவும் வஸிஷ்ட முனிவன் இராமனுக்கு ப்ராஹ்மண பக்தியைப் பெருஞ்செல்வமாக உபதேசித்தருளினதாக இட்டனர். விஷ்ணு சிவன் பிரமன் ஆகிய மூவரும் தாங்கள் அந்தணர்களிடத்திலே பக்தியை ஆசரித்துக் காட்டினவர்களாதலால் அம்மும்மூர்த்திகளினும் அந்தணர்களைப் பெரியாரென்று கொள்வாயாக வென்றார். 'விரியும் பூத மோரைந்து' என்றது இலக்கணையால் பாஞ்சபௌதிகமான பிரபஞ்சத்தை யுணர்த்தும்; இங்கு வடிவத்திற் பெருமை கொள்ளப்பட வேண்டும். பெருமை யென்பது வடிவத்தாலும் குணங்களாலு மாதல் அறிக. இது ஸ்ரீபாஷ்யத்தில் ப்ரஹ்ம சப்தார்த்த விவரணத்தில் நம் பாஷ்யகாரராலும் விளக்கப்பட்டதென்க. 7

(மேலும், வசிட்டன் அந்தணர்களினேற்றத்தை வற்புறுத்திக் கூறுதல்)

165. அந்தணாளர் முனியவுமாங்கவர் சிந்தையாலருள் செய்யவுந் தேவரில்
நொந்துளாரையும் நொய்துயர்ந்தாரையும் மைந்தவெண்ண வரம்பு முண்டாங்கொலோ?

மைந்த	குழந்தாய்!	நொந்து உளாரையும்	வருந்தி யிருப்பவர்களையும்
அந்தணாளர்	பிராமணர்கள்	நொய்து உயர்ந்தாரையும்	விரைவாக உயர்வு பெற்றவரையும்
முனியவும்	கோபிக்கவும்,	எண்ண வரம்பும் உண்டோ?	கணக்கிட அளவு முள்ளதோ?
அவர் சிந்தையால் அருள் செய்யவும்	அவர்கள் மனத்தால் அனுக்ரஹஞ் செய்யவும்		
தேவரில்	தேவர்களுள்		

***—கீழ்ச் செய்யுளில் தேவரைக் காட்டிலும் பெரியர் அந்தணர் என்றதனைக் காரணங் காட்டி நிலை நாட்டியது இச் செய்யுள். தேவர்களில், அந்தணர்களின் சாபத்தினல் இழிந்தோரும், அநுக்ரஹத்தினல் உயர்ந்தோரும் பலர் காணப்படுகின்றனர் என்னுமிதுவே அந்தணர்களின் ஏற்றத்திற்குக் காரணமாகக் காட்டப்பட்டதாயிற்று. 8

166. உமைக்குநாதற்கு மோங்குபுள்ளூர்திக்கும் இமைப்பிலநாட்டமொ ரெட்டுடையானுக்கும்
சமைத்த தோள்வலி தாங்கினராயினும் அமைச்சர் சொல்வழியாற்றுத லாற்றலே. 15

உமைக்குநாதற்கும்	பார்வதீபதியான சிவபிரானுக்கும்	தோள் வலி	புஜபலத்தை
ஓங்கு புள் ஊர்திகும்	உயர்த்த கருடத்வஜனை திருமாலுக்கும்	தாங்கினர் ஆயினும்	பெற்றிருந்த மன்னவரானலும்
இமைப்பு இல் நாட்டம் ஓர் எட்டு உடையானுக்கும்	இமைத்தலில்லாத ஒப்பற்ற எட்டுக் கண்களையுடைய பிரமனுக்கும்	அமைச்சர் சொல் வழி ஆற்றுதல்	மந்திரிகளின் சொற்படி காரியங்களைச் செய்தல்
சமைத்த	அமைந்ததான	ஆற்றல்	(அவர்க்கு) வலிமையைத் தருவதாகும்.

***—ராஜ்யபாரம் வஹிப்பவர்களுக்கு மந்திரிகளின் சொல்வழி நிற்றல் முக்கியமானது; ஆனல் சக்தியற்ற அரசர்களா யிருந்தால் அவர்கள் மந்திரிகளை யநுசரிக்க வேண்டும்; சிறந்த சக்திமான்களா யிருந்தால் அவர்கட்கு இது கடமையோ? என்ன வேண்டா; த்ரிமூர்த்திகள் போலத் தோள்வலி பெற்றவர்களா யிருப்பினும் அமைச்சர் சொல்வழி நிற்க வேண்டுவது அவசியமே என்றதாயிற்று. உமை—உமா என்னும் வடசொல் பார்வதிக்குப் பெயரானது. ... 15

(வசிட்டன் இராமனோடு கோயிலுக்குப் போதல்.)

167. ஏனைநீதி யினியன வையகப் போனகற்கு விளம்பிப் புலன் கொளீஇ
ஆனவன்னொடு மாயிரமௌலியான் தானநண்ணினன் தத்துவ நண்ணினான். 22

தத்துவம் நண்ணினான்	தத்வதர்சியான வஸிஷ்ட பகவான்	விளம்பி புலன் கொளீஇ	சொல்லி அறிவுறுத்தி
இனியன	இனிமையைத் தருவனவாகிய	ஆனவன் னொடும்	அவனுடன் கூட
ஏனை நீதி	இவை போன்ற பல நீதிகளை	ஆயிரம் மௌலியான்	ஸ்ரீமந்நாராயணனுடைய
வையகம் போனகற்கு	ஒருகால் உலகமுண்ட வாயனான இராமனுக்கு	தானம் நண்ணினான்	கோயிலை சேர்ந்தான்.

* * *—வசிட்ட முனிவன் இராமபிரானுக்குக் கூறின நீதி மொழிகள் பலபல உயிர்கள் மாட்டு மெய்ம்மையான அன்பு செலுத்த வேண்டுமென்றும், அவ்வன்பே அசுவமேதம் வாஜபேயம் முதலிய யாகங்களாற் பெறும் பேற்றைத் தந்திடுமென்றும், மனத்தின்கண் உவகையை வெளிப்படுத்தும் இனிய சொற்களைச் சொல்லுதல், வறியராய் ஏற்றார்க்கு மாற்றாது கொடுத்தல், தான் செய்யும் செயல்களை ஆராய்ந்து செய்தல் வேண்டுமென்றும் இனைய பல நீதிகளை யுணர்த்தினானாதலால் 'ஏனை நீதி இனியன விளம்பி' என்றார். உலகமுண்ட பெருவாயனது அவதாரமே இராமனென்று காட்ட 'வையகப் போனகற்கு' என்றார். *ஸஹஸ்ர சீர்ஷா புருஷ:* என்ற புருஷ ஸூக்தத்தை யடியொற்றி 'ஆயிர மௌலியான்' என்றார். ... 22

(மகுடாபிஷேகத்திற்கு முன்னாட் சடங்கை வசிட்டன் செய்வித்தல்.)

168. நண்ணி நாகணைவள்ளலை நான்மறைப் புண்ணியப் புனலாட் டிப் புலமையோர்
எண்ணுநல்வினை முற்றுவித்தேற்றினான் வெண்ணிறந்த தருப்பை விரித்தரோ. 23

நாகம் அணை வள்ளலை நண்ணி	சேஷ சயனனான அரங்கநாதனைச் சேர்ந்து சேவித்து	புலமையோர் எண்ணும் நல்வினை	அறிவுடையார் (அரசர்களின் சடங்கென்று) எண்ணி விதித்திருக்கின்ற சடங்குகளை
(அப்பெருமான் முன்னிலையில் இராமனை)		முற்றுவித்து	நிறைவேற்றி
நால் மறை புண்ணியம் புனல் ஆட்டி	நான்கு வேதங்களினால் மந்திரிக்கப்பட்ட புண்ணிய தீர்த்தத்தினால் நீராட்டி	வெள் நிறத்த தருப்பை விரித்து	வெண்ணிறமுடைய தர்ப்பைகளைப் பரப்பி
		ஏற்றினான்	(அவற்றில்) வீற்றிருக்கச் செய்தான் (வசிட்டன்).

* * *—ஸ்ரீமந் நாராயணனுடைய ஸன்னிதிக்குச் சென்றதாகக் கீழ்ச் செய்யுளிற் சொல்லிற்று; அப்பெருமான் ஸ்ரீரங்கநாதனே யென்று காட்டுதற்கு இதில் 'நாகணை வள்ளலை நண்ணி' என்றார். அப்பெருமான் ஸன்னிதானத்தில் இராமபிரானை நீராட்டுவித்து, பட்டங் கட்டுவோர்க்கு முன்னாள் செய்ய வேண்டிய காப்பு நாண் கட்டுதல் முதலிய சடங்குகளையும் அப்பிரானுக்குச் செய்வித்து, அவ்விராமனை உபவாஸ மிருக்கும்படி தர்ப்பாஸனத்தி லிருக்கச் சொல்லினன் வசிட்ட முனிவனென்க. இச் செய்யுளுக்கு வேறு வகையாகவும் பொருள் கூறுவர்; அதாவது- நாகணைவள்ளலை நண்ணி, வெண்ணிறத்த தருப்பை விரித்து அவற்றில் அவனை நான்மறைப் புண்ணியப் புனலாட்டி, புலமையோ ரெண்ணும் நல்வினையாகிய ஷோட சோபசாரங்களையும் முடியச் செய்து விளக்கேற்றினா னென்பதாக. ... 23

(நகரத்தவரின் பெருங் களிப்புச் செயல்)

169. ஆர்த்தனர் களித்தனராடிப் பாடினர் வேர்த்தனர் தடித்தனர் சிலிர்த்து மெய்ம்மயிர்
போர்த்தனர் மன்னனைப் புகழ்ந்து வாழ்த்தினர் தூர்த்தனர் நீணிதி சொல்லினர்க் கெலாம். 27

ஆர்த்தனர்	(நகரத்து மாந்தர்) ஆரவாரித்தனர்;
களித்தனர்	ஆனந்தித்தனர்;
ஆடி பாடினர்	கூத்தும்பாட்டு மாயினர்;
வேர்த்தனர்	உடல் வியர்த்தனர்;
தடித்தனர்	(மகிழ்ச்சியினால்) உடல் பூரித்தனர்;
மெய் மயிர் சிலிர்த்து போர்த்தனர்	உடம்பில் மயிர்க்கூச்சுக் கொண்டு மூடப்பெற்றனர்;
மன்னனை புகழ்ந்து வாழ்த்தினர்	(இராமனுக்கு முடிசூட்ட முயன்ற) சக்ரவர்த்தியைத் துதித்து வாழ்த்தினர்;
சொல்லினர்க்கு எலாம்	(இந்த மங்கலச் செய்தியைச்) சொன்னவர்களுக்கெல்லாம்
நீண் நிதி தூர்த்தனர்	நிரம்பிய திரவியத்தை வாரிக் கொடுத்தனர்.

(நகர் அலங்கரிக்கப்படுவதைக் கூனி காணுதல்.)

170. அந்நக ரணிவுறு மமலைவானவர் பொன்னகரியல்பெனப் பொலிவு மெல்வையில்
இன்னல் செயிராவண னிழைந்த தீமைபோல் துன்னருங் கொடுமனக் கூனி தோன்றினள். 39

அந்நகர் அணிவுறும் அமலை	அவ்வயோத்திமா நகரை அலங்கரிக்கின்ற பேராரவாரத்தால்
வானவர் பொன் நகர் இயல்பு என	தேவலோகத்தினது தன்மை போல
பொலியும் எல்வையில்	(அந்நகர்) விளங்குங் காலத்தில்,
இன்னல் செய் இராவணன் இழைத்த தீமை போல்	(எவ்வுலகுக்கும்) துன்பத்தைச் செய்கின்ற இராவணன் (முற்பிறப்பிற்) செய்த தீவினை (இப்பிறப்பில் ஒருருவத்தை யெடுத்துவந்தது) போல
துன்ன அரு கொடு மனம் கூனி	(பிறரால்) பெறுதற்கரிய கொடுமையை யுற்ற மனத்தையுடைய மந்தரை
தோன்றினள்	வெளிப்பட்டுப் பார்த்தாள்.

***—"ஜ்ஞாதிதாஸீ யதோஜாதா கைகேய்யாஸ் து ஸஹோஷிதா, ப்ராஸாதம் சந்த்ர ஸங்காசம் ஆருரோஹ யத்ருச்சயா."=இன்னாள் இனையாளென்னவொண்ணாதபடி எங்கேயோ தோன்றினவளும், கைகேயியின் பாங்கிமார்க்குத் தாதியும் பெரும்பாலும் கைகேயியுடனிருப்பவளுமான மந்தரை யாத்ருச்சிகமாக அரச மாளிகையின் உபரிகை மீது ஏறி, நகரம் அலங்கரிக்கப்படுவதையும் யாவருங் குதூஹலத்துடனிருப்பதையுங் கண்டு, இராமனது தாய் செல்வத்தை மிகுதியாகக் கொடுப்பதற்கும் ஜனங்கள் குதூஹலமா யிருப்பதற்கும் நகரம் அலங்கரிக்கப்படுவதற்குங் காரணம் இராம பட்டாபிஷேக மென்றறிந்து கொண்டாளென்று வான்மீகத்திலுள்ளது.

'இன்னல் செயிராவணனிழைத்த தீமை போல்' என்று கூனிக்கு உவமை கூறியதன் கருத்தாவது-இப்பொழுது மந்தரை செய்யுஞ் சூழ்ச்சியால் இராமன் நாட்டை விட்டுக் காட்டை யடைந்து ராவண ஸம்ஹாரம் செய்யப் போகிறானாதலால் அவனுடைய தீமை இவளால் ஸபலமாகின்றதென்பதாம். 'துன்னருங் கொடுமை' என்றதன் கருத்து ஒப்புயர்வில்லாத கொடுமை யென்பதாம். இராமபிரானது பட்டாபிஷேகத்தைக் கெடுப்பதற்கு எங்கிருந்தோ இந்தக் கூனி வந்தாளே! என்று வெறுப்பினால், கவி 'கூனி தோன்றினள்' என்கிறார். இராமபிரான் இராவணனைத் தொலைப்பதற்காகக் கைகேயிக்கும் ஸ்ரீராமனிடத்து மனமாறுபாடு உண்டாகுமாறு தேவதைகளே அவளை யனுப்பினார்களென்பவாதலால் அந்தத் தேவ ரஹஸ்யத்தை மனத்துட் கொண்டு 'கூனி தோன்றினள்' என்கிறார்—என்பாருமுளர். 39

(கூனி கடுங்கோபங்கொண்டு கைகேயி படுத்திருக்குமிடஞ் சேர்தல்.)

171. தொண்டைவாய்க்கேகயன் தோகை கோயின்மேல் மண்டினாள் வெகுளியின் மடித்த வாயினாள்
பண்டைநா ளிராகவன் பாணிவில்லுமிழ் உண்டையுண்டதனைத் தன்னுள்ளத் துள்ளுவாள். **41**

பண்டை நாள்	முற்காலத்தில்	வெகுளியின் மடித்த வாயினாள்	கோபத்தினால் மடிக்கப்பட்ட வாயையுடையவளுமாகி
இராகவன் பாணி வில் உமிழ் உண்டை	இராமனது கையிலுள்ள வில்லினால் வெளிப்படுத்தப்பட்ட உண்டையானது	தொண்டை வாய் கேகயன் தோகை	கொவ்வைக்கனி போன்ற அதரத்தையுடைய கைகேயியினது
உண்டதனை	மேற்பட்டதனை	கோயில் மேல்	மாளிகையில்
தன் உள்ளத்து உள்ளுவாள்	தன் மளத்தில் நினைத்து	மண்டினாள்	நெருங்கினாள்.

* * *—இராமன் இளமையில் கையிற் சிறு வில்லும் மண்ணுண்டையுங் கொண்டு குளத்தினருகே விளையாடி வருகையில், இக்கூனி குடங்கொண்டு நீர் மொண்டு மற்றுஞ்சில பெண்களோடு கூடி நடந்து செல்லுகையில் இராமன் விளையாட்டாக எய்த மண்ணுண்டை இவள் மேலே பட, அதனால் இவள் கைநெகிழ்ந்து குடம் வீழ யாவரும் சிரித்தார்களாம்; அப்போது இவள் கடுங்கோபமுற்று ராஜகுமாரனாதலால் ஒன்றுஞ் செய்ய இயலாது வாளா சென்று தனக்கு வாய்க்குந் தருணத்தை நோக்கிக் கொண்டிருந்தாளென்றும் அத்தருணம் இப்போது வாய்த்ததென்றுஞ் சொல்லுவர். இக்கதை வான்மீகத்திலில்லை; வேறு இதிஹாஸ புராணங்களில் இருப்பதாகவும் தெரியவில்லை. திருவாய்மொழியில் (1—5—5) *கூனே சிதைய வுண்டை வின்னிறத்தில் தெறித்தாய் கோவிந்தா* என்றவிடத்து வியாக்கியானத்தில் [ஈட்டில்] இக்கதை எடுத்துக் காட்டப் பட்டுள்ளது. கம்பரும் மேலே கிட்கிந்தா காண்டத்திலும் அரசியற்படலத்தில் "சிறிய ரென்றிகழ்ந்து நோவு செய்வன செய்யேல் மற்றிந், நெறியிகந்து யானோர்தீமை யிழைத்தலா லுணர்ச்சிநீண்டு, குறியதாமேனியாய கூனியால் குவவுத்தோளாய், வெறியன வெய்தி நொய்தின் வெந்துயர்க் கடலில் வீழ்ந்தேன்" என்ற செய்யுளில் இராமபிரானுடைய வாக்காகவே வைத்து இக் கதையைக் குறிப்பிட்டுள்ளார். [இச் செய்யுள் இராமன் வாலிவதமான பின்பு ஸுக்ரீவனுக்கு முடிசூட்டி அவனுக்குச் சில ஹிதோபதேசங்கள் செய்யுமடைவிலே உள்ளது. எவர் விஷயத்திலும் வலிமை நிலைகளில் எளியவரென்பது பற்றி அலக்ஷியஞ் செய்து வருத்தந் தருஞ் செயல்களைச் செய்யாதே; நான் இந்தச் சன்மார்க்கத்தின் வரம்பைக் கடந்து ஒரு தீங்கு செய்ததனாலே கூனியினிடம் கஷ்டங்களை யடைந்து துன்பக்கடலில் வீழ்ந் தேன் என்பது மேற்குறித்த செய்யுளின் கருத்து.]

தேவர்கள் தங்கள் கோரிக்கை நிறைவேறுதற்கு இராகவன் வனம்புக வேண்டுமென்று கருதிப் பட்டாபிஷேகத்தைக் கலைப்பதற்குக் கூனியை யனுப்பினார்களென்றும், அப்பிரான் சிறுபிராயத்திற் செய்த விளையாட்டுத் தொழில் ஒரு வியாஜமாகக் கூறப்பட்டதென்றும் மேலோர் கருதுவர். 140

(கைகேயியிடம் வந்த கூனி 'பேரிடர் வரவும் வருந்தாது துயிலலாமோ' வென்று கூறுதல்.)

172. அணங்குவாள் விடவரா வணுகுமெல்லையும் குணங்கெடா தொளிவிரி குளிர்வெண் திங்கள்போல்
பிணங்குவான் பேரிடர் பிடிக்க நண்ணவும் உணங்குவாயல்லைநீ உறங்குவாயென்றாள். **144**

அணங்குவாள்	துன்பஞ் செய்கின்ற வாளை யொத்த
விடம் அரா	விஷத்தையுடைய பாம்பாகிய இராகு
அணுகும் எல்லையும்	சமீபிக்கும் வரையிலும்
குணம் கெடாது	தன்மை மாருமல்
ஒளி விரி	கிரணங்களை வீசுகின்ற
குளிர் வெள் திங்கள்போல்	குளிர்ந்து வெளுத்த சந்திரன்போல.
பிணங்குவான்	வருந்தும்படி
பேர் இடர் பிணிக்க நண்ணவும்	பெருந்துன்பம் கட்ட அணுகவும்
நீ உணங்குவாய் அல்லை	(அதற்கு) நீ வருந்துவாயல்லை ;
உறங்குவாய்	அந்தோ ! தூங்குகின்ருயே !
என்ருள்	என்றிடித்துக் கூறினுள் (மந்தரை).

* * *—தன்னைப் பிடிக்க ராஹு அணுகாநிற்கச் செய்தேயும் ஒளி விரிகின்ற சந்திரன்போல, நீ செல்வமெல்லாம் இழக்க வருகின்றவிப்போதும் சிறிதும் கவலை கொள்ளாமல் பெருமகிழ்ச்சியோடு தூங்குகின்ருயே ! என்ருள் மந்தரை.

செய்யுளின் முதலிலுள்ள 'அணங்கு' என்பதைத் தனிப்பதமாகவும் அண்மை விளியாகவுங்கொண்டு 'தெய்வப்பெண்ணே !' என்று கைகேயியை விளிப்பதாகவுங் கொள்ளலாம். "சூருமணங்கும் தெய்வப்பெண்ணே" என்பது நிகண்டு. ... — 144

(கைகேயி, ஸத்புத்திரனுன இராமனிருக்கத் தனக்கு இடருண்டாகாதெனல்.)

173. பராவரும் புதல்வரைப் பயக்க யாவரும் உராவருந் துயரைவிட் டுறுதிகாண்பரால்
விராவரும் புவிக்கெலாம் வேதமேயன இராமனைப் பயந்தவெற்கு இடருண்டோ வென்ருள். **146**

பராவ அரு புதல்வரை	புகழ்வதற்கு அரிய புத்திரர்களை
பயக்க	பெறுவதனுல்
யாவரும்	எவரும்
உராவ அரு துயரம் விட்டு	வருதற்கரிய [மிக்க] துன்பத்தை நீங்கி
உறுதி காண்பர்	நன்மையை யடைவர் ;
ஆல்	ஆதலால்
விராவ வரு புவிக்கு எலாம்	பஞ்ச பூதங்களின் சேர்க்கையால் தோன்றுவதான பூமியிலெல்லாம்
வேதமே அன	வேதத்தையே யாத்துத் தோன்றுகின்ற
இராமனை	இராமபிரானை
பயந்த எற்கு	பெற்ற வெனக்கு
இடர் உண்டோ	துன்பமுளதாகுமோ ?
என்ருள்	என்று கூறினுள் (கைகேயி).

* * *—இதற்குக் கீழ்ச் செய்யுளில் 'முறை திறம்பாதவராய்ப் பெருவீரரான புதல்வர் நால்வர் [ஸ்ரீ ராமலக்ஷ்மண பரத சத்ருகநர்கள்] இருக்கையில் எனக்கு இடருண்டோ ?' என்று கூறிய கைகேயி, இச்செய்யுளில், மற்றவர்களைப்பற்றி நான் நினைக்கவேண்டியது மில்லை ; இராமபிரான் எனக்குப் புதல்வனுக இருக்கையில் எனக்குத் துயரமுண்டாகுமோ ? உண்டாகாது' எனத் தான் இராமனிடத்துப் பேரன்பு வைத்திருத்தல் தோன்றக் கூறினள். உண்மையில், கைகேயி பரதனிடத்திற் காட்டிலும் இராமனிடத்தில் மிகுந்த அன்பு கொண்டவளே ; அவ்வன்பு மந்தரையின் கலஹ வார்த்தைகளினுல் தான் பிறகு மாறியது. ... 146

(கோசலை வாழ்ச்சி பெற்றனளென்று கைகேயிக்குப் பொருமை தோன்றுமாறு மந்தரை கூறுதல்.)

174. ஆழ்ந்த பேரன்பினுள் அனைய கூறலும் சூழ்ந்த தீவினை நிகர் கூனி சொல்லுவாள்
வீழ்ந்தது நின்னலம் திருவும் வீந்தது வாழ்ந்தனள் கோசலை மதியினுலென்ருள். **147**

ஆழ்ந்த பேர் அன்பினள்	இராமனிடத்து மிகுந்த அன்பினளாகிய கைகேயி	நின் நலம் வீழ்ந்தது	'உனது நன்மை யழிந்தது ;
அனைய கூறலும்	அவ்வார்த்தைகளைச் சொன்னவளவில்	திருவும் வீந்தது	உனது செல்வமும் தொலைந்தது ;
சூழ்ந்த தீ வினை நிகர் கூனி	வளைந்துகொண்ட (அவளது) பாவத்தை யொத்த மந்தரை	கோசலை	கௌஸல்யையானவள்
		மதியினால் வாழ்ந்தனள்	தனது புத்தியினால் செல்வம் பெற்று வாழ்ந்தாள்'
சொல்லுவாள்	பேசத்தொடங்கி	என்றாள்	என்று கூறினாள்.

* * *—கைகேயி இராமனிடத்து அன்பு பொங்க அங்ஙனம் கூறியவளவில், மந்தரை, கைகேயிக்குப் பொறாமை யுண்டாக்க வேணுமென்ற கருத்தினால் அவளை நோக்கி 'உன் செல்வாக்கும் செல்வமும் ஒழிய, உன் சக்களத்தியாகிய கோசலை தன்மதியின் வல்லமையால் எல்லா நன்மையும் பெற்று விட்டாளாதலால் இனி வாழ்வாளென்று கைகேயியைத் தாழ்த்திக் கோசலை மேம்படுவதைக் குத்துப் பாடாகவெடுத்துக் கூறினளென்க. 'ஆழ்ந்த பேரன்பினள்' என்றவிடத்து விகுதி பிரித்துக்கூட்டி 'பேரன்பில் ஆழ்ந்தாள்' என்றாக்கி, மிகுந்த அன்பாகிய கடலில் ஆழ்ந்தவள் என்று உரைக்கவுமாம்.

மதியினால்—"ஸ்ம்ருதிர் வ்யதீத விஷயா மதிராகாமி கோசரா, புத்திஸ் தாத்காலிகீ ப்ரோக்தா ப்ரஜ்ஞா த்ரைகாலிகீ மதா" என்பர் வடநூலார். மேல் விளையப்போகும் நன்மையைக் கருதி முன்னாடியே தந்திரஞ் செய்தற்குறுப்பான சாதுரியம் மதியெனப்படும் திருவாய்மொழியில் (1—4—3) *மதியினாற் குறள் மாணா யுலகிரந்த கள்வற்கு* என்றவிடத்து ஈட்டில் 'மதியினால்' என்பதற்கு அருளிய விசேஷார்த்தம் காணத்தக்கது. 147

(கோசலையின் வாழ்ச்சியைக் கைகேயி பாராட்டிக் கூறுதல்.)

175. **அன்னசொ லனையவள் கூற வாயிழை மன்னவர் மன்னனேற் கணவன் மைந்தனேல்**
பன்னரும் பெரும்புகழ்ப் பரதன் பார்தனில் என்னிதன் மேலவட் கெய்தும் வாழ்வென்றாள். **148**

அனையவள்	அந்தக் கூனி	மைந்தன் பன்ன அரு பெரு புகழ் பரதன் ஏல்	புத்திரன் புகழ்தற்கரிய மிக்க கீர்த்தியையுடைய பரதனாயிருக்கும்போது,
அன்ன சொல் கூற	அந்த வார்த்தையைச் சொல்ல		
ஆயிழை	ஆபரணங்களணிந்துள்ள கைகேயியானவள்	இதன் மேல்	இதனினும் மேலாக
		அவட்கு	அந்தக் கௌஸல்யா தேவிக்கு
கணவன் மன்னவர் மன்னன் ஏல்	'கணவன் சக்ரவர்த்தியாயிருக்கும்போது	பார்தனில் எய்தும் வாழ்வு	பூ மண்டலத்தில் வரக்கடவதாகிய வாழ்வு யாது ?
		என்றாள்	என்று சொன்னாள்.

* * *—கீழ்ச் செய்யுளில் "வாழ்ந்தனள் கோசலை" என்று சொன்ன கூனிக்குக் கைகேயி கூறின மறுமாற்றமிது ; கௌஸல்யைக்குப் புதிதாக வாழ்ச்சி வரவேண்டியது என்ன இருக்கிறது ? ஒன்றுமில்லை ; ஏற்கவே நல்வாழ்வு அமைந்திருக்கின்ற தவளுக்கு ; கணவனோ சக்ரவர்த்தி ; மைந்தனோ பரதன் என்றால் இதனினும் மேலாக அவளுக்கு வரும் வாழ்வு யாது ? என்றனள். 'மைந்தன் இராமன்' என்னாது பரதன் என்று கூறியது சிறிதும் பேத புத்தியின்மையைத் திடப்படுத்த. இச் செய்யுளுக்கு வேறு வகையாகவும் சிலர் கருத்துக் கூறுவர் ;—எனக்குக் கணவனோ சக்ரவர்த்தி ; மைந்தனோ பரதன். இப்படி யிருக்க என்னினும் மேலாக அவளுக்கு வரும் வாழ்ச்சி யாது ? என்பதாக. இப்பொருளில் சுவையின்மை காண்க. 49

(கோசலைக்கு வரும் வாழ்வைக் கூனி கூறுதல்)

176. ஆடவர் நகையுற ஆண்மை மாசுறத் தாடகை யெனும் பெயர்த் தையலாள் படக்
கோடிய வரிசிலை யிராமன் கோமுடி சூடுவன் நாளை, வாழ்விதெனச் சொல்லினாள்.

ஆடவர் நகை உற	வீரர்கள் பரிஹஸிக்கவும்	கோடிய வரி சிலை இராமன்	வளைத்த கட்டமைந்த வில்லையுடைய இராமன்
		நாளை	நாளையதினம்
ஆண்மை மாசு உற	ஆண் தன்மை குற்றமடையவும்	கோ முடி சூடுவான	அரசுக்குரிய கிரீடத்தை யணிந்து கொள்வான் ;
		இது வாழ்வு	(கோசலைக்கு வரும்) வாழ்வு இதுவே ;
தாடகை எனும் பெயர் தையலாள் பட	தாடகை யென்னும் பெயரையுடைய பெண் அழியும்படி	என சொல்லினாள்	என்று கூறினாள் (கூனி).

* * *—கூனி தான் கீழே "வாழ்ந்தனள் கோசலை" என்று கூறியதை இதனால் வியாக்கியானம் செய்தாளாயிற்று. உன் மகனுக்கு ராஜ்ய ப்ராப்தியில்லாமல் அவளுடைய மகனுக்கு நாளை மகுடாபிஷேகமாகப் போகின்றதே, இதனையே நான் கோசலையின் வாழ்வாகக் கூறினேன் என்றதாயிற்று. இராமன் அபகீர்த்திக்கு இடமானவன், இரக்கமின்றித் தவறு செய்பவன் என்கிற நிந்தனை தோன்றக் கூறினள். கோடியசிலை—அநீதியாகிய தொழிலில் முயன்ற சிலை என்றுமாம். 50

(இராமனுக்கு மகுடாபிஷேக மென்கிற மகிழ்ச்சிச் செய்தியைக் கூறினதற்காகக் கைகேயி கூனிக்கு மணிமாலை யளித்தல்)

177. ஆயபே ரன்பெனு மளக்க ரார்த் தெழத் தேய்விலா முகமதி விளங்கித் தேசுறத்
தூயவ னுவகைபோய் மிகச் சுடர்க்கெலாம் நாயக மனையதோர் மாலை நல்கினாள். 52

ஆய பேர் அன்பு எனும் அளக்கர் ஆர்த்து எழ	உண்டாகிய மிகுந்த குதூஹலமாகிற கடல் ஒலித்துக் கொண்டு கிளரவும்	உவகை போய் மிக	மகிழ்ச்சி எல்லை கடந்து அதிகரிக்கவும்
		சுடர்க்கு எலாம் நாயகம் அனையது	முச்சுடர்க்கும் தலைமை பெற்றது போன்றதாகிய
தேய்வு இலா மதி முகம்	பூர்ண சந்திரன் போன்ற முகம்	ஓர் மாலை	ஒரு ரத்தின ஹாரத்தை
விளங்கி தேசு உற	தெளிந்து ஒளியடையவும்	நல்கினாள்	(மகிழ்ச்சிச் செய்தி சொன்ன மந்தரைக்குக்) கொடுத்தாள்.

* * *—இராமனுக்கு மகுடாபிஷேகமாமென்ற மகிழ்ச்சிச் செய்தியைச் செவியுற்றதனால் கைகேயிக்கு ஸந்தோஷம் உள்ளடங்காது முகத்தில் வெளித்தோன்ற, அக்கூனி சொல்லிய கொடுஞ் சொல்லைப் பொருள் படுத்தாது, ஸந்தோஷ ஸமாசாரம் சொன்னதற்காகவே ஒரு சிறந்த ரத்ன ஹாரத்தை அக்கூனிக்குக் கொடுத்தனள். முகத்தினொளி நாடோறும் வளர்ந்து வருதலே யன்றிக் குறைதலில்லையாதலால் தேய்விலாமதியை உவமை யாககினர். முச்சுடராவன—சந்திரன் ஸூரியன் அக்கினி யென்பன. இனி, சுடர் என்று துவாதசாதித்தர்களைச் சொல்லி, சுடர்க்கெலாம் நாயகமென்று ஸூரியனைச் சொல்லிற்றாகவுமாம். ... 52

(கூனி பெருவருத்த மடைந்து செய்த செயல்)

178. தெழித்தன ளுரப்பினன் சிறுக்கண் தீயுக விழிந்தனள் வைதனள் வெய்துயிர்த்தனன்
அழித்தன ளழுதன ளம்பொன்மாலையால் குழித்தனள் நிலத்தை அக்கொடிய கூனியே. 53

கொடிய அக் கூனி	கொடுந்தன்மையளான அந்த மந்தரை
தெழித்தனள்	கூச்சலிட்டாள் ;
உரப்பினள்	அதட்டினாள் ;
சிறு கண் தீ உக	சிறிய கண்களினின்றும் நெருப்புப்பொறி சிந்த
விழித்தனள்	பார்த்தாள் ;
வைதனள்	நிந்தித்தாள் ;
வெய்து உயிர்த்தனள்	வெப்பமாகப் பெருமூச் செறிந்தாள் ;
அழித்தனள்	(தன் கோலத்தைக்) கெடுத்தாள் ;
அழுதனள்	புலம்பினாள் ;
அம் பொன் மாலையால்	(கைகேயி கொடுத்த) அழகிய ஸுவர்ண ஹாரத்தினால்
நிலத்தை குழித்தனள்	பூமியைக் குழியாக்கினாள்.

* * *—எவ்வகையினாலேனும் கைகேயியைத் தன்வசப்படுத்த நினைத்த கூனி இத்தனை ஆர்ப்பாடகங்கள் செய்தாளென்க. நிலத்தைக் குழித்தன ளென்றது நிலங்குழிபடப் பொன் மாலையைத் தரையிலெறிந்தா ளென்றபடி. கீழே ரத்ன ஹாரமென்று சொல்லி இங்குப் பொன்மாலை யென்றது முரண்பாடன்று ; ரத்ன ஹாரமே யாயினும் பொன்னிற் பதித்துச் செய்யவேண்டுதலால் அதனை யிட்டுப் பொன்மாலை யென்றுஞ் சொல்லக் குறையில்லையே. 53

(கூனியின் கூற்று.)

179. வேதனைக் கூனிபின் வெகுண்டு நோக்கியே பேதைநீ பேதின்றிப் பிறந்த சேயொடு
மாதுயர் படுக, நான் நெடிதுன் மாற்றவள் தாதியர்க் காட்செயந் தரிக்கிலே னென்றாள். **54**

வேதனை கூனி	துயரத்தைச் செய்ய வந்த கூனியானவள்
பின்	பின்பு
வெகுண்டு நோக்கி	(கைகேயியைக்) கோபித்துப் பார்த்து
நீ பேதை	'நீ அறிவு கெட்டவள் ;
பேது இன்றி	(நாம் வேறு, கௌசலை வேறு என்ற) பேதபுத்தி யில்லாமையால்
பிறந்த சேயொடும்	(உன் வயிற்றில்) பிறந்த மகனாகிய பரதனோடும்
மா துயர் படுக	பெருந்துன்பமடைவாயாக,
நான்	(மானமுள்ள) நானோ வென்றால்
உன் மாற்றவள் தாதியர்கு	உனது சக்களத்தியான கௌசலையின் தாதிகளுக்கு
நெடிது	வெகுகாலம்
ஆள் செய	அடிமை செய்ய
தரிக்கிலேன்	பொறுக்கமாட்டேன்.

* * *—கூனி, கைகேயியைச் சினந்து நோக்கி 'நீ துயர்படச் சம்மதித்தாலும், கோசலையின் தாதியர்க்கு அடிமைசெய்ய நான் உடன்பட மாட்டேனென்றனள். நீ விவேக மற்றவள் ; விவேக முடையை யாயிருந்தால் 'நாம் வேறு, கௌசலை வேறு ; அவளுக்கு ஏற்றம் வந்தால் அது நமது வாழ்வுக்குக் குறைவே' என்று உண்மையுணரமாட்டாயா ? அவ்வுணர்ச்சியின்மையாலன்றோ நீ மகிழ்கிறாய் ; கௌசலையும் அவளைச் சேர்ந்தவர்களும் உன்னைத் தாழ்மைப்படுத்த நீயும் உன் மகனும் துக்க சாகரத்தில் அழுந்திக்கிடக்க வேண்டியது தவிர வேறில்லை ; நானோ வென்னில், தன் மகன் அரசு பெற்றதனால் பெருமிதங்கொண்ட கோசலையின் தாதியர்க்கு அடிமைசெய்து பிழைக்க மனம் பொறேன் என்று கூனி சொன்னது— நீ கோசலையின் தாதியர்க்கு ஆட்செய்து அலமரவேண்டியவள்காண் என்று குறிப்பித்தபடியாம். 54

(இதுவுமது)

180. சிவந்தவாய்ச் சீதையும் கரிய செம்மலும் நிவந்த வாசனத் தினிதிருப்ப நின்மகன்
அவந்தனால் வெறுநிலத் திருக்கலானபோது உவந்தவா றென்னிதற்குறுதி யாமென்றாள் **55**

சிவந்த வாய் சீதையும்	சிவந்த அதரத்தையுடைய ஸீதையும்
கரிய செம்மலும்	கருநிறமுடைய ஸ்ரீராமனும்
நிவந்த ஆசனத்து	உயர்ந்த சிங்காசனத்தில்
இனிது இருப்ப	இனிமையாக வீற்றிருக்க
நின் மகன்	உனது புதல்வனான பரதன்

அவம் தனல்	வீணுக
வெறு நிலத்து	பாழுந்தரையிலே
இருக்கல் ஆன போது	இருக்க நேர்ந்த இக்காலத்தில்
உவந்த ஆறு என்	நீ சந்தோஷித்த காரணம் யாது?
இதற்கு உறுதி யாது	இதற்கு நீ கொண்ட மனவுறுதி என்ன?
என்றாள்	என்று சொன்னாள் (கூனி).

* * *—கைகேயீ! உனக்குச் சக்களத்தியான கௌசலை உள்ளுற உன்பால் மாச்சரியமுடையவளே யாவள்; அவளுடைய மகனான இராமன் தன் மனைவியும் தானுமாகச் சீரிய சிங்காசனத்தேறி வீற்றிருக்க, அவர்கள் பாதத்தின் கீழ் வெறுந் தரையில் உன் மகன் யாதொரு பெருமையுமில்லாமல் கையைக் கட்டிக்கொண்டு நிற்கவேணுமே! இவ்வாறான நிலை நிகழ்வதாயிருக்க, அதை நானெடுத்துக் கூறவும் தெரிந்து கொள்ளாமல் மனத்தில் என்னவுறுதி கொண்டு மகிழ்கின்றாய்? என்று அதட்டிக் கூறினாள் மந்தரை. மூன்றாமடியில் அவந்தனுய் என்றும் பாடமுண்டு; அவந்தன் என்பதை அவத்தன் என்று கொண்டு அவத்யமுள்ளவனு யென்று சிலர் பொருள்கூறுவர். 55

(இதுவுமது)

181\. சரதமிப் புவியெலாம் தம்பியோடுமிவ் வரதனே காக்குமேல் வரம்பில்காலமும்
பரதனு மிளவலும் பதியினீங்கிப்போய் விரத மாதவஞ்செய விடுதல் நன்றென்றாள். 57

இ புவி எலாம்	இவ்வுலகங்களை யெல்லாம்
சரதம்	மெய்யாக
இ வரதனே	இவ்விராமனே
தம்பியோடும்	தம்பியாகிய லக்ஷ்மணனோடுங் கூடி
காக்கும் எல்	ஆளப்பெறுவனாயின்
வரம்பு இல் காலமும்	எல்லையில்லாத காலதத்வமுள்ளதனையும்
பரதனும் இளவலும்	பரதனும் அவன் தம்பியாகிய சத்துருக்கனனும் (ஆகிய இவர்களிருவரையும்)
பதியின் நீங்கி போய்	நாட்டினின்றும் விலகிச் சென்று
விரதம் மா தவம் செய	விரதங்களோடு கூடியபெரிய தபஸ்ஸைச் செய்வதற்கு
விடுதல் நன்று என்றாள்	காட்டுக்கனுப்புவதே நல்லதாகுமென்றாள்.

* * *—கைகேயீ! பரதன் வெறுந்தரையில் கைகட்டிக்கொண்டு இருக்க நேர்ந்தாலும் பாதகமில்லை; அணுகியிருக்கின்ற பரதனால் யாது நேருமோவென்று இராமன் அச்சங்கொண்டு அவனை உயிர்மாய்க்கவுங்கூடும்; அங்ஙனம் நேராதபடி பரதனைத் தம்பியோடு தவஞ்செய்யுமாறு காட்டுக்குப் போகவிடுவது நன்று என்றாள் கூனி கைகேயிக்கு ரோஷமுண்டாகும் பொருட்டு. ராமலக்ஷ்மணர்கள் ஒரு சேர்த்தியாகவும், பரத சத்ருக்னர்கள் ஒரு சேர்த்தியாகவும் நேசங்கொண்டு வாழ்ந்து வந்ததனால் 'இவ்வரதன் தம்பியோடு' என்றவிடத்து லக்ஷ்மணனையும், 'பரதனுமிளவலும்' என்றவிடத்து சத்ருக்கனனையும் கொள்ள வேண்டியதாயிற்று. 57

[இன்னமும் கூனி கைகேயியை யிடித்துக் கூறுதல்.]

182\. அரசரிற் பிறந்துபின் னரசரில்வளர்ந் தரசரிற் புகுந்துபே ரரசியானநீ
கரைசெயற் கருந்துயர்க் கடலில்வீழ்கின்றாய் உரைசெயக் கேட்கிலை யுணர்தியோவென்றாள்.61

அரசர் இல் பிறந்து	ராஜவம்சத்திலே தோன்றி
பின் அரசர் இல் வளர்ந்து	மேலும் அரச மாளிகையிலே வளர்ந்து
அரசர் இல் புகுந்து	ராஜ க்ருஹத்திலும் வாழ்க்கைப்பட்டு
பேர் அரசி ஆன நீ	பெரிய ராணியாயிருக்கின்ற நீ
கரை செயற்கு அரு	கரைகாண வொண்ணாத
துயர் கடலில் வீழ்கின்றாய்	சோக ஸாகரத்திலே விழப் போகிறாயன்றோ!;
உரை செய கேட்கிலை	நான் இதனைச் சொல்லவும் கேட்கின்றிலை;
உணர்தியோ	உனக்குணர்ச்சியுள்ளதோ? (இல்லையென்று தோன்றுகின்றது.)
என்றாள்	என்று கூறினாள் (கூனி).